October '49 Regd. No. M. 4975

மஞ்சரி

… தரிசனம் 1
வீழ்ந்த நாணய மதிப்பு . . . . . சங்கர்ஸ் வீக்லி 2
சினிமா வளர்ந்த கதை . . . . . ஸவுண்டு 11
மதியைக் கெடுக்கும் மது . . . . . ரிப்பப்ளிக் 16
அந்தப்புர விந்தைகள் . . . . . அமிர்தபஜார் பத்திரிகா 20
கார்த்திகைத் திருநாள் 27
வல்லப சம்பிரதாயம் 29
ஸ்ரீநாதர் . . . . . மாடர்ன் ரெவ்யூ 30
மறதியை ஒழிக்க வழி 33
அமெரிக்கரின் காந்தி பக்தி . . . . . பிரஜாமதம் 37
ஒலிம்பிக் விளையாட்டு . . . . . ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் 41
காலண்டர் சீர்திருத்தம் . . . . . ஹிந்து 45
பௌத்த மதத்தின் மூலம் . . . . . விசுவபாரதி க்வார்ட்டர்லி 52
'எங்கிருந்து வந்தேன்?' 57
இளம்பிள்ளை வாதம் . . . . . கர்மவீர 62
பாரத தேசத்தின் மூல புருஷன் 65

விசேஷப் பகுதிகள்

பிழையைத் திருத்துங்கள் 6
பாபுராவ் பதில் சொல்லுகிறார் 7
க்விஸ் 9
குழந்தைகள் குறும்பு 25
பரமஹம்ஸர்: வாழ்வும் வாக்கும் 48
கார்ட்டூன் கதம்பம் 60
சிறுகதை: மாம்பழம் . . . . . [illegible]குமார் 69
புத்தகச் சுருக்கம்: பேனா . . . . . [illegible]சரண குப்த 77

SERFOGI'S SARASWATHI MAHAL LIBRARY · THE · TANJORE
RECEIVED.
OCT 1949

அணா 6

சுழலும் சக்கரம்

மனதை ஒருமுகமாகக் குவியவைத்து ஆனந்தத்தைப் [illegible] விக்கிறது சர்க்கா. நாட்டின் முன்னேற்றத்துக்கு இ[illegible] யமையாக கைத்தொழிலின் அடையாளம் அது. வாசகர்களு[illegible] [illegible] 'மஞ்சரி' [illegible] வரும் அ[illegible] (அட்டைப் படம்).

'விழுந்த நாணய மதிப்பு' (பக். 2) என்ன [illegible] கும் என்பது யாருக்குத் தெரியும்? தூங்கும்போது பசி [illegible] சாப்பிட உணவு கேட்கும் பரமாத்மா 'ஸ்ரீநாதா' (பக். [illegible]) 'எங்கிருந்து வந்தேன்?' என்று குழந்தை கேட்டால் மழுப்புவது சரியா? (பக். 57) 'அந்தப்புர விந்தைகள்' (பக். 20) முன் காலத்து அரசகுமாரிகளின் வாழ்க்கைச் சித்திரம்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன் — கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனபதி — 'குமுதினி'
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி — கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி — 'ஆர்வி'
கௌரி அம்மாள் — மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி; சங்கர்; மகான்.

மஞ்சரி, தபால் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதாரர்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள். மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 2] [இதழ் 1]

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

சத்திய தரிசனம்

நான் சத்தியத்தைத் தேடிக்கொண்டிருப்பவன். அதற்கொரு வழி கண்டுபிடித்து விட்டேன். சத்தியத்தைக் காண ஓயாது முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். ஆனால், அதை நான் இன்னும் காணவில்லை என்று ஒப்புக்கொள்கிறேன்.

சத்தியத்தைப் பரிபூர்ணமாய்த் தரிசிக்க விரும்பும் ஒருவன் தன்னைத் தானே அறிந்து கொள்ள வேண்டும்; தனது முடிவான லட்சியம் என்ன என்பதையும் அறிந்துகொள்ள வேண்டும். அதாவது, குறை ஏதுமில்லாத பரிபூர்ண நிலையை அடையவேண்டும்.

என்னிடம் பல குறைகள் இருக்கின்றன என்பதைத் துயரத்தோடு நான் உணர்கிறேன். இதுவே என் பலம். ஏனென்றால், ஒரு மனிதன் தன் குறைகளைத் தானே உணர்வதுதான் மிகமிக அபூர்வம்.

—மகாத்மா காந்தி

விழுந்த நாணய மதிப்பு

புழுஜி

தனது ஸ்டர்லிங் நாணயத்துக்கு உரிய டாலர் மதிப்பில், சுமார் மூன்றிலொரு பகுதியை, பிரிட்டன் குறைத்துவிட்டது. அதை அநுசரித்து நம் ரூபாயின் டாலர் மதிப்பை அதே விகிதம் நம் சர்க்கார் குறைத்துவிட்டது. 'ஏன் இப்படிச் செய்தார்கள்? இதனால் என்ன பலன்கள் விளையும்?' என்பதைப் பலர் பலவிதமாய் வர்ணிக்கிறார்கள். இப்படிச் செய்ததற்கு முக்கிய காரணம் இதுதான்: ஸ்டர்லிங் பிரதேசங்களிலிருந்து அமெரிக்க டாலர் பிரதேசங்களுக்கு ஏற்றுமதியாகும் பொருள்களின் பணமதிப்புக் குறைவாகவும், டாலர் பிரதேசங்களிலிருந்து ஸ்டர்லிங் பிரதேசங்களுக்கு வரும் இறக்குமதிப் பொருள்களின் பணமதிப்பு அதிகமாகவும் போய்விட்டன. அதாவது, வாங்கும் சரக்குக்குச் சம மதிப்புள்ள நம் சரக்கைக் கொடுக்க முடியவில்லை. இதனால் ஏற்பட்ட நெருக்கடியைச் சமாளிக்கத்தான் இப்படி நாணய மதிப்பைக் குறைத்திருக்கிறார்கள். நம் நாட்டில் இதனால் விளையக்கூடிய நேரடியான பலன் என்ன? இங்கே அமெரிக்கச் சரக்குகளின் விலை ஒன்றுக்கு ஒன்றரையாக ஏறும்; அமெரிக்காவில் நம் சரக்குகளின் விலை மூன்றில் ஒரு பங்கு குறையும். இதனால் அமெரிக்காவுக்கு நம் ஏற்றுமதி அதிகரிப்பதுடன் இங்கே அமெரிக்கச் சரக்கு இறக்குமதி குறையலாம். இதைத் தவிர, வேறு என்ன பலன்கள் விளையும் என்பதை யாரும் திட்டமாய்ச் சொல்ல முடியாது. அதெல்லாம் நம் மக்களின் உழைப்பையும் சர்க்காரின் பொருளாதாரத் திட்டங்களையும் நிர்வாகத்தையும் பொறுத்த விஷயம். இதைக் கவனத்தில் வைத்துக்கொண்டு, இந்தக் கட்டுரையைப் படிக்கவேண்டும். இது கேலியாக இருந்தாலும், இதில் சில உண்மைகள் இருக்கின்றன.

கேள்வி: நாணய மதிப்பைக் குறைத்திருக்கிறார்களே, இதைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? இது தேசத்துக்கு நல்லதா?

பதில்: நாணய மதிப்பைக் குறைத்தார்கள் என்றவுடனே அதை நல்லது என்றோ, கெட்டது என்றோ சொல்லிவிட முடியாது. அதை அறியப் பெரிய சித்தாந்தமெல்லாம் படிக்க வேண்டும்.

கே: வாஸ்தவந்தான். ஆனால், எல்லாரும் ஏதேதோ சொல்லுகிறார்களே; நீங்களும் ஏதாவது சொல்லக் கூடாதா?

ப: சொல்லலாம். என்றாலும், பண விஷயமாச்சே என்றுதான் யோசிக்கவேண்டி யிருக்கிறது.

கே: அதைப்பற்றிப் பரவாயில்லை. ஜனங்களுக்கு என்னவாவது காரசாரமான அபிப்பிராயங்கள் தான் வேண்டும். உங்கள் அபிப்பிராயங்கள் இந்த விஷயத்திலும் அப்படித்தானே?

மூலம்: சங்கர்ஸ் வீக்லி (ஆங்கிலம்: 25-9-49), புது டில்லி.

ப: ஆஹா! சந்தேகமில்லாமல் அப்படித்தான். நம் நாணய மதிப்பைக் குறைத்துவிட்டதால், உடனே டாக்டர் மத்தாய் அவர்களிடம் ரெயில்வே இலாகாவை ஒப்படைக்க வேண்டும். இது என் அபிப்பிராயம்.

கே: இதற்கும் நாணய மதிப்பைக் குறைத்ததற்கும் என்ன சம்பந்தம்?

ப: அதுவா? சொல்லுகிறேன், கேளுங்கள். அப்படிச் செய்தால், ஸி. எச். பாபா அவர்களை மறுபடியும் ஒரு மந்திரியாக நியமித்து, அவரிடம் நிதி இலாகாவை ஒப்படைக்க வசதியாக இருக்கும். ஏனென்றால், நம் நாணய மதிப்புக் குறையப்போகிறது என்பதை முன் கூட்டியே அறிந்துகொண்ட ஒரே ஒருவர், உலகத்திலேயே அவர் தான்.

கே: அவர் மறுபடியும் மந்திரியாக வந்தால், எங்கே வசிப்பார்?

ப: அது உள்விவரம். நாணய மதிப்புக் குறைவுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. இப்படியெல்லாம் இந்த விஷயத்தை நாம் ஆராயக் கூடாது.

கே: பின்னே எப்படி ஆராய்வது?

ப: நாணய மதிப்புக் குறைந்தது என்றால் என்ன அர்த்தம்? இதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும். நாணய மதிப்புக் குறைவு பலபேருக்குப் பலவிதமான பலன்களை விளைக்கும். நம் முதலாளிகளுக்குள் அமெரிக்காவில் ஏராளமாய் டாலர் வாங்கிக் குவித்திருப்பவர்களுக்கு, இந்தியாவில் இப்போது அதிகப் பணம் கிடைக்கும். ஸ்டுடிபேக்கர் கார்களின் விலை ஏறும்.

கே: அதிருக்கட்டும்; இந்த ஸ்டுடிபேக்கர் உங்களுக்குப் பிடிக்கிறதா? அதன் மூஞ்சி மாதிரியே இருக்கிறது அதன் பின்புறமும். எனக்கென்னவோ அது பார்க்க மகா கோரமாய்த் தோன்றுகிறது.

ப: இதவும் உள்விவரந்தான். நாம் கவனிக்க வேண்டியது இது அல்ல. அமெரிக்கக் கார்களின் விலை ஏறினால், அவைகளை ஜனங்கள் வாங்க மாட்டார்கள்; பணம் மிஞ்சும். அந்தப் பணத்தை முதலாகப் போட்டு, சர்க்காக்களையோ, பிரிட்டிஷ் யந்திரக் கப்பைகளையோ அவர்கள் வாங்கிவிடுவார்கள்.

கே: ஓஹோ! அப்படியானால், நாணயமதிப்பைக் குறைத்தது மொத்தத்தில் நல்லதென்று சொல்லுங்கள்.

ப: 1931-இலும் இப்படித்தான் வேண்டுமென்றே நாணயமதிப்பைக் குறைத்தார்கள். அதன் மேல் என்ன நடந்ததென்று யாருக்குமே ஞாபகம் இல்லை. ஸ்ரீமான் டி. டி. கிருஷ்ணமாசாரிகூட அதை மறந்து விட்டார். ஆகையால், பிரத்தியட்ச சாட்சியங்களையும் நிலைமைகளையும் கொண்டே, இப்போது என்ன விளையும் என்பதை நாம் தீர்மானிக்க வேண்டும்.

கே: நீங்கள் சொல்வது முற்றும் சரி. எனவே, சேத் ஜி. டி. பிர்லாவுக்கும் உங்களுக்கும் அபிப்பிராய ஒற்றுமைதான்; இல்லையா?

ப: ஆமாம். எப்போதுமே அவருடன் எனக்கு அபிப்பிராய ஒற்றுமை தான். பிரிட்டன் அவருடன் அபிப்பிராய வேற்றுமை கொண்டது; இப்போது என்ன கதியில் இருக்கிறது பார்த்தீர்களா?

கே: என்ன கதியில் இருக்கிறது?

ப: அந்தரத்தில் இருக்கிறது. பிரிட்டனின் நாணயமதிப்புக் குறைந்தது நமக்கு ஒரு படிப்பினையாகும். பெருந் தொழில்களைச் சர்க்கார் ஏற்று நடத்துவதும், வருமான வரிகள் போடுவதும் கூடவே கூடாது என்பதுதான் அந்தப் படிப்பினை. அவைகளை ஆதரிப்பவர் என்ன வேண்டுமானாலும் சொல்லிக் கொண்டிருக்கலாம். அதைப்பற்றி நமக்கு அக்கறையில்லை.

கே: வருமானவரி ஏன் கூடாது?

ப: சர்க்கார் வருமானவரி போட்டால், தொழிலாளிகளுக்கு வேலை இல்லாமல் போய்விடும். நம் ஏற்றுமதி படுத்துவிடும். மறுபடியும் நாணய மதிப்பைக் குறைக்க வேண்டி வரும். அப்படிக் குறைத்தால், விலைவாசி ஏறுமா இறங்குமா என்று நமக்குத் தெரியாது; அதிக டாலர் கிடைக்குமா, குறைந்த டாலர் கிடைக்குமா என்றும் சொல்ல முடியாது.

கே: நமக்கு டாலர் எதற்காக?

ப: இந்தக் கேள்வியை நீங்கள் கேட்பீர்கள் என்று எனக்குத் தெரியும். பாகிஸ்தானிடம் டாலர் இருப்பதால், நமக்கும் வேண்டும்.

கே: அதனிடம் டாலர் இருப்பது உங்களுக்கு எப்படித் தெரியும்?

ப: அதற்கு டாலர் பஞ்சம் இல்லாததைக் கொண்டு தெரியும்.

கே: ஆனால், ருஷ்ய கோஷ்டியில் அல்லவா பாகிஸ்தான் சேர்ந்திருக்கிறது?

ப: இது அரசியல் சம்பந்தப்பட்ட கேள்வி. இதற்கு நான் பதில் சொல்ல இயலாது.

கே: நான் கேட்க வந்தது வேறே. பாகிஸ்தான் கைக்கொள்ளும் முறையையே நாமும் அநுசரித்து ஏன் அதிக டாலர் பெறக் கூடாது?

ப: நாம் காமன்வெல்த்துக்குள் இருப்பதால், அப்படிச் செய்ய முடியாது.

கே: காமன்வெல்த்துதான் நமக்கு உதவவில்லையே?

ப: வாஸ்தவம். ஆனால் சற்றுப் பொறுத்திருந்து பார்ப்போம். ஸ்டர்லிங் மதிப்புக் குறைந்ததால் நமக்கு ஏற்பட்டிருக்கும் நஷ்டத்துக்கு ஈடு வேண்டும் என்று ஸ்ரீமான் சுனிலால் மேஹ்தா மனுச் செய்திருக்கிறாரே, அதற்கு என்ன பதில் கிடைக்கிறது பார்க்கலாம்.

கே: அவர் என்ன ஒரு தாலுக்தாரா?

ப: நாணய மதிப்பைக் குறைப்பதற்கும் நிலச்சுவான்தாராக இருப்பதற்கும் சம்பந்தமே இல்லை. நம் நாட்டின் ஸ்டர்லிங் நிலுவைக்குரிய டாலர் மதிப்பு இப்போது நூற்றுக்கு முப்பது விகிதம் குறைந்துவிட்டது. அதற்குத்தான் நமக்குப் பிரிட்டனிடமிருந்து நஷ்ட ஈடு வேண்டும்.

கே: பிரிட்டனிடமிருந்து அதை வாங்குவதுதான் வழியா? வேறு வழி இல்லையா?

ப: இன்னொரு வழியும் இருக்கிறது. இரண்டு பேருக்குரிய கட்டணத்தை வாங்கிக்கொண்டு, மூன்று இந்தியரை ஏற்றிக் கொண்டு செல்ல, அமெரிக்க விமானக் கம்பெனிகள் சம்மதிக்க வேண்டும். சம்மதித்தால் நம் நஷ்டத்தை ஏராளமான இந்தியர் விமான சவாரி செய்வதன் மூலம் ஈடு செய்துகொள்ளலாம். இதில் மற்றொரு நன்மையும் இருக்கிறது. அமெரிக்காவுக்குப் போகும் இந்தியர்கள் அங்கேயே சாப்பிட்டுவிடுவார்கள்; அதனால் நம் நாட்டு உணவுப் பஞ்சமும் கொஞ்சம் தீரும்.

கே: நமது நாணய மதிப்பைக் குறைத்ததால் ஏற்பட்ட சிக்கல் முழுவதும் இதன் மூலம் அடியோடு தீர்ந்துவிடும் என்று சொல்லுங்கள்!

ப: முழுவதும் தீராது. பிரிட்டனின் சிக்கல் மிஞ்சியிருக்கும். இந்தச் சிக்கல் முழுவதும் அடியோடு தீர வேண்டும் என்றால் அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதாவது, பிரிட்டிஷ் சர்க்கார், இந்திய சர்க்கார் இரண்டையும் சேட்ஜீயிடம் ஒப்பித்துவிட வேண்டும்; சுதந்தரப் போட்டி நிறைந்த முதலாளித்துவ ரீதியில் அவைகளை அவர் ஆட்சி புரிவார். நாணய மதிப்பைக் குறைத்ததால் ஏற்பட்ட சிக்கலுக்கு இதுதான் உண்மையான பரிகாரம்.

கே: பிரிட்டிஷ் சர்க்கார் ஏன் இப்படிச் செய்யவில்லை?

ப: ஏனென்றால், ஸ்ரீமான் பிர்லாவை ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸுக்குப் பிடிக்கவில்லை; அதனால்தான்.

கே: இரண்டு பேரும் சைவ உணவுக்காரர்களாச்சே?

ப: சைவ உணவுக்காரர்களுக்குள் அபிப்பிராய வேற்றுமை இராதென்று நினைக்கிறீர்களா? அப்படி நினைப்பது தவறு.

கே: அப்படியானால் விமோசனத்துக்கே இடமில்லை என்பது உங்கள் கருத்தா?

ப: ஆமாம். நிலைமை மகா மோசம். ஆனால், எல்லாரும் ஒற்றுமையாய் உழைத்தால், விமோசனம் கிடைக்கலாம்.

கே: என்ன உழைப்பு?

ப: சகலவித உழைப்புந்தான்.

கே: ஆகவே, நாணய மதிப்பைக் குறைத்ததால் தொல்லை தீர்ந்துவிடவில்லை என்கிறீர்கள்?

ப: நான் அப்படிச் சொல்லமாட்டேன். தொல்லை தீரும் கட்டத்துக்கு நாம் வந்துவிட்டோம். ஆனால், அது நம்மை விட்டு நீங்கித் தீரவில்லை. இதுதான் விஷயம்.

கே: மொத்தத்தில் இந்த நாணய மதிப்பைக் குறைத்தது அநாவசியம் என்று ஏற்படுகிறது.

ப: நான் சொன்னதற்குத் தப்பர்த்தம் செய்கிறீர்கள். அது முற்றும் அவசியம். ஏனென்றால், பிரிட்டிஷ் ஸ்டர்லிங்குடன் நமது ரூபாய் பிணைந்திருக்கிறது.

கே: அந்தப் பிணைப்பை நாம் அறுத்துக்கொண்டால் என்ன?

ப: அப்போது நம் நாட்டில் பிரிட்டிஷார் போட்டிருக்கும் பணமெல்லாம் பறந்தோடிவிடுமே!

கே: ஓடட்டுமே?

ப: உங்களுக்கு விஷயம் தெரியாது. இது பெரிய விஷயம்.

தன்னைப் போலவே

நமது தற்பெருமை நமக்குத் தெரிகிறது. ஆனால், பிறருக்கு அது கிடையாது போல் அவர்களிடம் நாம் நடந்துகொள்கிறோம்.

—ரெவ்யூ டி பாரிஸ்

பிழையைத் திருத்துங்கள்

கீழே உள்ள ஒவ்வொரு பகுதியிலும் எழுத்து, சொல், பொருள், வாக்கியப் பிழை ஏதாவது ஒன்று இருக்கும். அதைக் கண்டு பிடித்துத் திருத்துங்கள்:

1. மலரினில், நீலவானில், மாதரார் முகத்தில் எல்லாம் இலகிய அழகின் காந்தம் மன இரும்பை இழுத்து ரஸிகனுடைய கற்பனையைக் கிளரச் செய்கிறது.

2. தாயார் எவ்வளவு அன்போடு குழந்தையைப் பார்ப்பாளோ அவ்வளவு அன்போடு ரஸிகன் கலைப்பொருளைக் கண்டு மகிழ்ந்து போற்றிப் பூரிக்கிறான்.

3. புரட்சி உள்ளம் படைத்தவனுக்கு உண்டாகும் வேகமும் பறபறப்பும் வெளிப்படையாகத் தோற்றும்; ஆனால் ரஸிகனுடைய இன்ப அநுபவம் உள்ளத்தினூடே பரவி ஆழ்ந்து நிற்கும்.

4. ஆடையிலே படிந்த கரை போலவும் பாத்திரத்திலே விழுந்த கீறல் போலவும் ரஸிகனுடைய உள்ளத்தில், அழகைக் குலைப்பவர்களின் செயல்கள் துன்பவடுவை உண்டாக்குகின்றன.

5. அப்பரும் சுந்தரரும் சந்தித்து அளவளாவியபொழுது அவர்களுடைய உள்ளத்திலே உண்டான அன்புணர்ச்சியை வகுத்துரைக்க வல்லவர் யார்?

6. ஆவடையார் கோயில் என்று வழங்கும் திருப் பெருந்துறையில் குருந்த மரத்தின் நிழலில் குருமூர்த்தியைக் கண்ட அளவில் மாணிக்கவாசகர் திருவுள்ளத்தில் பொங்கலிட்ட மகிழ்ச்சியைத்தான் உரையினால் வரையறுத்துக் கூற முடியுமா?

7. கண்ட சர்க்கரை, தேங்காய்ப் பால், திராட்சை, கற்கண்டு, தேன், பாகு எல்லாம் கலந்தாற் போன்ற சுவை ததும்பும் இனிய கவிகளைச் சுவைக்கும்போது ரஸிகன் தன்னையே மறந்துவிடுகிறான்.

8. சங்ககாலத்தில் தமிழ் நாட்டிலிருந்து வெளிநாடுகளுக்கு மிளகு, மிளகாய், அரிசி முதலிய பண்டங்கள் ஏற்றுமதியாயின.

9. ஜவாஹர்லால்நேரு சமீபத்தில் அமெரிக்காவுக்குப் போகும்போது, ஐக்கிய அமெரிக்காவின் பெரிய நகரங்களாகிய வாஷிங்டன், நியூ யார்க், ஒட்டாவா என்னும் இடங்களில் பிரசங்கம் செய்வார்.

10. முதல் முதலாக விஜய லக்ஷ்மி பண்டித் அமெரிக்காவுக்குப் போனபோது ஐ. நா. சபையின் இந்தியப் பிரதிநிதியாகச் சென்று தென்னாப்பிரிகாவில் நடைபெறும் அக்கிரமங்களை வெளிப்படுத்தினாள்.

11. ஜின்னா ஸாஹேபின் இஸ்லாமியப்பற்றும் இஸ்லாம் மதத்தினரின் வளர்ச்சியில் அபிமானமும் யாரும் அறிந்தவை. அவருடைய நெருங்கிய உறவினர்களில் முக்கியமானவர்கள் இஸ்லாம் மதப்பற்றைப் பரம்பரையாக உடையவர்கள்.

12. ஜைனர்களின் வேதமாகிய திரிபிடகத்தைத் திபேத்திலும் ஜப்பானிலுங்கூடக் காணலாம்.

[திருத்தம் 10-ஆம் பக்கத்தில்]

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

இந்திய ஸினிமாப் பத்திரிகை உலகத்திலே ஒரு புரட்சி உண்டாக்கியவர் பாபுராவ். வழவழவென்ற ஆர்ட் காகிதத்தில், சுடச் சுட ஸினிமா விஷயங்களை எழுதுகிறார். 'பிலிமிண்டியா'வில் கேள்விகளுக்கு அவர் எழுதிவரும் பதில்கள் நகைச்சுவையும் விறுவிறுப்பும் மிகுந்திருக்கின்றன. ஸினிமாபற்றி மட்டுமல்ல; வேறு விஷயங்கள்பற்றியும் அருமையாகப் பதில் தருகிறார்..

கேள்வி: குழந்தை என்பது யாது?

பதில்: கசக்கப்பட்ட மலரின் மணம்.

* * *

கே: கடவுளுக்கு எது நிவேதனம்?

ப: சாதுக்களின் புண்ணியமும் பாபிகளின் பயமும்.

* * *

கே: மதாபிமானம் இல்லாமல் ஒழுக்கமுள்ளவனாக இருப்பது சாத்தியமா?

ப: ஒழுக்கமுள்ளவனாக இருப்பதே மதாபிமானம். ஒழுக்க விதிகள் சட்டமாக உறைந்து போனதே மதம்.

* * *

கே: வறுமையும் நோயும் ஏன் சேர்ந்தே இருக்கின்றன?

ப: வியாதியின் உணவு பசி; பசியோ வறுமையின் குழந்தை.

* * *

கே: ஒரு படத்தில் ஒலிப்பதிவு செய்கிறவருக்கு எவ்வளவு தூரம் அதில் பொறுப்பு உண்டு?

ப: அவர் குயிலைக் காக்கையாக்கலாம்; சிங்கத்தைச் சுண்டெலியாக்கலாம்.

கே: நாளை விஷயத்தில் நீங்கள் என்ன பண்ணுகிறீர்கள்?

ப: அதை விதிக்கு விட்டுவிட்டு இன்றை விஷயத்துக்காக உழைத்துக்கொண்டிருக்கிறேன்.

* * *

கே: தென்னிந்தியர்கள் ஏன் புராணப் படங்களையே எடுக்கிறார்கள்?

ப: பழங்குப்பையைக் கிளறத்தான் அவர்களால் முடியும்.

* * *

கே: வெற்றி என் விலாசத்தை மறந்துவிட்டது. நான் என்ன செய்வது?

ப: உங்கள் வீட்டு வாசலில் கொண்டு வந்து கொடுப்பதற்கு வெற்றி தபால்காரனல்ல. கஷ்ட உழைப்பு வீதியின் கடைசியில் இருக்கும் பாங்கி அது; நீங்களே அங்கே ஓடிப்போய் வேண்டியதைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

* * *

கே: காதற் புன்னகைக்கும் போர்வாளுக்கும் என்ன வித்தியாசம்?

ப: ஒன்று நம்மை மஞ்சத்தில் தள்ளுகிறது; மற்றொன்று மயானத்தில் தள்ளுகிறது.

காப்பிரைட்: பிலிமிண்டியா (ஆங்கிலம்: ஆகஸ்ட் '49), பம்பாய்.

கே: அயலானுடைய நிழல் ஒரு பெண்மணியின் கற்புக்கு மாசு உண்டாக்குமென்று நீங்கள் நினைக்கிறீர்களா?

ப: அந்த நிழலுக்கு ஆசை என்ற நாற்றம் இருந்தால், மாசு தான்.

* * *

கே: பால்ய விதவைக்கு உபமானம் எது?

ப: பாதி எரிந்த திரி.

* * *

கே: உங்கள் மனைவியோடு சண்டை போட்டுக்கொண்டால், ஹோட்டலில் சாப்பிடுவதுண்டா?

ப: நான் எப்போதும் வீட்டில் சண்டை போடுவதே இல்லை. வெளியிலே உண்டாகும் புண்களை ஆற்றிக்கொள்ள வீட்டுக்கு வருகிறேன்.

* * *

கே: என் ஜனங்கள் இன்னும் கண்மூடித்தனமாகக் காங்கிரஸையே பின்பற்றுகிறார்கள்?

ப: அவர்கள் தங்கள் கண்களை அகல விரித்தால் பின்பற்றுவதற்கு வேறு ஒன்றும் காண்பதில்லை. ஆகையால் மறுபடியும் கண்களை மூடிக்கொண்டு காங்கிரஸையே பின்பற்றுகிறார்கள்.

* * *

கே: காலேஜ் பெண்ணுக்கு மின்சாரத்தை உபமானமாகச் சொல்லலாமா?

ப: அவள் வீட்டுக்கு விளக்கம் தந்தால் சொல்லலாம்.

* * *

கே: ஹிந்துக்களின் கலைப்பண்பு எது?

ப: முன்பு பகைவர்களாக இருந்தவர்களை விருந்தினராக ஏற்று உபசரிப்பதும் அவர்களுடன் சேர்ந்து வாழ்வதும்.

கே: தெய்வத்தை நம்புவது பலவீனத்துக்கு அடையாளமா?

ப: இல்லை; பலத்துக்கல்லவா அடையாளம்? தான் தனியாக இல்லையென்றும் கடவுளுடைய பாதுகாப்பில் இருக்கிறானென்றும் ஒருவன் உணர்ந்தால் அவனுடைய உலகில் தேவலோக ஒளி வீசும்.

* * *

கே: ஆண் நர்ஸுகளைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: வியாதிக்குரிய அறிகுறிகளில் மற்றொன்று.

* * *

கே: சாதாரணப் பெண்மணி சாதாரண மனிதனைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால் என்ன நடக்கும்?

ப: சாதாரண இந்தியன் பிறப்பான்.

* * *

கே: கூட்டம் நெரிக்கும் மூன்றாவது வகுப்பு வண்டிக்கும் நம்முடைய அரசியல் நிர்ணய சபைக்கும் என்ன வித்தியாசம்?

ப: எவ்வளவு அசௌகரியமாக இருந்தாலும் மூன்றாவது வகுப்பு வண்டி நம்மை ஒரு குறிப்பிட்ட இடத்துக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறதே!

* * *

கே: இந்தியாவின் பெண்களுக்குக் கல்யாணம் அவசியமா?

ப: அவசியம் என்பது அல்ல; அது இயற்கையானது.

* * *

கே: பத்திரிகைத் தொழிலில் பெண்கள் முன்னுக்கு வர முடியுமா?

ப: பேனாவுக்கு ஆண் பெண் என்ற வித்தியாசம் இல்லை. பெண்கள் அதை நன்றாக உபயோகிக்கலாம்.

செய்தி:

1. சென்ற ஆகஸ்ட் மாதத்தில் இந்தியாவுக்கு உலக பாங்கி அநுமதித்த டாலர் கடன் (அ) 720 லட்சம், (ஆ) 340 லட்சம், (இ) 225 லட்சம் - இந்தத் தொகைகளில் எது?

2. ஹைதராபாதில் காஸிம் ரஜ்வி வழக்கு விசாரணையைக் கோர்ட்டில் ப்ராஸிக்யூஷன் தரப்பார் எந்தத் தேதியில் தொடங்கினார்கள்?

விஞ்ஞானம்:

1. ஒரு கோபுரத்தின் உச்சியிலிருந்து கனமான வஸ்து ஒன்று கீழே விழ 3 செகண்டு நேரமாயிற்று. அப்படியானால் அந்தக் கோபுரத்தின் உயரம் என்ன?

2. ஒரு 'ஹார்ஸ் பவர்' என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்களே (அ) இந்த அளவு என்ன? (ஆ) இதை யார், எப்போது நிர்ணயித்தார்?

பொது:

(அ) ரெயிலிலுள்ள அபாய அறிவிப்புச் சங்கிலியை இழுத்தால் வண்டி நிற்கிறதே அது எப்படி? (ஆ) சங்கிலியை இன்ன பெட்டியில் உள்ளவர்கள் தான் இழுத்தார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா, முடியாதா? என்?

யுக்தி:

புராதன ரோம் நகரில் ஒரு வழக்கம் உண்டு. மரணதண்டனை விதித்தவனைச் சிங்கத்தின் கூண்டுக்குள் தள்ளிவிடுவார்கள். ஆனால் அப்படித் தள்ளுவதற்கு முன், சீட்டுக் குலுக்கிப் போடுவார்கள். ஒரு முறை ஒருவன் மரணதண்டனை அடைந்தபோது நீதிபதி இப்படி இரண்டு சீட்டுக்களைக் குலுக்கிப் போட்டார். கைதியை பார்த்து, "ஒன்றில், 'தள்ளு' என்றும், மற்றதில், 'தள்ளாதே' என்றும் எழுதியிருக்கிறது. 'தள்ளு' என்ற சீட்டை நீ எடுத்தால் உன்னைக் கூண்டில் தள்ளிவிடுவோம். 'தள்ளாதே' என்பதை எடுத்தால் உன்னை விட்டுவிடுவோம். இரண்டில் ஒன்றை எடு" என்றார் நீதிபதி. இதில் ஒரு சூது எப்போதும் நடப்பது வழக்கம். இரண்டு சீட்டிலும் 'தள்ளு' என்றே எழுதியிருப்பார்கள். இது எப்படியோ அந்தக் கைதிக்கு முன்னதாகவே தெரிந்துவிட்டது. அவன் இரண்டில் ஒரு சீட்டை எடுக்கத்தான் எடுத்தான். என்றாலும் அதிலும் ஒரு தந்திரம் செய்து தப்பித்துக்கொண்டான். ஆனால் வேறு மாற்றுச் சீட்டுத் தயாரிக்கவோ ஒளித்து வைத்துக் கொள்ளவோ அவனுக்கு எந்தவித வசதியும் கிடையாது. போட்ட இரண்டு சீட்டில் ஒன்றை எடுத்ததன் மூலமே அவன் தப்பித்துக்கொண்டான். அவன் என்ன தந்திரம் செய்தான்? கண்டு பிடியுங்கள்.

[விடை: பக்கம்-15]

இதுதான் பிழை

[6-ஆம் பக்கத்தில் உள்ள வாசகத்தை நீங்களே திருத்திப் பார்க்குமுன் இதைப் படிக்க வேண்டாம்.]

1. அழகாகிய காந்தம் என்று இருக்கவேண்டும். மனத்தை இரும்பாக உருவகம் செய்வதற்கேற்ப அழகைக் காந்தமாக உருவகம் செய்வதே எழுதுபவர் கருத்து. ஆனால் ஆங்கிலத்தில் இத்தகைய உருவகங்களில் ஆறும் வேற்றுமை உருபை உபயோகப்படுத்துவதை நினைத்துச் சிலர் தமிழில் ஆகிய என்ற சொல்லைச் சேர்க்காமல் இன் என்ற சாரியையைச் சேர்த்து எழுதுகிறார்கள். அது தவறு.

2. தாயார் என்பது பன்மை; பார்ப்பாள் என்பது ஒருமை. ஆகவே, தாய் என்றிருப்பதே பொருத்தம்.

3. பரபரப்பு என்பதே சரியான சொல். பறத்தலுக்கும் பரபரப்புக்கும் சம்பந்தம் இல்லை.

4. ஆடையிலே செசவில் ஓரத்தில் அமைக்கிறதுதான் கரை. அழுக்கினால் ஏற்படுவது கறை; கரை அன்று.

5. சுந்தரர் காலத்துக்கு முந்தியவர் அப்பர். இருவரும் இந்த உலகத்தில் சந்திப்பது சாத்தியமா?

6. ஆவுடையார் கோயில் என்பதே சரியான தொடர். திருப்பெருந்துறையில் சிவலிங்கம் இல்லை. ஆவுடையாரென்று சொல்லும் பீடம் மாத்திரம் இருக்கிறது. அதனால் அதற்கு ஆவுடையார் கோயில் என்ற பெயர் வழங்குகிறது.

7. கண்ட சர்க்கரை என்பது கற்கண்டுக்கு வழங்கும் வேறுபெயர். இரண்டும் வெவ்வேறு பொருளல்ல.

8. சங்ககாலத்தில் மிளகும் அரிசியும் ஏற்றுமதி ஆயின; ஆனால் மிளகாய் ஏற்றுமதி ஆக நியாயம் இல்லை. அந்தக் காலத்தில் இந்தியாவில் மிளகாயே வரவில்லை. தென் அமெரிக்காவில் உள்ள சிலி என்ற பகுதியிலிருந்து பின்னால் வந்த பொருள் அது.

9. ஒட்டாவா ஐக்கிய அமெரிக்காவில் இல்லை. அது கானடாவைச் சேர்ந்தது.

10. விஜயலக்ஷ்மி பண்டித் முதல் முதலாக அமெரிக்காவுக்கு உத்தியோக தோரணையில் போகவில்லை. தனியே சென்று ஐ. நா. சபைக்கு வெளியே தென்னாப்பிரிகாவின் நிலையை அம்பலப்படுத்தினார்.

11. ஜின்னா ஸாஹேபின் நெருங்கிய உறவினர்களில் சிலர் பரம்பரையாக இஸ்லாமியர் அல்ல. அவர் மனைவி பார்ஸி மாது; அவர் மாப்பிள்ளையும் பார்ஸி வகுப்பினர்.

12. திரிபிடகம் ஜைனர்களின் வேதம் அல்ல; பௌத்தர்களின் மதநூல்.

அசையும் படத்திலிருந்து பேசும் படம் வரைக்கும் தாம் பெற்ற அநுபவத்தை எழுதுகிறார் ஒரு நடிகர்.

சினிமா வளர்ந்த கதை

கோர்ஷித் டோண்டி

சினிமா உலகில் இருபது வருஷம் என்றால் கேட்க வேண்டுமோ? என்ன என்ன ஞாபகமெல்லாம் உண்டாகின்றன!

பல வருஷங்களுக்கு முன் நடந்தது: எனக்கு அப்போது பதினெட்டு வயதுதான். வயதுக்குமேல் உயரமாகவும் பருமனாகவும இருப்பேன். ஒரு பழைய கொட்டகையில் இன்னும் சிலரோடு இரண்டணா கொடுத்துவிட்டுத் தரையில் உட்கார்ந்துகொண்டேன். ஹைதராபாதில் முதல் முதல் கட்டிய சினிமாக் கொட்டகைகளில் ஒன்று அது.

அந்த நாளில் பெற்றோர்கள் பிள்ளைகளைச் சினிமாவுககுச் செல்ல அநுமதிக்கமாட்டார்கள். காற்று வாங்கப்போவதாகப் பொய் சொல்லி வீட்டைவிட்டு மெல்ல நழுவினேன். திரையில் அப்படியே நிஜ மனிதர்கள்போல் தெரிந்த உருவங்களையும் அவர்கள் நடிப்பையும் பார்த்துத் திகைத்துவிட்டேன். நான் அன்று பார்த்த படம் 'விசுவ மோகினி.' கணவனுக்கும் மனைவிக்கும் நடுவே பெண் ஒருத்தி வருகிறாள். அது சாதாரண சமூகக்கதை. கதையில் முக்கிய நடிகையாக இருந்த மிஸ் கோஹரின் அழகும் இனிய பார்வையும் என் உள்ளத்தை அப்படியே கவர்ந்தவிட்டன. வழக்கம்

போல் தீமை யொழிந்து நன்மை வெற்றிபெற்றதாகக் கதை முடிந்தது. கதையில் துன்புற்று வருந்திய மனைவியாக நடித்த மிஸ் கோஹர் முடிவில் சுகம் அடைந்ததைக் கண்டு எனககு ஏற்பட்ட ஆனந்தத்துக்கு எல்லையே இல்லை. சந்தோஷ மிகுதியில் கொட்டிக் கொட்டிக் கை வலி எடுத்துவிட்டது.

ஹிமாம்சு ராய் புத்தராக நடித்த 'ஆசிய ஜோதி'யையும் 'ஷிராஜ்' என்ற படத்தையும் நான் பார்க்க முடியவில்லை. அதில் 'ஷிராஜ்' சோகக் கதை. மொகலாயச் சக்கரவர்த்தி ஷாஜஹான், தன் அருமை மனைவியின் ஞாபகார்த்தமாகத் தாஜ்மஹாலைக் கட்டுவதும் அதன் மாதிரியைச் சிருஷ்டித்த ஷிராஜின் கண்ணை அதற்கு வெகுமதியாக அபகரிப்பதும் உள்ளத்தை உருக்கும் காட்சிகள். அதில் மும்தாஜ் மஹலாகச் சீதா தேவி என்ற அழகி நடித்திருந்

காப்பிரைட்: ஸவுண்டு (ஆங்கிலம்: ஆகஸ்ட் '49), பம்பாய்.

தாள். இன்னுங்கூட எவ்வளவோ நடிகைகள் மும்தாஜாக நடித்து வருகிறார்கள். நான் வேறு எவ்வளவோ படங்களும் பார்த்திருக்கிறேன். அவைகளில் 'ஸ்டண்ட்' படங்கள் என்று சொல்கிறோமே, அவையும் உண்டு. அந்த மாதிரி படங்களில் கதாநாயகன் ஓடியாடிப் பலவிதமான சாகஸச் செயல்கள் புரிவான்; அவைதான் என்னைப்போன்ற இளைஞர்களின் மனத்தைக் கவரும். அந்த நாளில் 'இந்திய பேர்பாங்க்ஸ்' என்று பெயர் வாங்கிய மாஸ்டர் விட்டல் என்ற நடிகர்தான் எல்லாருக்கும் மிகவும் பிடித்தவர்.

நான் சினிமா உலகில் சேர்ந்து எப்படி ஒரு நட்சத்திரமானேன் என்பது ஒரு பழங்கதை: 1929-இல் உத்தியோகம் வேண்டிப் பம்பாய்க்கு வந்தவன். சினிமா காமிராக்காரன் ஒருவனுக்கு உதவியாக அமர்ந்தேன். கொஞ்ச காலத்துக்கெல்லாம் சினிமா நடிகனாகவும் மாறினேன்.

அந்த நாளில் படம் எடுப்பதென்றால் இந்தக் காலத்தைப் போல் அதிகச் சிரமம் இல்லை. ஊரில் படக் கம்பெனிகளே மிகவும் குறைவு. அப்போது பம்பாயில் ஸ்தாபித்த கம்பெனிகளில் ஜோதி ஸ்டுடியோவும் ரஞ்சித் ஸ்டுடியோவும் இன்னும் இருக்கின்றன. சாரதா, கிருஷ்ணா, கோஹினூர் என்பவை மறைந்துவிட்டன.

படம் எடுப்பவர்கள், தியேட்டரில் காட்டுபவர்கள், தியேட்டர்களுக்கு விநியோகம் செய்பவர்கள் என்றெல்லாம் பிரிவினை அந்தக் காலத்தில் இல்லை. படம் எடுக்கும் கம்பெனியே எல்லாவற்றையும் கவனித்து வந்தது. படம் ஓடும் தியேட்டர்கூடக் கம்பெனிக்குச் சொந்தமானதாகவே இருக்கும்.

இந்தக் காலத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால் சினிமா சாதனங்கள் அந்தக் காலத்தில் மிகவும் குறைவே. 'சினிமா ஸ்டுடியோ' என்பது நாடக மேடைபோல் இருக்கும். மேலே ஒரு மஸ்லின் படுதா. வெயில் படவேண்டும் என்றால் படுதாவை எடுத்து விடலாம். படம் எடுப்பதற்கு வேண்டிய கருவிகள் கையாண்டு நைந்து போன ஒரு காமிராவும் பிரதிபலிக்கும் 'ரிப்ளெக்டர்' என்ற சாதனமுந்தான். மின்சார அமைப்போ, ஆர்க் விளக்கோ, பிளட்லைட்டோ ஒன்றும் கிடையாது. எல்லாம் சமயத்துக்குத் தகுந்தாற்போல் பார்த்துக்கொள்ள வேண்டியது; அவ்வளவுதான்.

நடிகர்களின் 'மேக்அப்'புக்கென்று தனி அறை இல்லை. ஒரு பாத்திரத்தில் முகவர்ணம், பௌடர் டப்பா, பௌடர் ஒத்தும் பஞ்சு, பல்தேய்க்கும் பிரஷ் இவ்வளவுதான் இருக்கும். இதை முக்கிய நடிகர், சில்லறை நடிகர் எல்லாரும் உபயோகித்துக் கொள்வார்கள். 'மேக்அப்'பும் ஒருவருக்கொருவர் செய்துகொள்ள வேண்டியதுதான். நாம் ஒருவருடைய முகத்தில் வர்ணம் பூசினால்

அவர் நம் தாடி மீசைகளையெல்லாம் சரிப்படுத்தி விடுவார். இந்தக் காலத்தைப்போல் முகத்துக்கு வேண்டிய உயர்ந்த க்ரீம், லோஷன் எதுவுமே கிடையாது. ஸ்டுடியோ நாவிதன் என்று ஒருவன் இருப்பான். அவன்தான் மிகவும் முக்கியமான பேர்வழி. பெரிய நடிகர் முதல் சில்லறை ஆசாமி வரை எல்லாருக்கும் அவன்தான் க்ஷவரம் செய்வான்.

ஸ்டுடியோவிலோ டைரக்டர் தான் ராஜா. எல்லாப் பொறுப்பும் அவருடையதே. அவர் பார்க்காத வேலை இல்லை. கதை எழுதுவது, அதை வேண்டியபடி திருத்தி அமைப்பது, வேஷங்களுக்கு வேண்டிய உடைகள், இன்னும் என்ன என்ன தேவைகள் உண்டோ இந்த எல்லாவற்றையுமே கவனித்துக் கொள்வது அவருடைய பொறுப்பு. காமிராக்காரன் ஒருவன் மட்டுமே அவருக்கு ஒத்தாசை. மற்றவர்கள் எல்லாரும் வேலைப் பழக்கம் சிறிதும் இல்லாதவர்கள். படத்துக்கென்று கதை எழுதுவதில்லை; டைரக்டர் மனத்தில் தோன்றிய படிதான் கதை.

படம் எடுப்பதற்கு வேண்டிய வசதி எதுவும் அந்தக் காலத்தில் கிடையாது. தெரு மூலைக்கோ வீட்டுக் கூரைமேலோ எங்கே வேண்டுமானாலும் காமிராவை எடுத்துக்கொண்டு போகலாம். இயற்கையாய் அமைந்த இடங்களிலேயே இருந்து, படம் எடுக்கச் சௌகரியமாயிருக்கும். இப்போதுள்ள பேசும் படங்களில் இந்தச் சௌகரியத்தை நாம் காண முடியாது. பேசும் படங்களில் ஒலியைத்தான் முக்கியமாகக் கவனிக்கிறார்கள்.

சாதாரணமாய் நான்கு அல்லது ஆறு வாரங்களில் ஒரு படம் எடுத்து முடிந்துவிடும். இரண்டாந் தரப் படம் ஒன்று எடுப்பதற்குப் பதினையிரம் ரூபாய்கூடச் செலவாகாது. ஆனால் இன்று அந்தமாதிரி படம் எடுப்பதற்கோ இரண்டு அல்லது மூன்றுலட்ச ரூபாய் பிடிக்கிறது.

ஸ்டுடியோவில் சில்லறைப் பாகங்களை நடிக்கும் ஆட்களுக்கு மாதச் சம்பளமாகப் பேசி வைத்துக் கொள்வார்கள். பெரிய நடிகர்களுக்குக்கூட மாதம் 35 ரூபாய் கொடுப்பதென்றால் உயர்ந்த சம்பளம் என்று எண்ணிய காலம் அது. பொழுது விடிந்தது முதல் அஸ்தமிக்கும் வரையில் வேலை இருக்கும். பகல் வேளையில் சாப்பிடுவதற்குக் கூடச் சிறிது நேரம் ஓய்வு கிடைக்காது. கிடைத்த நேரத்தில் ஏதாவது இரண்டு சப்பாத்தி தின்று விட்டு ஓடி வரவேண்டும்.

படித்தவர்கள் படம் எடுப்பதைக் கௌரவமான தொழிலாக மதிக்காத காலம் அது. என்றாலும், பழைய சலனப் படத்தில் மனத்தைக் கவரும் ஏதோ ஒருவித சக்தி இருந்தது என்றுதான் சொல்ல வேண்டும். ஒற்றுமையான ஏக குடும்பம்போல் சந்தோஷமாய் நாங்கள் வேலை செய்வோம். வேலை

நிறுத்தம் என்ற பேச்சே இராது. அவ்வளவு ஒத்துழைப்பும் சந்தோஷமும் எங்களுக்குள் நிலவும்.

சினிமாப் படம் என்பது ஒரு கலைச் சிருஷ்டிதானே; அதில் ஈடுபடுகிறவர்கள் பரஸ்பரம் அன்போடு பழக வேண்டும். இந்தக் காலத்தில் அதுதான் மிகவும் அருமை! நடிப்பைக் காட்டிலும் அழகுதான் அந்த நாளில் முக்கியம். ரூபாய் இருநூறிலிருந்து நானூறு வரையிலும் இந்தச் சினிமா நட்சத்திரங்கள் மாதச் சம்பளம் பெற்று வந்தார்கள். அப்போது சினிமாவிலுள்ளவர்கள் எல்லாருமே இந்தக் காலத்தைவிட அதிக நாணயமுள்ளவர்கள். ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்தி வந்தார்கள். சுலோசனு என்ற நடிகையும் பில்லி மோரியா என்ற நடிகருந்தான் சொந்தத்தில் கார் வைத்துக்கொண்டிருந்தார்கள்.

சலனப் படம் ஓடிய நாளில் படம் பார்க்கப் போவதே ஒரு தனி அநுபவம். இந்தியாவிலே மொத்தம் 300 அல்லது 400 தியேட்டர்கள் இருக்கும். எல்லாத் தியேட்டர்களும் பழைய கட்டிடங்கள். நாற்காலிகளும் சோபாக்களும் ஒடிந்துபோய், உட்கார்ந்தால் ஆடும். படம் காட்டும் ப்ரொஜக்டர் ஒன்றே ஒன்றுதான். இரண்டு ரீல் ஓடிய பிறகு நின்றுவிடும். கடைசி வகுப்பு ஆசனம் என்பது வெறுந் தரைதான். இந்த நாளைப் போல் அந்த நாளிலும் படம் 2 அல்லது $2\frac{1}{2}$ மணி நேரம் ஓடும். நான்கு வாரம் சேர்ந்தாற்போல் படம் ஓடினல் அது மிகவும் வெற்றிகரமான படம் என்று அர்த்தம் - இருபத்தைந்து வாரம் ஓடினல் இப்போது 'வெள்ளி விழா' கொண்டாடுகிறார்களே அதைப்போல. படம் ஓடிக்கொண்டிருக்கும்போதுகூட உள்ளே ஒருவரையொருவர் கூப்பிட்டுக் கொண்டும் பேசிக்கொண்டும் இருப்பார்கள். தபலாவையும் ஆர்மோனியத்தையும் பின்னணி ஸங்கீதமாக வாசிப்பார்கள். ஒரு வித மெட்டில் வாசிக்கவேண்டிய சமயத்தில் வேறு வித மெட்டில்தான் வாசிப்பார்கள். எல்லாம் சேர்ந்து ஒரே இரைச்சலாகத் தோன்றும்.

படிக்கத் தெரியாதவர்களுக்காகத் திரையில் எழுதியிருப்பதை இரைந்து படிக்க ஒருவன் இருப்பான். சலனப்படம் ஓடிய நாளில் எளிய தொழிலாளிகள்தான் சாதாரணமாய்ப் படம் பார்க்க வருவார்கள். இப்படி இரைந்து சொல்வது படிக்கத் தெரிந்தவர்களுக்கு எவ்வளவு கஷ்டமாக இருந்திருக்கும்? படிக்கத் தெரியாதவன் பக்கத்தில் இருந்தால் கேட்க வேண்டியதில்லை; திரையில் என்ன எழுதியிருக்கிறது என்று படித்துச் சொல்லும்படி நம்மை நச்சரித்து விடுவான். இந்த நாளில் பேசும் படம் பார்ப்பவர்கள் சும்மா இராமல் விளக்கியும் குறை கூறியும் ஏதாவது பேசினல் பக்கத்தில் இருப்பவர்களுக்கு ஒரே எரிச்சலாக வருகிறதல்லவா? இந்த மாதிரி பேசுபவர்கள் அந்தக் காலத்துச் சலனப் படத்தை மிகவும் ரசித்திருப்பார்கள்.

அப்போது புராண சமூக சம்பந்தமான கதைகளைத்தான் பெரும்பாலும் படம் எடுத்து வந்தார்கள். குடியினல் வரும் தீமைகளும் விபசாரமும் சமூகக் கதைக்கு விஷயங்கள். சரித்திரத்தில், நிகழ்ந்ததே மறுபடியும் நிகழும் என்பார்கள். சினிமா விஷயத்திலும் அப்படித்தான். பொது மக்களுக்குப் பிடிக்கிறது என்ற காரணத்தால், படம் எடுப்பவர்கள்

முதலில் புராணக் கதைகளைத்தான் படம் பிடிக்கிறார்கள். இதற்குப் பிறகு, சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்ட படங்கள்; அதன் பின் 'ஸ்டண்ட்' படங்கள். கடைசியில் தான் சமூகப் படங்கள்.

ஏதாவது ஒரு படம் வெற்றிகரமாய் இருந்துவிட்டால் அவ்வளவு தான்; மற்றவர்கள் அதைக் 'காபி' அடித்து விடுவார்கள். இன்றும் அந்தப் பழக்கம் இருந்துதான் வருகிறது.

கோஹினூர் கம்பெனியார் முதலில் 'பாரிஸ்டரின் மனைவி' என்ற சமூகப் படத்தை எடுத்தார்கள். சில நாளைக்கெல்லாம் அதை ஜகதீஷ் பிலிம்காரர்களும் ரஞ்சித் மூவிடோன் கம்பனியாரும் அப்படியே 'காபி' அடித்துவிட்டார்கள்.

'ஹீர் ரஞ்ஜா' என்ற காதல் கதையை முதல் முதல் இம்பீரியல் ஸ்டுடியோவில் எடுத்தார்கள். அதற்குப் பிறகு அதுவே சலனப் படமாகவும் பேசும் படமாகவும் எவ்வளவோ தடவை வந்தாகிவிட்டது. 'ரோமியோவும் ஜூலியட்டும்', 'பிருதிவிராஜன் சம்யுக்தை' போன்ற கதைகளைத் திரும்பத் திரும்பக் கணக்கில்லாமல் எடுத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவைகளே மறுபடியும் டெக்னிகலர் படமாக வருகின்றன. இனி டெலிவிஷன் படங்களாகவும் அவை வரலாம் என்று தோன்றுகிறது.

க்விஸ் விடை

செய்தி: (1) 340 லட்சம். (2) 1949 ஆகஸ்ட் 16.

விஞ்ஞானம்: (1) 144 அடி. ஆகாயத்திலிருந்து பூமியில் ஒரு வஸ்து விழுவதற்கு எத்தனை செகண்டு பிடிக்கிறதோ அந்த எண்ணின் வர்க்கத்தைப் பதினாறினால் பெருக்கினால் அந்தத் தூரம் தெரியும். அதாவது, செகண்டு 3 என்றால், 16×3×3; 4 என்றால் 16×4×4; 8 என்றால் 16×8×8 — இப்படியே பெருக்கி, அடியைக் கண்டுபிடிக்க வேண்டும். (2) (அ) 33 ஆயிரம் பவுண்டு நிறையை ஒரு ஜாதி அடி உயரத்துக்கு ஒரு நிமிஷத்தில் தூக்கக்கூடிய சக்தி. (ஆ) ஸ்டீம் எஞ்சினைக் கண்டுபிடித்த ஜேம்ஸ் வாட்; 1783-இல்.

போது: (அ) சங்கிலியை இழுத்தவுடனே அதனால் சிறிது காற்று விடுபட்டு எஞ்சினில் உள்ள 'வாக்குவம் பிரேக்'கில் நுழைகிறது. எஞ்சினின் வேகம் சிறிது குறைந்து, அதிலுள்ள ஒரு டயலும் டிரைவருக்கு எச்சரிக்கை செய்கிறது. அவன் வண்டியை நிறுத்துகிறான். (ஆ) முடியும். இழுத்த பெட்டியின் கோடியில் கை வெளியே நீட்டிக்கொள்ளும்.

யுக்தி: கைதி ஒரு சீட்டை எடுத்து உடனே அதைக் கிழித்து வாயில் போட்டு மென்று விழுங்கிவிட்டான். "அதில் என்ன எழுதியிருக்கிறது என்று படிப்பதற்குமுன் அதைத் தொலைத்துவிட்டாயே" என்றார் நீதிபதி. "எனக்கு வேண்டியதை நான் எடுத்துக்கொண்டேன். மற்றதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்" என்றான் கைதி.

மதியைக் கெடுக்கும் மது

பி. ஜி. கேர்

> 'பெருங் குடிதான் அபாயம்; மிதக் குடி அபாயம் அல்ல' என்பது சிலர் கட்சி; அதையும் அழுத்தமாகக் கண்டிக்கிறார் பம்பாய்ப் பிரதமர் கேர்.

"குடிப்பவர்களின் எண்ணிக்கை என்ன அப்படிப் பிரமாதம்? பார்க்கப் போனால், குடியர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் மிகவும் குறைவுதானே? அப்படியிருக்கும்போது சர்க்கார் வீணே அவர்களைப்பற்றி மண்டையை உடைத்துக்கொண்டு கள்ளுக்கடை வரியிலிருந்து வசூலிக்கும் ஏராளமான வரும்படியை இழப்பானேன்? இதைக் காட்டிலும் மக்கள் அருந்தும் பானங்களின்மீது அதிக வரியைப் போடலாமே; இதனால் அவற்றின் விலை ஏறும். அப்போது குடிக்க விரும்புகிறவர்கள் அதிகப் பணம் கொடுத்து அவைகளை வாங்குவார்கள்; அது சர்க்காருக்கு லாபந்தானே?" என்றெல்லாம் சிலர் பேசுகிறார்கள். 'தனி மனிதனின் சுதந்தரத்தில் சர்க்கார் தலையிடுவதா?' என்பது அவர்கள் கட்சி.

"மிதமாய்க் குடிப்பதில் என்ன தவறு? அதை எதற்காகச் சர்க்கார் ஆட்சேபிக்க வேண்டும்?" என்று அவர்கள் வாதிக்கிறார்கள். இது அவர்களுக்கு மிகவும் நியாயமாகவே தோன்றுகிறது.

தனிமனிதனின் சுதந்தரம் என்பதெல்லாம் கிடக்கட்டும். நான் அதைப்பற்றி ஒன்றும் அதிகமாகச் சொல்லப்போவதில்லை. 'ஒரு நாளில் இவ்வளவு மணி நேரந்தான் வேலை செய்யவேண்டும்; இந்த மாதிரியான உணவு இந்த அளவுதான் சாப்பிட வேண்டும்' என்று திட்டமிடுவதுடன் தங்கள் கல்வி, பொழுது போக்கு, ஓய்வு நேரம் இவைகளைக்கூடச் சர்க்கார் நிர்ணயிப்பதைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொள்ளுகிறார்களே இந்த மனிதர்கள்; நாளடைவில் சிறுகச் சிறுக விஷத்தை அருந்தி உயிரை மாய்த்துக்கொள்ளும் இந்த ஒப்பற்ற சுதந்தரத்தைப் பறித்தால்மட்டும் இவர்கள் ஒரே அடியாய்ச் சண்டைக்கு வருவானேன்? அதுதான் ஆச்சரியமாயிருக்கிறது. இந்த விஷயத்தைப்பற்றிச் சிந்தனை செய்ய விரும்புகிறவர்கள், "மக்கள் ஏன் குடிக்கிறார்கள்? அவர்களுக்கு எப்படி இந்தப் பழக்கம் ஏற்படுகிறது?" என்பதையெல்லாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

குளிர் நடுக்கும் மேல் நாடுகளில், போதையை உண்டாக்கும் பானங்கள் சுலபமாய்ப் பழக்கமாகிவிடுகின்றன. அநேக நூற்றாண்டுகளாக அங்கே வேண்டுமென்றே குடிக்கப் பழகியிருக்கிறார்கள். குடியோ, சுருட்டோ எப்படிப் பழக்கமாயிற்று என்று அங்கே யாரையாவது கேட்டால் வியோ டால்ஸ்டாய் கூறியது போல், "ஏதோ உற்சாக

மூலம்: ரிபப்ளிக் (ஆங்கிலம்: 4-9-'49), சென்னை.

மாய்ச் சிறிதுநேரம் பொழுது போகவேண்டும் அல்லவா, அதற்காகத்தான்'' என்று பதில் கிடைக்கும். நாகரிகம் என்பதற்காகவே பெரும்பாலோர் ஒவ்வொன்றையும் செய்ய விரும்புகிறார்கள். 'எல்லாரும் செய்வதை நாமும் செய்ய வேண்டும்' - இதுதான் அவர்கள் எண்ணம். நம்மை ஆண்ட ஆங்கிலேயர்கள் நீண்ட காலமாகக் குடிப் பழக்கம் உள்ளவர்கள். அவர்கள் இந்தியாவில் பதவியும் செல்வாக்கும் வகித்திருக்கும் போது உற்சாகமாய்த் தங்கள் குடிப் பழக்கத்தை இன்னும் விருத்தி செய்துகொண்டார்கள். சமூகத்திலும் அதைப் பெரிய நாகரிகமாய் எண்ணினார்கள். மேல் நாட்டாரின் வாழ்க்கையில் நமக்கு மோகம் ஏற்பட்டது. படித்தவர்கள் சிலபேர் உடை, உணவு முதலியவற்றில் அவர்களைப் பின்பற்றினார்கள்; அதோடு குடிப் பழக்கத்தையும் கற்றுக்கொண்டார்கள். என்னுடன் சர்வகலாசாலையில் படித்து வக்கீலான மூன்று நண்பர்கள் தினமும் மாலை நேரத்தில் குடிக்கிறார்கள். காரணம், நாகரிகமுள்ளவர்கள் எல்லாரும் குடிக்கிறார்களாம்!

எல்லாரும் குடிக்கிறார்கள் என்பதற்காக அவர்கள் குடித்தாலும் அதில் வேறொரு முக்கிய காரணமும் இருக்கிறது. 'மனிதர்கள் ஏன் இந்தக் குடி மயக்கத்தை விரும்புகிறார்கள்?' என்று டால்ஸ்டாய் ஒரு சிறு கட்டுரை எழுதியிருக்கிறார். அதைப் படித்தால் அந்தக் காரணம் நமக்குத் தெளிவாக விளங்கும்.

"மனச்சாட்சி தம்மைத் தொந்தரவு செய்யாதிருக்கவேண்டும் என்பதற்காகவே குடிக்கிறார்கள்" என்று அவர் சொல்லுகிறார். அதைச் சாதிப்பதற்கு இரண்டு விதமான வழிகள் உண்டாம். ஒன்று: மனச்சாட்சியின் குரலுக்குச் செவி சாய்க்காமல் மனத்தை வேறு விஷயங்களில் செலுத்த முயலுவது. மற்றொரு வழி: மனச்சாட்சியையே தலை கிளப்பவொட்டாமல் செய்து விடுவது. வாழ்க்கைக்கும் மனச்சாட்சிக்கும் ஒத்து வராமல் இருக்கும்போது அதைக் கவனிக்காமல் மனத்தை வேறு விஷயத்தில் செலுத்த முடியாது; நம் மனச்சாட்சிக்கு ஏற்ற விதத்தில் நாம் வாழ்க்கை நடத்தவில்லை. நம் வாழ்க்கையை மாற்றி நாம் சரியான வழியில் நடப்பதற்கு வேண்டிய மனோதைரியம் நமக்கு இல்லாதிருக்கும்போதுதான், மனச்சாட்சியையே மழுங்க வைக்கும் இந்தக் குடிப் பழக்கத்தைக் கைக்கொள்ளுகிறோம். 'பொழுது போகவில்லை' என்றும், 'சிறிது நேரம் உற்சாகமாக இருக்கலாம்' என்றும் சொல்லும் காரணமெல்லாம் பெரிதல்ல; தங்கள் மனச்சாட்சியை அடக்குவதற்காகவே ஜனங்கள் குடிக்கிறார்கள் என்பதுதான் டால்ஸ்டாயின் கருத்து. மிதமாய்க் குடிப்பதைப்பற்றியும் அவர் சொல்லியிருக்கிறார்: "அபினியும் கஞ்சாவும் தின்பதால் விளையும் தீமை எப்படிப்பட்டதென்று நமக்குத் தெரியும். அப்படியேதான் சாராயம் போன்ற லாகிரி வஸ்துக்களைக் குடிப்பதும்; பயங்கரமான தீமை இவற்றாலும் நேருகிறது. இது எல்லாரும் அறிந்ததே! அப்படியிருந்தும் படித்தவர்கள் என்று பெயர் வைத்துக்கொண்டு, 'ஒயின், பீர், சுருட்டு இவற்றை மிதமாய் உபயோகிப்பதால் ஒரு கெடுதியும் இல்லை' என்று எண்ணிக்கொள்கிறார்களே; இந்த மனப்பான்மை காரணமாகச் சமூகத்துக்கு ஏற்படும்

தீமை கணக்கிட முடியாதது'' என்கிறார். 'மிதமாய் உபயோகித்தால் உண்மையில் ஒரு கெடுதியும் நேருவதில்லை' என்றுதான் சாதாரணமாய் எல்லாரும் நினைக்கிறார்கள். "என்னைப் பாருங்கள். எவ்வளவோ வருஷங்களாகத் தவறாமல் குடித்துக்கொண்டிருக்கிறேன். அப்படியிருந்தும் என் தேக ஆரோக்கியத்துக்கு ஒன்றும் குறைவில்லையே'' என்று வேறு சொல்லுகிறார்கள்!

ஆகவே, அவர்கள் சாப்பிடுமுன் ஒவ்வொரு வேளையும் ருஷியா தேசத்து வாட்கா கொஞ்சம், பிரெஞ்சு ஒயினோ, இங்கிலாந்து போர்ட் ஒயினோ, அல்லது சீனர்கள் உபயோகிக்கும் அபினியோ கொஞ்சம் சாப்பிடுவது, அதோடு சுருட்டும் குடிப்பது இதையெல்லாம் ஏதோ சற்று நேரம் உற்சாகமாக இருப்பதற்காகச் செய்கிறார்களாம்! மற்றப்படி அவை தங்கள் மனச்சாட்சியை எந்த விதத்திலும் பாதிப்பதாக அவர்கள் எண்ணுவதில்லை.

குடித்து மயங்கியவுடன், திருட்டோ, கொலையோ போன்ற குற்றங்கள் செய்யாமல், குடி மயக்கத்தில் புரியும் சில்லறை அசட்டுக் காரியத்தோடு நின்றுவிட்டால், அது ஏதோ குடியினால் விளையாமல் தானே விளைந்தது போல் எண்ணிக் கொள்ளுகிறார்கள். சட்ட விரோதமான குற்றங்கள் ஒன்றும் செய்யவில்லையென்றால், அவர்கள் மனச்சாட்சியைப்பற்றிக் கவலை இல்லை; அப்படிக் குடிப்பவர்கள் நேர் வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று கூட எல்லாரும் எண்ணிவிடுகிறார்கள். தினந்தோறும் தவறாமல் குடித்தாலும், மிதமாய்க் குடித்தால் குடி மயக்கம் ஏற்படுவதில்லை யென்று வேறு சொல்லுகிறார்கள்! போகப் போகக் குடிப்பதிலுள்ள தீமை இதனால் வெளிப்படையாகத் தெரிவதில்லை; என்றாலும் இது ஜனசமூகம் முழுவதையுமே பாதிக்கிறது என்பதில் சந்தேகமில்லை. இப்படிச் சிறிது சிறிதாகச் சேர்ந்து முடிவில் பெருந் தீங்கு விளைகிறது. உலகம் முழுவதுமே இப்போது எவ்வளவு கெட்டுப்போய்க் கிடக்கிறது! "பெரும்பான்மையான மக்கள் குடிவகை, சுருட்டு இவற்றை உபயோகிக்கிறார்கள். அவர்கள் மனம், உடல் இரண்டையுமே அவை கெடுத்துவிடுகின்றன. அதனால்தான் உலகில் பெரும்பாலும் சண்டைகளும் சச்சரவுகளும் விளைகின்றன'' என்று டால்ஸ்டாய் சொல்லுகிறார். நானும் டால்ஸ்டாய் 'போல,' உலகில் எல்லாக் கெடுதிகளும் குடியினால்தான் உண்டாகின்றன; ஆகவே, அதை அடியோடு ஒழிக்க வேண்டும்' என்று சொல்லப்போவதில்லை. இந்தியாவில் கௌரவமாக வாழ விரும்பினவர்களெல்லாம் இத்தத் தீய பழக்கத்தை ஏற்கனவே விட்டுத் தொலைத்தார்களே! அப்படியிருக்க இப்போது மறுபடியும் நாம் அந்தப் பழக்கத்தைக் கொண்டு வருவானேன்?

"இதிலிருந்து மக்கள் விடுதலை பெற்றால் அது உலகத்துக்கே க்ஷேமம். அந்த நன்னாள் சீக்கிரத்திலேயே வந்து விடும் என்று தோன்றுகிறது. குடியினால் விளையும் கேடு என்ன என்பது எல்லாருக்கும் ஒருவாறு புரிந்துவிட்டது'' என்று 1800 - இலேயே டால்ஸ்டாய் தம் கட்டுரையில் எழுதியிருக்கிறார். எளிய ஜனங்களிடையே இந்தக் கெட்ட பழக்கம் நன்றாய்ப் பதிந்த பிறகு

தான் மேல்வகுப்பார் இதைக் கவனித்துச் சீர்திருத்த வருகிறார்கள் என்பதுதான் அவர் குறை.

இந்தியாவின் சமூகச் சீர்திருத்தத்தில் மிகவும் சிரத்தையுள்ளவர்களான நாம் இந்த விஷயத்தில் கவனம் செலுத்த வேண்டியது மிகவும் அவசியம். குடியினால் விளையும் தீமைகளையும் சரி, மிதமாய்க் குடித்தால் ஏற்படக் கூடிய கெடுதிகளையும் சரி ஒழித்தே தீரவேண்டும். இல்லாவிட்டால் கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல் ஆகிவிடும். அமெரிக்காவில் இதை ஒழிக்க எவ்வளவோ பாடுபட்டார்களே; ஏன் முடியாமல் போயிற்று? அங்கே குடிப்பழக்கம் அதிகமாக வேரூன்றிப் போனதனால்தான். இங்கே அதை நாம் வளரவிட்டாலும் அதே மாதிரி ஆகிவிடும். இப்போதே நாம் முயற்சி எடுத்துக் கொள்ளாவிட்டால் நமக்குப் பின் தலைமுறையைச் சேர்ந்தவர்கள் நாம் சரியாய் வழிகாட்டவில்லையென்று நிச்சயமாய் நம்மைச் சபிப்பார்கள்.

சாரணர் சேவை

மூன்று வாலிபச் சாரணர்களை, "நீங்கள் இன்று செய்த நல்ல காரியம் என்ன?" என்று சாரண உபாத்தியாயர் கேட்டார்.

"வண்டி போக்குவரத்து மும்முரமாக இருந்த நடு ரோட்டின் ஒரு பக்கத்தில் நின்ற ஒரு கூனல் கிழவியை நாங்கள் மூன்று பேரும் மறுபக்கத்தில் கொண்டு போய்ச் சேர்த்தோம்."

"பேஷ்! நல்ல காரியந்தான், ஆனால், இதைச் செய்ய மூன்று பேர் ஏன்?"

"ஏன் என்று கேட்டால், அந்தக் கிழவி ஒரேயடியாக 'வரமாட்டேன்' என்று சண்டித்தனம் செய்தாள்; அதனால் தான்" என்று அந்தச் சாரணர்கள் விளக்கினார்கள்.

—கெர்மிட் கெல்லி

சட்ட நிபுணர்கள் இருக்கும் இடம்

நரகத்துக்கும் சொர்க்கத்துக்கும் நடுவிலே ஒரு வேலி போட்டிருந்தார்கள். அந்த வேலியில் சிறிது பழுது ஏற்பட்டது.

நரகத்தின் அதிபதி சொர்க்க லோகத்துக்கு ஒரு சீட்டு அனுப்பினான். "சட்ட நிபுணர்களிடம் ஆலோசனை கேட்டோம். செப்பனிடும் பொறுப்பு உங்களைச் சேர்ந்ததாம்" என்று அதில் தெரிவித்தான்.

"இங்கே சட்ட நிபுணர்களின் ஆலோசனை கிடைக்கவில்லை. ஆகவே, வேலியைச் செப்பனிட்டு விடுகிறோம்" என்று சொர்க்கத்திலிருந்து பதில் வந்தது.

—கிளாஸ்கோ ஹெரால்டு

அந்தப்புர விந்தைகள்

பத்மினி ஸேன்குப்த

ஹிந்துக்களுடைய அந்தப்புரத்துக்கும் முஸ்லிம்களுடைய ஜனானாவுக்கும் எப்போதுமே தெளிவான வேற்றுமை இருந்து வருகிறது. முஸ்லிம்கள் வருவதற்கு முன் புராதன இந்தியாவில் பெண்களுக்குக் கோஷாவும் ஜனானாவும் இல்லை. "அந்த நாட்களில் சமூகத்தில் பெண்களுக்குரிய ஸ்தானத்தையும் அந்தஸ்தையும் யாரும் தடுக்கவில்லை. அவர்களைத் தனியாக வைக்கவேண்டும், அவர்களுக்குக் கல்வியறிவு புகட்டக் கூடாது என்றெல்லாம் எந்தக் கட்டுப்பாடும் கிடையாது" என்று ரமேசசந்திர தத்தர் சொல்லுகிறார்.

'டில்லித் துருக்கர் செய்த வழக்கமடா' என்று கோஷா முறையைப் பாரதியார் பாடியது வெறும் கதை அல்ல; சரித்திர உண்மை. அந்தப்புரம, ஜனானா இரண்டின் வரலாற்றையும் இங்கே காணலாம்.

ஸால்டோர் என்பவர், குப்தர்களுடைய காலத்தைப்பற்றிக் கூறும்போது, "அடக்கம், நாணம் இவற்றின் சின்னமாக முகத்தில் திரையிட்டுக்கொள்வது வழக்கத்தில் இருந்தது. பெண்களுக்கு வேண்டிய அளவு சுதந்தரம் இருந்தது. பொதுவாழ்வில் அவர்கள் கலந்துகொள்ளக் கூடாது என்ற கட்டுப்பாடு இல்லை. அவர்கள் புனலாடுவார்கள்; கல்யாணங்களுக்குச் செல்வார்கள்; கழனிகளுக்கும் போவார்கள்; கலைகளில் தேர்ச்சி பெற்று நீதி மன்றத்திலும் அமர்வார்கள். காளிதாஸனுடைய காவியங்களில் இதற்குச் சான்று இருக்கிறது. ஆகவே, பெண்களைத் தனியே வைப்பதற்கு அறிகுறியாக கோஷா முறை என்பது பழக்கத்தில் இல்லை. ஆனால் குடும்ப வாழ்க்கையில் கணவனுக்கு மனைவியிடம் சர்வ அதிகாரமும் இருந்தது" என்று குறிப்பிடுகிறார்.

இன்னும் சில பெரிய குடும்பங்களில் இருப்பது போல, அந்தக் காலத்திலும் சில மாளிகைகளில் பெண்களுக்குச் சொந்தத்தில் தனி இடம் இருந்தது. அங்கே அவர்கள் கோஷாக்களாக இல்லாவிட்டாலும் வெளியுலகத் தொடர்பு இல்லாமல் குடும்ப சம்பந்தமான பொறுப்புகளுடனும் இல்லறக் கடமைகளுடனுமே திருப்தி அடைந்து விடுவார்கள். நிவேதிதா தேவி கூறுவதைப்போல் குடும்பத்தில் பெண்கள் தனியாகப் புழங்குகிற இந்தமாதிரி இடங்கள்தான் அந்தப்புரம் எனப்படும். இதை ஜனானா என்று கருதக் கூடாது.

மௌரிய அரசர்கள் காலத்து அந்தப்புரத்தைப்பற்றிக் கௌடில்யர் விவரித்திருக்கிறார். பெண்களுக்காகத் தனி மாளிகைகள் உண்டு. அதில் அவர்கள் கோஷா முறைகளை அனுஷ்டிப்பதில்லை. ஆயினும் அந்தப்புரத்தை ஜனானா என்றே

காப்பிரைட்: அமிர்தபஜார் (ஆங்கிலம்), கல்கத்தா.

பொருள் படும்படி கௌடில்யர் குறிப்பிடுகிறார்.

“இயற்கை வசதி நிறைந்த இடங்களில்தான் ராஜஸ்திரீகள் வசிக்கும் அந்தப்புர மாளிகையை அரசன் நிர்மாணிப்பான். ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குச் செல்லக் கூடிய பற்பல கிருகங்கள் அதில் இருக்கும். சுற்றிலும் திட்டி வாசல் வைத்த மதிள் சுவரும் வெளிப்புறம் அகழியும் இருக்கும்” என்று அவர் கூறுகிறார்.

மதிள் சுவரை லேசில் தாக்க முடியாது. களிமண்ணும் இடி சாம்பலும் சேர்த்துக் கட்டியது அது. பூனைகள், மயில்கள், கீரிகள் முதலியவை இருப்பதால் விஷப் பாம்பு அதற்குள் நுழையாது. அங்கே உள்ள கிளிகள், மைனாக்கள், மலையாளப் பறவைகள் இவைகளுக்குப் பாம்பின் விஷ வாடை அடித்தால் போதும்; அவை கீச்சிடக் கிளம்பிவிடும்.

அந்த மாளிகைகளில் ஒரு புறம் தாதிகளுக்கென்று அமைந்த அறைகள் இருக்கும். அங்கே பலவித மருந்துகள் இருக்கும். கிரை வகைகள், தண்ணீர்த் தொட்டிகள் இவையும் உண்டு. அதற்கும் அப்பால்தான் ராஜகுமாரர்கள், ராஜகுமாரிகளின் இருப்பிடம். எதிரில் வசந்த மண்டபம், சபா மண்டபம் முதலியவை அமைந்திருக்கும்.

ஹர்ஷ சக்கரவர்த்தியின் மகோன்னத காலத்தில் ஸ்திரீகள் கோஷாக்களாக இல்லை. ஆண்களின் கண்ணில் தென்படக் கூடாது என்ற திட்டமும் இல்லை. ஆனால் வானளாவிய மாளிகைகளில் பெண்களுக்கென்று தனிப்பகுதி இருக்கும். ‘வாஸரம்’ அல்லது ‘அந்தப்புரம்’ என்று இந்தப் பகுதிக்குப் பெயர். இந்தப் பகுதியிலே வெகு சிலரே அநுமதிக்கப்படுவார்கள். கூனர்களும், செவிடர்களும், ஊமைகளும் நாகரிகமில்லாதவர்களும் இங்கே காவல் புரிவார்கள். தங்கத் தடிகள் வைத்து நிற்கும் பணிப் பெண்களுடன் அறுசுவை உண்டி அளிக்கவும் தாம்பூலம் ஏந்தி நிற்கவும் சாமரம் வீசவும் இன்னும் வேண்டிய ஏவல்களைச் செய்யவும் பணிப் பெண்கள் இருப்பார்கள். மகாகவி காளிதாஸன் இந்தப் பெண்களின் மாடத்தை ‘அவரோதம்’, ‘அந்தப்புரம்’, ‘சுத்தாந்தம்’ என்றெல்லாம் குறிப்பிடுகிறான்.

யசோதரை துயில் புரியும் மண்டபத்தின் சித்திரம் ஒன்று அஜந்தாவில் இருக்கிறது. மஞ்சத்தில் யசோதரை துயில் புரிகிறாள். சுற்றிலும் தீபம் சுடர்விட்டு எரிந்து கொண்டிருக்கிறது. தாதிகள் சைத்தியோபசாரம் செய்கிறார்கள். சுவரில் யாழ் ஒன்று தென்படுகிறது. அருகில் வாசனைத் திரவியங்கள் இருக்கின்றன.

மகாகவி தண்டி இந்த மாதிரி ஓர் அறையை, “தீபாலங்காரம் செய்த அந்த அறையிலே சப்ரகூட மஞ்சத்தில் இளவரசி தனியே துயில் புரிகிறாள்; தாதிகள் சுற்றிலும் காவல் காக்கிறார்கள். தந்தத்தினால் செய்த மஞ்சத்தின் கால்கள், சிங்கத்தின் தலை போலச் செதுக்கி விலையுயர்ந்த கல்லிழைத்து வேலைப்பாட்டுடன் விளங்குகின்றன. பட்சி போன்ற திண்டுகள் வைத்த மலர் பரப்பிய படுக்கையில் அவள் படுத்திருக்கிறாள்” என்று வர்ணிக்கிறார். இப்படிப் பெருமை வாய்ந்து சிறப்புக்களுடன் கூடிய பழங்காலத்து மாளிகைகளைப்போலவே மொகலாயர்

களின் காலத்திலும் ஜனானா இருந்தது. ஆனால் அதில் உள்ள கோஷாக்களுக்கு வெளியில் செல்லும் சுதந்தரம் இல்லை. என்றாலும் அவர்களுக்கு எல்லாவிதமான சௌகரியங்களும் ஜனானாவில் அளித்தார்கள்; அவர்களிடம் மதிப்பும் கௌரவமும் தயையும் காட்டினார்கள். தனக்குப் பெரிய அந்தஸ்து இருந்ததும், தன்னை ஒரு மனிதனின் புனிதமான சொத்து என்று மற்றவர் மதித்ததும், ஜனானாப் பெண்ணின் தற்பெருமைக்குத் திருப்தி அளித்தன. பல மனைவிகளுக்குள் ஒருத்தியாகவும் கோஷாவாகவும் இருப்பதை அவள் விரும்பாமல் இல்லை. நூர்ஜஹானுக்கு ஜஹாங்கீரிடம் இருந்த செல்வாக்கும் மும்தாஜுக்கு ஷாஜஹானிடம் இருந்த செல்வாக்கும் சரித்திரப் பிரசித்தமானது. கோஷாப்பெண்களின் காதல் வெற்றியை உலகத்துக்கு நிரூபிக்க இன்னும் இதுபோல் பல வரலாறுகள் இருக்கின்றன. துருக்கிஸ்தானத்து ஸுல்தானா அல்லது ரூமியின் அரண்மனையும் பதேப்பூர் ஸிக்ரியிலுள்ள மாரியம் அரசியின் அரண்மனையும், அக்பர் சக்கரவர்த்தியின் ஆழ்ந்த பற்றுதலைக் காட்டும் சின்னங்கள். வெவ்வேறு மதத்தைச் சார்ந்த அந்த இரண்டு மனைவிகளையும் அவன் சமமாகப் பாவித்துச் சமமாக நேசித்துப் போற்றினான். ஸுல்தானாவின் மாளிகை, சிற்பச் சிறப்புகள் நிறைந்தது. அக்பர் தன் மனைவிகளுக்குக் கட்டிய மாளிகைகளுக்குள்ளே இது தோற்றத்தில் சிறியதுதான். ஆயினும் தாஜ் மஹலின் சிறப்புடன் போட்டியிடக்கக்கூடிய சிறந்த வேலைப்பாடுகள் கொண்டது; மொகலாய சித்திரத்தின் முன்னேற்றத்துக்கே ஓர் அளவுகோலாக நிற்பது. ஸுல்தானாவின் மாளிகையில் ஒரே அறையும் ஒரு வராந்தாவுந்தான் இருக்கின்றன. சுவரில், ஒவ்வோர் அங்குலமும் நுண்ணிய சித்திரம் செதுக்கியிருக்கிறது. அக்பரின் படுக்கையறைக்குப் போய்ச் சேரும் ஒரு பாதையும் பெண்பள்ளிக்கூடத்துக்குச் செல்லும் ஒரு பாதையும் இருக்கின்றன. ஜனானாவை ஒட்டிய உத்தியானவனத்தில் பேகம் நீராடுமுன் உட்காரும் கல் இருக்கிறது. தாதிகள் அங்கேதான் ஸுல்தானாவுக்கு எண்ணெய் தேய்த்து உடம்பைப் பிடித்துவிடுவார்களாம்; பிறகு நீராட அழைத்துச் செல்வது வழக்கமாம்.

அக்பரின் ஹிந்து மனைவியான மாரியம்-உல்-ஜமானியின் மாளிகை, ஸுல்தானாவின் மாளிகையைவிடப் பெரியது. தங்க கில்டும் உயர்ந்த வர்ணங்களும் கொண்டு தீட்டிய சித்திரங்கள் அதில் மிளிர்ந்தன. சித்திரங்களெல்லாம் ஹிந்து புராணம், பிர்தௌஸி, ஷாநாமா இவற்றிலே உள்ள காட்சிகள்தான். அது மூன்று அடுக்கு மாளிகை. உயர்ந்த மேடைமேல் எழும்பியிருக்கிறது. மூன்று பக்கங்களும் படிக்கட்டுகள். முதல் உப்பரிகையில் நான்கு அறைகள்; இரண்டாவது உப்பரிகையில் மூன்று. ராமாயணக் கதை முழுவதும் இங்கே சித்திரமாகச் செதுக்கியிருக்கிறது.

மற்ற மொகலாயர்களுடைய கோட்டைகளையும் அரண்மனைகளையும் போலவே ஆக்ரா நகரக் கோட்டையிலும் ஓர் அழகான ஜனானா உண்டு. அங்கேதான் ஷாஜஹான் சக்கரவர்த்தியைக் கடைசி நாளில் அவுரங்கஜேப் சிறை வைத்திருந்தான். அங்கே ஷாஜஹான்

தன் மனைவியின் ஞாபகார்த்தமான தாஜ்மஹாலைப் பார்த்துக்கொண்டே உட்கார்ந்திருப்பானும்.

1637-ஆம் வருஷத்தில் 'காஸ் மகல்' அல்லது 'ஆராம்கா' என்ற அரண்மனையை ஷாஜஹான் கட்டி முடித்தான். இந்த இடம் முன்னமேயே அக்பர் தேர்ந்தெடுத்துக் கட்ட ஆரம்பித்த இடம். இங்கேதான் ஷாஜஹான் தன் மனைவியையும் குமாரிகளையும் சந்திப்பது வழக்கம். இதன் உட்புறம் அழகான சித்திரங்கள் நிறைந்து விளங்குகிறது. அதன் தூண்களிலும் வளைவுகளிலும் விமரிசையான சிற்பங்களைச் செதுக்கியிருக்கிறது. அக்பர் கட்டிய ஜனனா ஒன்று இன்று பாழடைந்து போய்விட்டது. அதன் பகுதிகள் இருண்டும் கவனிப்பாரற்றும் போய்விட்டன. ஜனனா சுவர்களில் அந்தக் காலத்தில் கீறிய வடுக்கள் இருக்கின்றன. அதில் கிழமைகளின் பெயர்களை அரசிகள் கீறி வைத்திருக்கிறார்கள். தன் மகிஷிகளிடம் சக்கரவர்த்தி விஜயம் செய்த நாட்களை அவை குறிப்பிடுகின்றன. வங்காளி மஹல் என்று ஒன்று இருக்கிறது. சக்கரவர்த்தியின் உல்லாசத்துக்காக, பல இடங்களிலிருந்து கொண்டுவந்த பெண்கள் வசிப்பதற்கென்று கட்டிய மாளிகை அது.

மொகலாயர்களின் ஜனனாவில் பெண்கள் கடுமையான தனிமையில் இருக்க நேர்ந்தபோதிலும், அங்கே ஒரே ஹாஸ்யமும் சிரிப்பும் குதூகலமுமாகவே இருக்கும். உலகத்தில் அவர்கள் செல்ல முடியாத இடங்களிலிருந்தெல்லாம் அபூர்வ வஸ்துக்கள் அவர்களுடைய காலடிக்கு வந்து சேர்ந்தன. உதாரணமாக, பெண்களுக்குப் பட்டும், பவழமும், புஷ்பங்களும் பழங்களும் விற்பதற்கென்று தனிக் கடைத் தெரு ஒன்றையே பதேபூர்ஸிக்ரியில் கொண்டுவந்து வைத்துவிட்டார்கள். ஜனனா மாளிகைகளில் சல வைக்கல் இழைத்த மண்டபவெளியில் ஊற்றுக்கள் சுரந்து பெருகின. நீச்சலடித்து நீராடும் தொட்டிகள் ஜனனா மங்கையரை மகிழ்வித்தன. அரசிளங்குமரிகளுக்குத் தென்றல் வந்து தேமதுரகீதத்தை இசைத்தது. அரசிகள் அடிமைகளுடன் விளையாடிப் பொழுது போக்குவதற்கென்று கட்டிய 'பச்சிஸி' மண்டபம் ஒன்றே, அரசர்கள் தங்களுடைய ஆசைநாயகிகளிடம் கொண்ட அன்புக்குச் சான்று.

மொகலாயர்களோடு ஜனனாவின் பெருமையும் மங்கிவிட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின்போது சில மகாராஜாக்கள் பழைய சிறப்புடன் வாழ முயன்று பார்த்தார்கள். கோஷா முறை ஒன்று மட்டுந்தான் தீர்ந்த பழக்கமாக அவர்களிடம் நிலைத்தது. அதுவும் வேகமாக இறந்து ஒழிந்து வருகிறது.

இந்தக் காலத்தில்கூட ஒரு கோஷா மகாராணி நோய்வாய்ப்பட்டபோது டாக்டரின் முன் வர மறுத்து விட்டாள். அப்புறம் பிடிவாதம் பிடித்து எப்படியோ திரை ஒன்று கட்டிக் கையை மட்டும் வெளியே நீட்டி நாடி பார்த்துக்கொள்ளச் சம்மதித்தாள்.

ஜனனாவின் சம்பிரதாயங்களைப் புரிந்துகொள்வது லேசல்ல. அங்கே ஒரு மனிதனைப் பிரதானமாகக் கொண்டு பல பெண்கள் அந்தத் தனியுலகத்து அரசிகளாகத் திகழ்கிறார்கள். அவர்கள் பல வழியிலும் கெட்டுச் சீரழிந்து போகிறார்கள். தன் மனைவியைக்

கணவன் விளையாட்டுப் பொருளாக்கி வைத்துக்கொண்டு மகிழ்ச்சி அடைகிறான். எவ்வளவுக்கெவ்வளவு கண்டிப்பாக கோஷா முறையை அவள் அநுஷ்டிக்கும்படி செய்கிறானே அவ்வளவுக்கவ்வளவு அவளுடைய கற்பும் பத்திரமாக இருப்பதாக அவனுக்கு எண்ணம். வசதியான பெரிய அரண்மனையில் உள்ள பெண்ணையோ பணக்காரக் குடும்பத்திலுள்ள பெண்ணையோ இந்த கோஷாமுறை பாதிக்கவில்லை. அவள் கணவனுடைய அன்பைக் கவர்ந்துவிடுகிறாள். அதனால் அவளை அவன் போற்றுகிறான். திரைக்குப் பின் பொழுதுபோக்கு, சவாரி, தோட்டம் என்றெல்லாம் இருப்பதால் அவர்கள் ஆரோக்கியமாக இருக்கிறார்கள். ஆனால் கிராமங்களிலும் சிறு நகரங்களிலும் உள்ள ஏழைப் பெண்களையே கோஷா முறை பாதிக்கிறது. முஸ்லிம்களில் பெரும் பகுதியினரும் மற்றவர்களில் ஒரு சிலரும் தங்கள் பெண்களை கோஷாக்களாக வைத்திருக்கிறார்கள்.

இன்று இந்த கோஷா முறை எங்கும் வேகமாக மறைந்து வருகிறது. ஆயினும் பழமையான ஹிந்து குடும்பங்களிலுள்ள அந்தப்புரம் இன்னும் சில வருஷங்களுக்கு இருக்கும். வீடுகளில் தனியாக இடம் ஒதுக்கிக் கட்ட முடியாமல் போகிற வரையில் அது இருக்கத்தான் இருக்கும். அந்தக் காலம் ஒரு நாள் வரும்; அப்போது சகல ஹிந்து குடும்பங்களிலும் பெண்கள் சந்தோஷமான வாழ்க்கைத் துணைவிகளாகத் திகழ்வார்கள்.

****

உழைப்பாளிக்கு ரஜா

லாயிட் ஜார்ஜ் என்பவர் ஒரு பிரபல பிரிட்டிஷ் ராஜதந்திரி. முதல் உலக மகாயுத்தம் நடக்கும்போது அவர் பிரிட்டனின் பிரதம மந்திரியாக இருந்தார். தொல்லைமேல் தொல்லை வந்துகொண்டேயிருக்கும். அவற்றைச் சமாளிப்பதற்குள் அவன் பாடு உண்டு இல்லை என்று ஆகிவிடும். ஒரு சமயம் இந்த மாதிரி தொல்லை ஒன்று ஏற்படவே, கஷ்டப்பட்டு அதை ஒரே வாரத்தில் தீர்த்து வைத்தார். அதற்குள் இன்னொரு தொல்லை வந்து சேர்ந்தது.

அவருடைய சகாக்கள், "இனிமேல் சமாளிக்க முடியாது. இந்தத் தடவை இவர் மண்டை வெடித்துச் சாகத்தான் போகிறார்" என்று பேசிக்கொண்டார்கள். ஆனால் மறுநாள் காலை பார்லிமெண்ட் கூட்டத்துக்கு வந்தபோது லாயிட் ஜார்ஜ் ஒரு கவலையும் இராதவர்போல் சிரித்த முகத்தோடு வருவதைப் பார்த்ததும் அவர்களுக்கு ஆச்சரியமாயிருந்தது! உங்களைப் பார்த்தால் ஒரு மாதத்துக்கு மேலே எங்கேயோ ரஜாவில் போய்விட்டுத் திரும்புகிற மாதிரியல்லவா இருக்கிறது? என்ன விசேஷம்?" என்று விசாரித்தார்கள்.

"ஒரு விசேஷமும் இல்லை. பழைய தொல்லை மாறிப் புதிய தொல்லை ஏற்பட்டால், அது எனக்கு ரஜா கிடைத்த மாதிரிதான்" என்று சொல்லி இடி இடியென்று சிரித்தார் அவர்.

—மில்வாகி ஜர்னல்

குழந்தைகள் குறும்பு

இவை போன்ற துணுக்குகளை, தாங்கள் கண்டு கேட்ட அநுபவங்களிலிருந்து யாரும் நமக்கு அனுப்பலாம். பிரசுரிக்க அங்கீகரித்த ஒவ்வொரு துணுக்குக்கும் 2 ரூபாய் சம்மானம் அளிக்கப்படும். பிரசுரிக்காதவற்றைத் திருப்பி அனுப்பமுடியாது. பதிலும் எழுத முடியாது.

—ஆசிரியர்.

எங்கள் அத்தை ஊரிலிருந்து வந்தாள். கூடவே மைசூர்ப்பாகும் பொட்டலமும் கொண்டு வந்திருந்தாள். அம்மா அதை வாங்கி உள்ளே எடுத்து வைத்தாள். அன்று என் தங்கை பேபிக்கு உடம்பு சரியாக இல்லை. அத்தை வரும்போது அவள் சற்றுக் கண்ணயர்ந்திருந்தாள்.

பகல் சாப்பிட்டதும் நாங்கள் அத்தையோடு சற்று நேரம் பேசிக்கொண்டிருந்தோம். அப்புறம் தூக்கம் வரவே அப்படியே படுத்துவிட்டோம். எழுந்திருக்கும்போது சாயங்காலமாகிவிட்டது. அம்மா சமையலறைக்குப் போய் மைசூர்ப்பாகு டப்பியை எடுத்துவந்தாள். அத்தை, பேபியை அன்போடு அணைத்துக்கொண்டு, "குழந்தைக்கு ஒன்று கொடடி முன்னே" என்றாள். அம்மா, "அதுக்கு நாலு நாளாக ஜுரம். இன்னும் இரண்டு நாள் போகட்டும்; தரலாம்" என்றாள். பேபிமட்டும் ஒன்றும் பேசாமல் மிகவும் சாதுவாக அத்தையைப் பார்த்துக்கொண்டிருந்தாள். அம்மா பிடிவாதமாக பேபிக்குக் கொடுக்காதிருக்கவே அத்தை செல்லமாக, "நான் தர்றேன்; வாங்கிக்கோம்மா" என்று ஒரு மைசூர்ப்பாகை பேபியிடம் நீட்டினாள். பேபி வாங்கிக்கொள்ளவில்லை; அம்மாவையே பார்த்துக்கொண்டிருந்தாள். அத்தை, "அம்மா கோவிச்சுக்க மாட்டாடி; நீ எடுத்துக்கோ" என்று உபசாரம் பண்ணினாள். அப்படியும் பேபி சும்மா இருந்தாள். அத்தை, "ஏண்டி, உனக்கு மைசூர்ப்பாகு பிடிக்காதா என்ன?" என்றாள்.

உடனே பேபி, "ஏன் பிடிக்காது? நீங்களெல்லாம் தூங்கிண்டிருக்கச்சேயே நான் மூணு எடுத்துண்டுட்டேன். எனக்குத் திகட்டிப்



போச்சு'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே வெளியே ஓடி விட்டாள்.

—ஏ. வேமபு, புதுவயல்.

அப்போது கிருஷ்ணனுக்கு நான்கு வயது. புதிதாகப் பள்ளிக் கூடத்தில் சேர்த்திருந்தோம். காலஞ்சென்ற தேசபக்தர் டாக்டர் டி. வி. எஸ். சாஸ்திரியார் அன்று எங்கள் வீட்டுக்கு வந்திருந்தார்.

"அம்பி, உன் பெயர் என்ன? சொல்'' என்றார் கிருஷ்ணனைப் பார்த்து.

"என் பெயர் அம்பி.''

"எங்கே, உன் பெயரை எழுதி, பார்க்கலாம்.''

"இதோ'' என்று சிலேட்டில் எழுதிக் கையில் கொடுத்தான் கிருஷ்ணன். அதைப் பார்த்த டாக்டர் சிரித்துக்கொண்டே அதை எங்களிடம் காண்பித்தார். "அம்B'' என்று எழுதியிருந்தது.

"தமிழில் B சப்தத்தைக் குறிக்க ஓர் எழுத்து இல்லாத குறையைப் பையன் நீக்கிவிட்டான்'' என்றார் சாஸ்திரியார்.

—டி. எஸ். கே., தெப்பக்குளம், திருச்சி.



எங்கள் வீட்டெதிரே ஒரு விசாலமான முற்றம். என் தம்பியும் அவனுக்கு ஈடான இன்னும் நாலு ஐந்து பையன்களும் வீட்டில் இருந்தார்கள். எல்லாரும் சேர்ந்து முற்றத்தில் ரெயில் வண்டி விளையாட்டு விளையாடிக்கொண்டிருந்தார்கள். பாதி விளையாட்டில் என் தம்பி தனக்கு முன்னிருந்த பையனின் சட்டையை விட்டுவிட்டுத் தான் மட்டும் "ஊ'' என்று கத்திக்கொண்டே கூடத்துக்கு வந்தான்.

நான், "எண்டா! அவர்களையெல்லாம் விட்டுவிட்டு நீ மட்டும் தனியாக விளையாடறே? ஆட்டம் முடிந்துவிட்டதா என்ன?'' என்றேன்.

அவன், "இல்லே, இல்லே; எஞ்சின் தண்ணி குடிக்கத் தனியாக வந்திருக்கு; இதோ போயிடும்'' என்று சொல்லி அங்கிருந்த பானையிலிருந்து ஒரு டம்ளர் தண்ணீர் மொண்டு கம்பீரமாகக் குடிததான். பிறகு பழையபடி ரெயில் தொடரை இழுக்கப் போய்விட்டான்.

—எஸ். ராகவன், குளித்தலை.

மனிதனுடைய மனம் ஒரு புதிய கருத்தைக் கிரகித்துக் கொண்டபின் மறுபடி பழைய நிலையை அடைவதில்லை.

—ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ்

நாடெங்கும் பிரசித்தமான கதகளியை
வளர்த்த திருவாங்கூர் ராஜா இவரே.

கார்த்திகைத் திருநாள்

★

தர்மராஜா என்று புகழ் பெற்றவர் கார்த்திகைத் திருநாள் மகாராஜா. இவர் தம் தோள் வலியால் ஒரு பெரும் போர்வீரராக விளங்கினார். அதோடு அபாரமான கற்பனைத்திறம் படைத்த மகாகவி இவர். பல கலைஞர்களை இவர் அன்போடு ஆதரித்து வந்தார். இவர் மாமா மார்த்தாண்ட வர்ம மகாராஜா. பராக்கிரமத்தால் அவர் ஸ்தாபித்த திருவாங்கூர் ராஜ்யத்தை இவர் செல்வம் கொழிக்கச் செய்தார்.

இவர் கொல்லம் ஆண்டு 901-இல் பிறந்தார். கோலத்துநாட்டிலிருந்து வஞ்சி ராஜ குடும்பத்துக்குத் தத்தாக வந்தவள் இவருடைய தாய்; இவருக்கு மூன்று வயசு இருக்கும்; அப்போது இவருடைய தந்தை கோயில்தம்புரானும் தாய் பார்வதி பாயும் இவரை அழைத்துக் கொண்டு ஆற்றங்கல் என்ற இடத்துக்குப் போயிருந்தார்கள்; 'எட்டுவீட்டார்' என்பவர்கள் அரச குடும்பத்துக்குப் பகைவர்கள். அவர்கள் அவருக்கு எதிராகக் கிளம்பி இவரைக் கொன்றுவிடப் பார்த்தார்கள். ஆனால் தந்தையின் சமயோசித புத்தியினால் அவர்கள் எண்ணம் பலிக்கவில்லை. இவர் மாமாவான மார்த்தாண்ட வர்மா பகைவரைத் தலை காட்டாமல் செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டார். அதனால் இவரைத் தம்மிடமே வைத்துக் கொண்டார். இவர் இளவயதிலேயே ஆயுதப் பயிற்சியிலும் சாஸ்திரங்களிலும் நல்ல தேர்ச்சி பெற்றார். மாமா நடத்திய போர்களிலெல்லாம் இவரும் பங்கெடுத்துக்கொண்டார். சிறு வயதிலேயே சிறந்த வீரன் என்று பெயரெடுத்தார். மாமா காயங்குளம் மகாராஜாவோடு போர் தொடுத்தார். இளவரசர் அப்போது பத்மநாபபுரத்தில் இருந்தார். வெகு நாள் மாமாவைப்பற்றிச் செய்தி ஒன்றும் தெரியவில்லை. அதனால் இவர் மாறு வேஷம் போட்டுக்கொண்டு காயங்குளத்துக்குச் சென்றார். அத்தனை சிறு வயதில் அவ்வளவு துணிச்சல் இருப்பது அதிசயந்தானே?

மாமாவுக்குப் பின் பட்டத்துக்கு வந்தபோது இவருக்கு வயது முப்பத்துமூன்று. அப்போது மசாக்கம்பட்டிப் பாளையக்காரர் செங்கோட்டையை முற்றுகை இட்டார். இவரும் அஞ்சாமல் போர் தொடுத்தார். கொச்சியை ஸாமூதிரி முற்றுகையிட்டபோது கொச்சி ராஜா இவர் உதவியை நாடினார். இவரும் உடனே அவருக்குத் துணை புரிந்தார். அந்தப் போரில் இவரால்தான் கொச்சி ராஜாவுக்கு வெற்றி. இந்தப்

மூலம்: சித்திர கிரந்தாவலி (மலையாளப் புத்தகம்)

போர் வெகு நாள் நீடித்தது. ஹைதர் அலி திருவாங்கூரை எதிர்க்க முயல்வதை அறிந்து ஆயக்கோட்டையிலிருந்து கிழக்கே ஸஹ்ய பர்வதம் வரையில் இவர் முப்பது மைல் நீளத்தில் ஒரு பெரிய கோட்டை கட்டினார். பலதரம் ஹைதர் திருவாங்கூர் மேல் படையெடுத்தான்; ஆனால் அவன் முயற்சி பலிக்கவேயில்லை. இவருடைய திறமையே அதற்குக் காரணம். பாதியில் ஹைதர் இறந்து விட்டான். ஆனால் அவன் மகன் திப்பு சுல்தான், 'திருவனந்தபுரம் பத்மநாபஸ்வாமி கோயிலின் தங்கக் கொடி மரத்தில் என் குதிரையைக் கட்டுகிறேன், பார்' என்று கொடிய சபதம் செய்தான். போருக்கு வேண்டிய ஏற்பாடெல்லாம் நடந்தது. ஆனால் தெய்வம் வேறு நினைத்தது. இவருடைய திறமையாலும் ஆங்கிலேயரின் உதவியாலும் திப்புவின் வாக்கு நிறைவேறவில்லை. அவன் பாடே சங்கடமாகிவிட்டது.

இவர் குளச்சல், விழிஞ்ஞம், பூந்துறை முதலிய இடங்களில் துறைமுகங்கள் ஏற்படுத்தினார். ஆலப்புழையிலும் ஒன்று கட்டினார்; பம்பாயிலிருந்து பல வியாபாரிகளை வரவழைத்து ஆலப்புழையைப் பெரிய வியாபார ஸ்தலமாக்கினார். பல கப்பல்கள் கட்டுவித்து, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களுக்குச் சாமான்களை ஏற்றுமதி செய்து நாட்டின் செல்வத்தை வளர்த்தார். நாஞ்சில்நாட்டில் புதிய நீர்ப்பாசன வசதிகள் செய்து நிலவளத்தைப் பெருக்கினார். காடுகளைச் செழிக்கச் செய்து அவற்றைத் தக்க முறையில் பயன்படுத்தப் பல ஸ்தாபனங்களை நிறுவினார்.

இதே மாதிரி கலைகளிலும் அதிக கவனம் செலுத்தி வந்தார். வித்துவான்களையும் தம் ராஜதானிக்கு வரவழைத்து அவர்களுக்கு உற்சாக மூட்டி வந்தார். புகழ் பெற்ற கவிஞர்களாகிய குஞ்சன் நம்பியார், உண்ணாயிவாரியர், ராமபுரத்து வாரியர் முதலியவர்கள் இவருடைய ஆதரவில் இருந்தார்கள். இவருடைய சபைக்கு அணியாகச் சதாசிவ தீட்சிதர், சுப்பிரமணிய கவி, ரகுநாத தீட்சிதர் முதலிய வடமொழிக் கவிகள் விளங்கினார்கள்.

கேரள நாட்டியக்கலையில் மிகவும் முக்கியமான கதகளியை ஆதரித்து வளர்த்தவர் இவர்தான். பல ஆட்டக் கதைகளைத் தாமும் எழுதி, பிறரையும் எழுதத் தூண்டினார். இவருடைய நூல்களில் மிகவும் முக்கியமானது 'பாலராம பாரதம்.' இது வடமொழியில் இவர் எழுதிய நாட்டிய சாஸ்திரம். இவருக்கு ஹிந்துஸ்தானி, பாரசீகம், போர்த்துகீஸ், ஆங்கிலம் முதலிய பாஷைகளில் நல்ல தேர்ச்சி உண்டு.

இவர் நாற்பது வருஷ காலம் சிறப்பாக அரசு செலுத்தினார். கொல்லம் ஆண்டு 973, மாசி 6-ஆம் தேதி புண்ணிய தினமான சிவராத்திரி அன்று இவர் காலமானார்.

மூட நம்பிக்கையும் மிதமிஞ்சிய ஆர்வமும் விஷம் போன்றவை. விஞ்ஞான அறிவுதான் அவைகளுக்கு மாற்று.

—ஆதாம் ஸ்மித்

வல்லப சம்பிரதாயம்



“வல்லபாசாரியர் ஒரு தெலுங்குப் பிராம்மணருடைய குமாரராக அவதரித்தவர். அவர் விருந்தாவனத்திலும் வட மதுரையிலும் சில காலம் வாழ்ந்தார். பிறகு அவர் பாரத நாடு முழுவதிலும் யாத்திரை செய்து, மறுபடி விருந்தாவனத் துக்குத் திரும்பினர். அங்கே கிருஷ்ண பகவான் அவருக்குத் தரிசனமளித்து, கோவர்த்தனத்துக்கு வரச் சொன்னர். வல்லபர் அங்கே சென்று, கோபாலனுக்குக் கோயில் கட்டி, ஒரு தனி வகையான வழிபாட்டு முறையை ஸ்தாபித்தார்.

“நெருப்பிலிருந்து எழும் பொறியைப்போல, இந்த உலக சிருஷ்டி ஆண்டவனிடமிருந்து தோன்றியது என்பது வல்லபாசாரியரின் கொள்கை. கிருஷ்ணன் பரப் பிரம்மம்; புருஷோத்தமன்; பூர்ணனந்தன். புஷ்டி மார்க்கம் அல்லது புஷ்டி பக்திதான் அவனை அடையும் வழி. இந்தப் பக்தி நான்கு வகைப்படும். உலகப் பிரவிருத்திகளில் மூழ்கி யிருந்தும் கடவுளைப்பற்றிய அறிவைப் பெற முயலும் வழி - பிரவாக புஷ்டி பக்தி. உலக விஷயங்களிலிருந்து விலகி, பகவத் சேவையில் ஈடுபடும் வழி - மரியாதா புஷ்டி பக்தி. கடவுளின் அருளை ஏற்கனவே பெற்று மகிழ்ந்து, சுயமுயற்சி யோடு மேல் மேல் அதைப் பெற முயலும் வழி - புஷ்டி புஷ்டி பக்தி. பக்திமேலீட்டினுல் பகவானைப் பாடித் துதிக்கும் வழி - சிரத்தா புஷ்டி பக்தி. படிப்படியாக இந்தப் பாதையில் முன்னேறுகிறவன் பகவானின் ஸ்வரூபத்தைப் பெற்று, பரமபதத்துக்குப் போகிருன்.

“வல்லப சம்பிரதாயத்தைப் பின்பற்றுகிறவர்கள் குஜ ராத்திலும் ராஜபுதனத்திலும் வடமதுரையிலுமுள்ள வியாபாரிகள். மூக்கிலே வளைத்து, நடுவில் சிவப்புப் பொட் டிட்ட சிவப்பு நாமத்தை அவர்கள் அணிகிருர்கள். பாகவ தத்துக்கு வல்லபாசாரியர் எழுதிய உரையும் அவர் அருளிய வேறு நூல்களுமே இந்தச் சம்பிரதாயத்துக்கு ஆதார நூல்கள்.” இவ்வாறு எழுதுகிருர் டி. ஏ. பாய் என்பவர் ‘இந்தியாவில் ஹிந்து சமயப் பிரிவுகள்’ என்ற தமது நூலில். இந்தச் சம்பிரதாயக்காரர்களின் மிக முக்கிய தெய்வமான ஸ்ரீநாதரைப் பற்றிய கட்டுரையை அடுத்த பக்கத்தில் காணலாம்.

ஸ்ரீநாதர்

எஸ். ஜ. கிளார்க்



ஸ்ரீ நாதர்

ஸ்ரீநாதரின் கோயில் வைஷ்ணவர்களின் பூலோக சொர்க்கம். இங்குள்ள விக்கிரகம் பிரமாதமான அழகு வாய்ந்தது. இங்கே யாரையும் படம் பிடிக்க விடுவதில்லை. உள்ளூர் ஓவியர்கள் வரைந்த ஏராளமான சித்திரங்கள் கிடைக்கின்றன. அவற்றில் சில மிகவும் அருமையானவை; ஸ்ரீநாதருடைய விக்கிரகத்தின் அழகை அவற்றில் ஓரளவு காணலாம்.

ஸ்ரீநாதரின் கோயில் மார்வாடத்தில் இருக்கிறது. வீரத்துக்குப் பேர் பெற்ற ராஜபுத்திரர்களின் ஜன்ம பூமி இது. உதயபூருக்கு முப்பது மைல் தூரத்தில் பனாஸ் நதிக்கரையில் அமைந்திருக்கிறது இந்த நகரம். நாதத்வாரா ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து எட்டு மைல். மார்வாட் ஜங்ஷனிலிருந்து 84 மைல். வருஷத்துக்கு 25 அங்குலம் மழை பெய்வதால் இது சுகவாசத்துக்கு ஏற்ற ஸ்தலம்; அதுவும் ஜனவரியிலிருந்து மார்ச்சு வரைக்கும் ரமணீயமாக இருக்கும்.

வல்லப சம்பிரதாயத்தைச் சேர்ந்தவர்கள் வருஷந்தோறும் ஆயிரக் கணக்கில் நாதத்வாராவுக்கு யாத்திரை செய்கிறார்கள். கிருஷ்ண பகவான் வேண்டிக்கொண்டபடி, வல்லபாசாரியர் (1473-1531) அக்கினியின் அம்சமாக இந்தப் பூலோகத்திலே அவதரித்து, உபநிஷத்துகளுக்கும் பிரம்ம சூத்திரத்துக்கும் பாஷ்யமிட்டார்; வேதம், கீதை, பிரம்ம சூத்திரம், பாகவதம் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு சுத்தாத்வைத சித்தாந்தத்தை ஸ்தாபித்தார். அவருடைய சம்பிரதாயத்துக்குப் புஷ்டி மார்க்கம் என்று பெயர். இதன்படி, ஒரு பக்தன் இயற்கையான அன்பு மேலீட்டினால் கிருஷ்ணனை வழிபடுகிறானே தவிர, கிருஷ்ணன் பரதத்துவம் என்பதற்காக மட்டும் அல்ல. கிருஷ்ணன் அந்தப் பக்தனுடைய ஆத்மாவுக்குத் தன் ஸ்வரூபத்தை அளித்து அவனோடு நித்திய லீலை புரிகிறான். புஷ்டி மார்க்கத்தார் வழிபடும் தெய்வத்துக்கு ஸ்ரீ கோவர்த்தனநாதர் என்று பெயர்; பெரும்பாலும் ஸ்ரீநாதர் என்றே வழங்குகிறார்கள். வல்லபாசாரியருக்கு ஸ்ரீநாதரின்

காப்பிரைட்: மாடர்ன் ரெவ்யூ (ஆங்கிலம்: செப்டம்பர் '49), கல்கத்தா.

விக்கிரகம் கிரிராஜ மலையில் கிடைத்ததாகவும், பிறகு அவர் அதை நாதத்வாராவுக்குக் கொண்டு வந்ததாகவும் சொல்லுகிறார்கள்.

மங்களம், சிருங்காரம், கோபாலன், ராஜபோகம், உத்தாபனம், நைவேத்தியம், ஆரத்தி, சயனம் ஆகிய எட்டுத் திருக்கோலங்களில் ஸ்ரீநாதர் நாள்தோறும் பக்தர்களுக்குத் தரிசனம் தருகிறார். ஒவ்வொரு கோலத்துக்கும் புத்தாடை அணிவித்து, வெவ்வேறு வகையான நைவேத்தியங்களைச் சமர்ப்பிக்கிறார்கள். மங்களத்தின்போது அப்பமும் வெண்ணெயும், கோபாலன் கோலத்தில் பாலும், ராஜபோகத் திருக்கோலத்தில் எல்லா விதமான சாப்பாட்டு வகைகளும் பழங்களும், நைவேத்தியத்தின்போது இன்கனிகளும் படைக்கிறார்கள். சயனக் கோலத்தில் பகவான் துயிலப் போகுமுன்பு, அங்கே கொஞ்சம் சாப்பாட்டை வைத்துவிட்டுக் கதவை மூடுவார்கள். நடு ராத்திரியில் பகவானுக்குப் பசி எடுத்தால் அவர் இதை எடுத்து உண்பதற்குத்தான்! ஒவ்வொரு தரிசனத்துக்கும் ஸ்ரீநாதர் புதிய கோலத்தில் புதிய அழகோடு காட்சியளிப்பார்.

தரிசனத்துக்குத் தினமும் ஏராளமான கூட்டம் வருகிறது. ஒரு தரிசனம் ஆன சிறிது நேரத்துக்கெல்லாம் கதவைப் பூட்டிவிடுவார்கள்; மறு தரிசனம் வரைக்கும் ஜனங்கள் காத்துக் கிடக்க வேண்டும். பூசாரிகள் மிகவும் மோசமாக நடந்துகொள்கிறார்கள்; எதற்கு எடுத்தாலும் பணந்தான். ஜனக் கும்பல் அமைதி குலைந்து நெரிந்தால், பூசாரிகள் தங்கள் தோளிலுள்ள துணியால் ஜனங்களை அடிக்கிறார்கள்; பெண்களைக் கண்டபடி திட்டுகிறார்கள். இந்தக்



வல்லபாசாரியர்

கோயிலில் வீணாகும் உணவுக்குக் கணக்கே இல்லை. இங்கிருந்து இந்தியா முழுவதற்கும் உணவுப் பார்சல்கள் பிரசாதமாய்ப் போகின்றன. பூசாரிகளுக்குச் சம்பளத்துக்குப் பதிலாகப் பிரசாதம் நிறையக் கிடைப்பதால், அவர்கள் தங்கள் ஏஜெண்டுகள் மூலம் அதை ஜனங்களுக்கு விற்கிறார்கள்.

யாத்திரிகர்கள் ஆயிரக்கணக்கில் வருவதனால் இங்கே கைத்தொழில்களும் கலைகளும் அபிவிருத்தி அடைந்திருக்கின்றன. சேலைகளில் பூவேலை செய்து அச்சடிப்பது பரம்பரைத் தொழிலாக வளர்ந்திருக்கிறது. ஆனால் சாயம் கெட்டியாக இருப்பதில்லை. வேர்வை பட்டால் புடைவையிலுள்ள பூக்களின் அடையாளம் அப்படியே உடலில் பதிந்துவிடும்.

அரக்கு, கொட்டாங்கச்சி முதலியவற்றினால் வளையல்கள் செய்து விற்கிறார்கள்; கண்ணாடி அல்லது பிளாஸ்டிக் வளையல்களைவிட இவை மலிவானவை; பார்ப்பதற்கும் தனி அழகு வாய்ந்தவை. ஒரு ஜோடி அரக்கு வளையலின் விலை நாலணாவிலிருந்து எட்டணாவுக்குமேல் போவதில்லை. சுற்றுப்புறத்துக் கிராமங்களில் அரக்குக் கிடைக்கிறது. வளையலுக்கு வர்ணமும் உள்ளூரிலேயே தயாரிக்கிறார்கள்.

வர்ணம் பூசிய மரப் பொம்மைகள் மார்வாடத்தில் பிரசித்தம். சமையல் பாத்திரங்கள், விசிறி, ஏரோப்ளேன், ரெயில் வண்டி, மோட்டார் முதலிய பொம்மைகள் பெரும்பாலும் விற்கின்றன. குழந்தைகளின் மனத்தைக் கவரும்படி, நிறங்கள் பளிச்சென்று இருக்கும்.

வாசனைத் திரவியங்கள் இங்கே ஏராளமாகத் தயாராகின்றன. பம்பாய், கல்கத்தா, டில்லி முதலிய நகரங்களில் இவை விலைபோகின்றன.

சித்திரகலையில் இங்கே ஒரு தனிச் சம்பிரதாயம் தோன்றியிருக்கிறது. நாதத்வாரா ஓவியம் ராஜபுத்திர ஓவியத்தில் ஒரு கிளையாக விளங்குகிறது.

ஸ்ரீ கோவர்த்தனருடைய படங்கள்தான் இதில் முக்கியம். கிருஷ்ணனுடைய லீலைகளையும் சித்திரிப்பார்கள். வைஷ்ணவ மகாராஜாக்களையும் ஆசிரியர்களையும் இந்த ஓவியர்கள் கிழியில் வரைவார்கள். சித்திரம் மங்கலாகத் தோன்றினாலும், வர்ணங்கள் எனாமல் போலப் பளபளப்பாக இருக்கும். நாதத்வாராவிலுள்ள பழைய வீடுகளில் வெளிச் சுவர்களில் தீட்டிய சித்திரங்கள் குறிப்பிடத் தகுந்தவை. ஓவியங்களுக்குத் தேவையான வர்ணங்களைப் பச்சிலை, தாதுப் பொருள்கள், கற்கள் ஆகியவற்றைக்கொண்டு உள்ளூரிலேயே தயாரித்துக்கொள்ளுகிறார்கள்.

இந்த நாளிலுங்கூடப் பழைய சம்பிரதாயப்படி ஸ்ரீநாத சித்திரங்களை வரையும் ஓவியர்கள் இருக்கிறார்கள். நந்தலால் என்பவர் அவர்களில் முக்கியமானவர்.

வல்லப சம்பிரதாயத்தினரிடம் நிறையச் செல்வமும் கல்வியும் இருக்கின்றன. அவர்கள் அவற்றை வீணாக்காமல் சரியான முறையில் பயன்படுத்தினால், ஸ்ரீநாத க்ஷேத்திரம் உண்மையிலேயே பூலோக சொர்க்கமாக விளங்குவதோடு, பிற மதத்தினரும் அங்கே கடவுளைக் காணும் ஸ்தலமாகத் திகழும்.

வெற்றிலை பாக்கு

உலக ஜனத் தொகையில் பத்தில் ஒருவர் வெற்றிலை பாக்குப் போடுகிறார். கிறிஸ்து பிறக்க 500 வருஷங்களுக்கு முன்பே தோன்றிய வழக்கம் இது. இதனால் பல் சிவந்தாலும் கறுத்தாலும் பல்லுக்கு உறுதியே.

—ஹால் கூலி, 'ஸயின்ஸ் டைஜெஸ்ட்'

மறதியை ஒழிக்க வழி

★

> கல்விக்கு அறிவு மட்டும் அல்ல; ஞாபக சக்தியும் மிக முக்கியம். அதில் மனிதருக்கு மனிதர் வேறுபாடு உண்டு. அதை விளக்கும் இது, ப்ரூனே பர்ஸ்ட் என்பவர் எழுதிய புஸ்தகத்தை ஆதாரமாகக் கொண்டது.

மனன சக்தி சம்பந்தப்பட்ட மட்டில், மனிதரை (1) கண்ணால் கவனிப்பவர், (2) காதால் கவனிப்பவர், (3) செயலால் கவனிப்பவர் என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம். நம் அறிவை வளர்த்து மனன சக்தியைப் பெருக்க இந்த மூன்றில் நாம் எந்த வகையைச் சேர்ந்தவர்கள் என்று தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியம்.

முதல் வகையைச் சேர்ந்தவன், புத்தகங்களைப் படித்துப் படித்து அதில் அச்சடித்திருக்கும் சொல், வாக்கியம் முதலியவற்றை ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறான். அதிக சிரமம் இராமல், இன்ன பக்கத்தில் இன்ன மூலையில் இன்ன விஷயம் இருக்கிறது என்று இவன் சொல்லிவிடுவான். சினிமாவுக்குப் போனால், தான் பார்த்த காட்சிகள் மட்டுமே இவனுக்கு நன்றாக ஞாபகம் இருக்கும். அதில் வரும் பாத்திரங்களின் பேச்சு வெகு விரைவில் கவனம் இராமல் போய்விடும்.

இதற்கு நேர்மாறு காதால் கவனிப்பது. இந்த வகையைச் சேர்ந்தவன் புத்தகங்களைப் படித்து விஷயங்களை அறிவதைவிடப் பிரசங்கங்களைக் கேட்டு அதிகப் பலன் அடைகிறான். இதைக் கேள்விஞானம் என்று சொல்லலாம். தானும் இன்னொருவனும் பேசிய பேச்சை இவன் ஒரு வார்த்தை விடாமல் அப்படியே ஒப்பிப்பான். ஆனால் தன்னோடு பேசிய ஆள் எப்படி இருந்தான் என்று கேட்டால் சொல்ல முடியாமல் தவிப்பான். சினிமாவுக்குப் போனால் அதில் தான் கேட்ட பேச்சும் பாட்டுந்தான் இவன் மனத்தில் பதியும்; பார்த்த காட்சிகள் விரைவில் மங்கிக் கவனமிராமல் போய்விடும்.

செயலால் கவனிப்பவனுக்கு, தான் எழுதியது நன்றாக ஞாபகம் இருக்கும். மோப்பம், ருசி போன்ற மற்றப் புலன்களின் மூலம் உணருவதை இதற்கு அடுத்தபடியாகத் தான் சொல்லவேண்டும். ஆனால், அதற்கு விலக்கும் உண்டு. ஒருவன் குருடனாக இருந்தால் அவனுக்கு



மற்றப் புலன்கள் மூலம் உணரும் சக்தி அபாரமாக இருக்கும்.

பட்சிகளிலும் மிருகங்களிலுங்கூட இப்படிப் பல ரகம் உண்டு. கண் கூர்மையாக இருப்பதால்தான் பருந்து வாழ முடிகிறது. எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் கீழே இருக்கும் இரை அதன் கண்ணில் பட்டுவிடும். அவ்வளவு உயரத்திலிருந்து நாம் பார்த்தால் ஒரு நகரத்துக்கும் காட்டுக்குங்கூட நமக்கு வித்தியாசம் தெரியாது.

மான் தப்பிப் பிழைப்பது காதின் உதவியால்தான். ஒரு சிறு சுள்ளி முறிந்தாலும் அதன் காதுக்குக் கேட்டுவிடும். நாய்க்குக் கண்ணையும் காதையும்விட மூக்குத்தான் மிகவும் முக்கியம். மோப்பம் பிடித்து அறியும் சக்தி அதற்கு அதிகம்.

முழுக்க முழுக்கக் கண்ணாலோ, காதாலோ, செயலாலோ கவனிப்பவர் என்று யாரையும் சொல்லிவிட முடியாது. நம் எல்லாருக்குமே மூன்று வித சக்தியும் உண்டு. ஒவ்வொருவருக்கும் அவற்றில் எது அதிகம், எது குறைவு என்பதைக் கொண்டே இந்த மூன்று பிரிவு செய்கிறோம். உலகத்தில் மூன்றில் ஒரு பங்குபேர் கண்ணால் கவனிப்பவர்கள்தான். மற்றவர்கள் பிற புலன்களின் உதவியால் கவனிக்கிறார்கள். எவ்வளவோ படிக்கிறோம்; ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறோம். ஆனால் நாம் எந்த வகை என்று நம்மில் அநேகம் பேருக்குத் தெரியாது.

ஒரு பாடகரிடம் போய், "எப்படி, ஐயா, இவ்வளவு சாகித்தியமும் ஸ்வரமும் உங்களுக்கு நெட்டுருவாக இருக்கிறது?" என்று கேட்டுப் பாருங்கள். "அது எப்படியோ, எனக்குத் தெரியாது" என்றுதான் அவர் முதலில் சொல்லுவார். "யோசனை பண்ணிச் சொல்லுங்கள்" என்று மறுபடியும் கேட்டுப் பாருங்கள்; பலவிதமாகப் பதில் வரும்.

இவர் பியானோவோ ஆர்மோனியமோ வாசிப்பவராக இருந்தால் ஸ்வர வரிசை நோட்டுப் புத்தகம் தம் எதிரே இருப்பதாகப் பாவித்துக் கொள்வார். இவர் கண்ணால் கவனிக்கும் வகையைச் சேர்ந்தவர். அடுத்த பக்கத்தை எப்போது திருப்ப வேண்டும் என்று இவர் சுலபமாகச் சொல்லிவிடுவார். இதற்கு நேர்மாறு காதால் கவனிப்பது. இந்த வகையைச் சேர்ந்தவர் ஸ்வர வரிசையைப் பார்த்துக்கூட இருக்கமாட்டார்; பார்த்தாலும் இவருக்குப் புரிந்து கொள்ளத் தெரியாமல் இருக்கலாம். செயலால் கவனிப்பவர் பியானோ இல்லாவிட்டாலும் இருப்பதாகப் பாவித்துக் கொண்டு வாசித்துப் பார்ப்பார். இவருக்கு ஸ்வர வரிசை நோட்டுப் புத்தகமோ, சங்கீத ஒலியோ அவசியமில்லை; தம் கையின் அசைவிலிருந்தே எல்லாவற்றையும் புரிந்து கொள்வார்.

ஆகவே, கண்ணால் கவனிப்பவர்கள் இன்னும் ஏராளமாகப் புத்தகங்களைப் படிக்க வேண்டும்; காதால் கவனிப்பவர்கள் மேலும் மேலும் பிரசங்கங்களைக் கேட்டு வர வேண்டும்.

இருந்தாலும் முதல் வகையைச் சேர்ந்தவர்கள் உரக்கப் படிப்பது ஒரு விஷயத்துக்கு அநுகூலமே. அப்போது காதால் கவனிக்கும் பழக்கமும் ஏற்பட்டு இரண்டு விதத்திலும் சமமாகப் புத்தியைச் செலுத்தலாம்.

செயலால் கவனிப்பவர்கள் அதிகமாக எழுதிப் பழக வேண்டும். கண்,

செயல் இந்த இரண்டினாலும் கவனிப்பவர்கள் புத்தகத்தைப் பார்த்து எழுதிப் பழக வேண்டும். காது, செயல் இந்த இரண்டினாலும் கவனிப்பவர்கள், பிறர் பிரசங்கங்களைக் கேட்டு அப்படியே எழுதிக் கொள்ளப் பழக வேண்டும்.

ஒவ்வொருவரும் இன்ன இன்ன வகையைச் சேர்ந்தவர் என்று எப்படிக் கண்டுபிடிப்பது? அதற்கு இரண்டு முறை உண்டு: (1) நம்மை நாமே பரீட்சித்துக்கொள்வது; (2) பிறரைப் பரீட்சிப்பது.

ஒரே அளவுள்ள இரண்டு பாராக்களை ஒரு காகிதத்தில் குறித்துக் கொள்ளுங்கள். ஒவ்வொன்றும் அரைப்பக்கத்துக்கு இருக்கலாம். முதல் பாராவை மௌனமாக உங்களுக்குள்ளேயே படித்துக் கொள்ளுங்கள். அதற்கு எவ்வளவு நேரம் ஆயிற்று என்பதையும் குறித்துக் கொள்ளுங்கள். பிறகு அந்தக் காகிதத்தைக் கீழே வைத்துவிட்டுப் படித்ததைக் கூடியவரையில் கவனப்படுத்திக்கொண்டு எழுதுங்கள்.

அடுத்தபடியாக நண்பர் எவரையாவது இரண்டாம் பாராவைப் படிக்கச் சொல்லிக் கேளுங்கள். முதல் பாராவை நீங்கள் மௌனமாகப் படித்தீர்களே, அதே அளவு நேரம் இதை அவர் உரக்கப் படிக்க வேண்டியது அவசியம்; இதை மறக்கக் கூடாது. இது ஆனதும் நீங்கள் கேட்டதைக் கூடிய வரையில் கவனப்படுத்திக்கொண்டு இன்னொரு காகிதத்தில் எழுதுங்கள். பிறகு முன்னால் எழுதினதை ஒப்பிட்டுப் பாருங்கள். இந்த மாதிரி குறைந்தது மூன்று தரமாவது செய்து பார்க்கவேண்டும்.

முதல்தரம் அரைப் பக்கம் என்றால், இரண்டாந்தரம் முழுப் பக்கம், மூன்றாந்தரம் இரண்டு பக்கம்—இப்படிப் பாராவின் அளவை அதிகரித்துக்கொண்டே போகவேண்டும். படிக்கும்போதும் கேட்கும் போதும் ஒவ்வொரு தரமும் பாராவின் அளவு சமமாக இருக்கவேண்டியது அவசியம்.

இனிமேல் இன்ன வகை என்று கண்டு பிடிப்பது சுலபந்தான். மௌனமாகப் படித்துவிட்டு எழுதியது, காதால் கேட்டு எழுதியதைவிடச் சரியாக இருந்தால் நீங்கள் கண்ணால் கவனிப்பவர் என்றும், அதற்கு மாறாக இருந்தால் காதால் கவனிப்பவர் என்றும் அர்த்தம். செயலால் கவனிப்பவரா இல்லையா என்று தெரிவதற்கு அந்தப் பாராக்களை அப்படியே எடுத்து எழுதிவிட்டு மறுபடியும் கவனப்படுத்திக்கொண்டு எழுதிப் பாருங்கள்.

மற்றவரைப் பரீட்சிக்கும் போது அதைப்பற்றி அவருக்கு முன்னாலேயே தெரியாதிருப்பது நலம்; அப்போது அவர் இன்ன வகை என்று கண்டுபிடிப்பது சுலபம். முன்னால் தெரிவித்தால் அவர் ஜாக்கிரதையாக இருப்பார்; அது சோதனைக்கு இடையூறாக முடியும்.

முதலில் பத்துப் பதங்களை எடுத்துக் கொள்ளலாம். அவற்றைச் சொன்னதும் எதிரே இருப்பவருக்கு என்ன என்ன சொற்கள் ஞாபகத்துக்கு வருகின்றன என்று எழுதச் சொல்லுங்கள். அவை பெயர்ச் சொல்லாகவும் இருக்கலாம்; வினைச் சொல்லாகவும் இருக்கலாம். அதைப் பற்றி அக்கறை இல்லை.

உதாரணமாக, நாம் எடுத்துக் கொள்ளும் பதங்கள்:

(1) கூடம்.
(2) ரொட்டி.
(3) புத்தகம்.

(4) ஓசை.
(5) பட்டை.
(6) ஆறு.
(7) கடிதம்.
(8) பறவை.
(9) கொடி.
(10) குல்லா.

அவர் இந்தப் பதங்களால் தமக்கு ஞாபகம் வந்த சொற்களை ஒன்று இப்படி எழுதலாம்:

(1) படம், காகிதம்.
(2) மாவு, சர்க்கரை.
(3) பக்கம், சித்திரம்.
(4) விசிறி, சங்கீதம்.
(5) ஊசி, நாடா.
(6) தண்ணீர், படகு.
(7) உறை, பேனா, தபால்.
(8) இறகு, முட்டை.
(9) துணி, நிறம், சக்கரம்.
(10) பட்டு, காந்தி.

இல்லாவிட்டால் கீழ்க் கண்டபடி எழுதலாம்:

(1) மாடம், லாடம், குதிரை.
(2) புட்டி, சட்டி.
(3) மத்தளம், குத்தகை, நிலம்.
(4) ஆசை, தோசை, அப்பளம்.
(5) மட்டை, முட்டை, கோழி.
(6) ஊறு, கிணறு.
(7) மடிதல், படிதல்.
(8) கறவை, சிலுவை.
(9) செடி, தடி.
(10) அல்லா, சல்லா.

முதலில் சொன்னபடி எழுதினால் பெரும்பாலும் கண்ணால் கவனிப்பவர் என்றும் இரண்டாவது சொன்னபடி எழுதினால் பெரும்பாலும் காதால் கவனிப்பவரென்றும் கொள்ளவேண்டும். இன்னும் சற்று ஆராய்ந்து பார்த்தால் இன்னார் இன்ன அளவுக்கு இன்ன வகையைச் சேர்ந்தவர் என்றுகூடக் கண்டுபிடித்து விடலாம்.

சோதனையும் பலனும்

போனகிராப், எலெக்ட்ரிக் பல்பு முதலிய அபூர்வக் கருவிகளைக் கண்டுபிடித்தவர் தாமஸ் ஆல்வா எடிஸன். ஆனால், விஞ்ஞான சோதனைகளில் அவருக்கு ஏற்பட்ட தோல்விகளை எண்ணி முடியாது. உதாரணமாக, 50,000 சோதனைகளுக்குப் பிறகுதான் ஒரு புதிய ஸ்டோரேஜ் பாட்டரியை அவரால் செய்ய முடிந்தது.

"இந்த அல்ப பலனுக்காகப் பல்லாயிரக்கணக்கான சோதனைகளா?" என்று அவருடைய சிஷ்யர் ஒருவர் பெருமூச்சுவிட்டார்.

"தம்பீ, பலனா? பல்லாயிரக் கணக்கான முறைகளைச் சோதித்ததில் பல்லாயிரக் கணக்கான பலன்கள்தான் நமக்குக் கிடைத்துவிட்டனவே. அதாவது, அந்தப் பல்லாயிரக் கணக்கான முறைகளும் பிரயோஜனம் இல்லை என்பதை நாம் கண்டுகொண்டோம்" என்றார் எடிஸன்.

அமெரிக்கரின் காந்தி பக்தி

நாடிக கிருஷ்ணமூர்த்தி



1947 ஆகஸ்ட் 15-ஆம் தேதி அன்று அமெரிக்க மக்கள் காட்டிய உற்சாகத்தை நான் மறக்கவே முடியாது. இந்தியாவுக்குக் கிடைத்த சுதந்தரம் தங்களுக்குத்தான் கிடைத்துவிட்டது போல் எண்ணிக் கூத்தாடினார்கள்.

மிஸ்ஸௌரி மாகாணத்திலே கொலம்பியாவில் நாங்கள் ஆறு பேர்தான் இந்திய மாணவர்கள். அன்றைக்குச் சுதந்தர விழா எங்கள் கல்லூரியில் மிகவும் விமரிசையாக நடந்தது. எத்தனையோ அமெரிக்கர்கள் எங்களுக்கு உதவியாக இருந்து அதை நடத்தி வைத்தார்கள். நியூ யார்க் நகரிலிருந்து மிஸஸ் பெர்ல் பக் கூட வாழ்த்து அனுப்பியிருந்தார்.

அன்று விடியற்காலை ஊர்வலம் முடிந்ததும் நாங்கள் ஆறுபேரும் ஒரு ஹோட்டலுக்குப் போனோம். அன்று நாங்கள் இந்திய உடையையே அணிந்திருந்தோம். நாங்கள் வந்ததும் ஓட்டல் முதலாளி எங்களைச் சந்தோஷமாக வரவேற்றுத் தானே பரிமாறினான். அங்கும் இந்தியாவைப்பற்றிய பேச்சுத்தான். சாப்பிட்டானதும் நாங்கள் பணம் கொடுக்கப் போனோம். ஹோட்டல் முதலாளி புன்சிரிப்போடு, "பணம் வேண்டாம்" என்றான். "ஏன்?" என்று கேட்டோம். அவன், "காந்தியின் நாட்டைச் சேர்ந்தவர்கள் நீங்கள். அவருடைய அஹிம்சை மூலம் உங்களுக்குச் சுதந்தரம் கிடைத்திருக்கிறது. இந்தச் சந்தர்ப்பத்தில் இதுவாவது செய்ய வேண்டாமா?" என்றான். நாங்கள் அவனுக்கு வந்தனம் செலுத்திவிட்டு வெளியே வந்தோம்.

அக்டோபர் 2-ஆம் தேதி அன்று நாடெங்கும் - ஏன், உலகெங்குமே - மகாத்மா காந்தியின் ஜயந்தியைக் கொண்டாடுவார்கள். அவருடைய செல்வாக்கு டாலர் நாடான அமெரிக்காவிலுங்கூட எவ்வளவு பரவியிருக்கிறது!

காப்பிரைட்: பிரஜாமதம் (கன்னடம்: 15-8-'49), பெங்களூர்.

அன்று மாலை காந்தி, நேரு முதலிய தலைவர்களுக்குச் சுதந்தர தினத்தை யொட்டித் தந்தி கொடுக்க 'வெஸ்டர்ன் யூனியன்' கட்டிடத்துக்குப் போனோம். அமெரிக்காவில் தந்தி இலாகா அரசாங்கத்தைச் சேர்ந்ததல்ல; வெஸ்டர்ன் யூனியன் என்ற பொதுஜன சங்கத்தின் ஆதரவில் நடக்கிறது. தந்தி கொடுத்ததும் பணம் தரப் போனோம். ஆனால் அதன் டைரக்டர் எங்களிடமிருந்து பணம் வாங்கிக் கொள்ள மறுத்துவிட்டார்.

காந்திக்கும் இந்தியாவுக்கும் அமெரிக்கா வித்தியாசம் பாராட்டுவதில்லை; 1948-ஜனவரி கடைசியில் காந்தி மரணம் அடைந்தார் என்று தெரிந்தவுடன் அமெரிக்காவில் ஒவ்வொரு பத்திரிகையிலும், ரேடியோவிலும் மாதாகோயிலிலும் சினிமாக்களிலும் அவரைப்பற்றிய பேச்சும் செய்தியுமாகவே இருந்தது. பதினைந்து நாள்வரைக்கும் எங்கே போனாலும், "காந்தி அவ்வளவு நல்ல மனிதராயிற்றே; அவரையா கொன்றுவிட்டார்கள்?" என்ற பேச்சுத்தான்.

அப்போது அமெரிக்காவில் குளிர் காலம். அன்று பத்து அங்குலம் பனி தெருவில் விழுந்திருந்தது. அந்தக் குளிரிலேயே அநுதாபக் கூட்டம் ஒன்று கூட்டினோம். பல சங்கங்கள் எங்களோடு ஒத்துழைத்தன. அப்போது எங்கள் சர்வ கலாசாலையின் தலைவரான டாக்டர் பிராட்லி, மகாத்மாவின் உருவப்படத்தைத் திறந்து வைத்து அவரைப்பற்றிப் பேசினார். இந்தியர்களின் சார்பாக மகாத்மாவைப்பற்றிப் பேசும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. நடுக்கும் குளிரையும் பொருட்படுத்தாமல் எத்தனையோ பேர் வந்திருந்தார்கள்.

பிப்ரவரி 19-ஆம் தேதி புதுடில்லியிலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதை ஆர். ஆர். திவாகர் எழுதியிருந்தார். அவர் அப்போது மந்திரியாக இல்லை. கவர் கொஞ்சம் கனத்தது. அதை உடைத்தேன். அதில் மற்றொரு சிறு கவர் இருந்தது. உலர்ந்த பூ இதழ்கள் லேசாக அந்தக் கவருக்குள்ளிருந்து தெரிந்தன. கடிதத்தைப் படிக்கும் அவசரத்தைவிட அந்தக் கவரில் என்ன இருக்கிறதென்று பார்க்க வேண்டும் என்ற ஆவலே அதிகமாக ஏற்பட்டது. இருந்தாலும் அதைப் படித்தேன்.

"காந்தியின் புனிதமான சடலத்தின் பஸ்மத்தையும் அதன் மேல் இருந்த புஷ்பங்களையும் இதோடு அனுப்பியிருக்கிறேன்'' என்று இருந்தது.

என் கை கிடுகிடுவென்று நடுங்கியது. அந்தப் புனிதயான வஸ்துவைப் பத்திரமாக மேஜைமேல் வைத்தேன். சமாதிபோல் அலங்காரம் செய்தேன். என் இந்திய நண்பர்களுக்குத் தெரிவித்தேன். ஊர் முழுதும் மின்னல் வேகத்தில் இந்தச் செய்தி பரவிவிட்டது. நூற்றுக்கணக்கான பேர் என் அறைக்கு வந்தார்கள். மெல்போர்ன் தெரு 301-ஙெ. வீடு சில நாள் வரையில் யாத்திரை ஸ்தலமாக விளங்கியது. ஒவ்வொருவராக அங்கே வந்து மரியாதை செலுத்திவிட்டுப் போனார்கள். சிலர் பழங்களையும் புஷ்பங்களையும் சமர்ப்பித்தார்கள். சிலர் அங்கே அமர்ந்து பைபிளிலிருந்து சில சுலோகங்களை எடுத்து ஓதினார்கள். இன்னும் சிலர் ஒன்றும் பேச முடியாமல் அங்கேயே நின்றுகொண்டிருந்தார்கள். அந்தக் காட்சியைக் கண்டு

நான் பிரமித்துப் போனேன். அமெரிக்கப் பத்திரிகை நிருபர்களைக் கேட்க வேண்டுமா? சிலர் விவரங்களைக் கேட்டு எழுதிக் கொண்டார்கள். இன்னும் சிலர் மகாத்மாவின் சடல பஸ்மத்தைப் படம் பிடித்துக்கொண்டார்கள். மறு நாள் பத்திரிகைகளில், 'மகாத்மாவின் பஸ்மத்தை அமெரிக்காவில் முதல் முதல் பெற்ற இந்தியர்'' என்று என்னைப்பற்றி வெளியிட்டார்கள். அன்று மாலை மறுபடியும் ஏராளமான பேர் என் அறையில் வந்து குவிந்துவிட்டார்கள்.

"காந்தி ஒரு தடவையாவது அமெரிக்காவுக்கு வந்திருக்க வேண்டும்" என்றாள் ஒரு தொண்டு கிழவி.

"நாம் அந்தப் புண்ணியம் பண்ணவில்லை!'' என்றாள் இன்னொருத்தி.

"காந்தி வராவிட்டாலும் அவருடைய தத்துவம் வந்திருக்கிறதே!'' என்றார் ஒரு பாதிரி.

"அஹிம்சை மார்க்கம் உலகத்துக்கே சாந்தி தருமானால், இந்தியாவுக்குப் போய் அதைக் கற்று வருவோம்" என்றான் ஒரு மாணவன்.

ஏப்ரல் 26-ஆம் தேதி விடியற்காலை 'வாரண்டன் பயோனிர்' என்னும் தினசரியின் ஆசிரியரான ஹோல்ட்மனும் அவர் மனைவியும் என்னைக் காண வந்தார்கள். கொலம்பியாவிலிருந்து 60 மைல் தூரத்தில் இருப்பது வாரண்டன் என்ற ஊர். அங்கே வியாபார சங்கத்தார் மாதம் ஒரு முறை சபை கூடுவார்கள். அந்த ஆசிரியர் அதன் காரியதரிசி. அந்தத் தடவை நடக்கும் கூட்டத்துக்கு என்னை முக்கிய விருந்தாளியாக வரும்படி அழைத்தார். காந்தியைப்பற்றிப் பேச வேண்டுமென்று சொன்னார்.

சரியாக 6-மணிக்குச் சபை கூடியது. முதல் முதல் போஜனம்; "நான் மாமிசம் சாப்பிடுவதில்லை" என்றதும் அவர்களுக்கெல்லாம் ஆச்சரியமாக இருந்தது. முன்னே பேசக் கொஞ்சம் பழக்கம் ஏற்பட்டுவிட்டது; அதனால் மகாத்மாவைப் பற்றித் தங்கு தடையில்லாமல் பேச ஆரம்பித்துவிட்டேன். நிச்சப்தமாக எல்லாரும் அமர்ந்திருந்தார்கள். சபையிலிருந்து நடுவில் ஒருவராவது வெளியேறவில்லை. சுமார் இரண்டு மணிநேரம் பேசினேன். பிறகு சபையோர், இந்தியா, காந்தி, அஹிம்சை, கயிற்று வித்தை, இந்திய விவாகம், ஜாதி வழக்கம் இவைகளைப்பற்றிச் சரமாரியாகக் கேட்க ஆரம்பித்தார்கள். சபை கலையும்போது இரவு பதினொரு மணி ஆகிவிட்டது. என்னை வழியனுப்புவதற்காக அவர்களெல்லாருமே பஸ் ஸ்டாண்டு வரைக்கும் வந்திருந்தார்கள். அதற்குள்ளாகவே பலர் பழவகைகளைக் கொண்டுவந்து எனக்குக் கொடுத்தார்கள். பஸ் புறப்பட மூன்று நிமிஷ நேரத்துக்குமுன் ஹோல்ட்மன், கவர் ஒன்றில் நூறு டாலர் (350 ரூபாய்) நோட்டு வைத்து, "எங்களால் ஆனது இவ்வளவுதான். உங்கள் சிரமத்துக்கு இதை விட அதிகம் கொடுக்க முடியவில்லை. இதை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்றார். இதை நான் எதிர்பார்க்கவேயில்லை. காரில் அழைத்து வந்து, சிற்றுண்டி கொடுத்துப் பிரசங்கம் செய்யச் சொல்லி, 100 டாலரும் கொடுத்து அனுப்புவது விந்தைதானே? நூறு மைல் தூரத்தில் ஸ்டேட்டர் என்று ஒரு நகரம். அங்கே இருந்த பன்னிரண்டு மாதா கோயில் அதிகாரிகளும் சேர்ந்து ஞாயிற்றுக்கிழமை

பிரார்த்தனை சபையை ஒரே இடத்தில் கூட்டியிருந்தார்கள். அன்று காந்தியைப்பற்றிப் பேசவேண்டும் என்று என்னைக் கேட்டிருந்தார்கள். மகாத்மாவின் உருவப்படம் ஒன்றை அவர்களுக்குக் கொடுத்தேன். கூட்டத்துக்கு வந்தவர்கள் சந்தேகம் ஏற்பட்டபோது கேள்விகள் கேட்டு அக்கறையோடு விஷயங்களை அறிந்துகொண்டார்கள். அன்றைய சபையில் நான் சர்க்கா சுற்றி நூல் நூற்றதுதான் அவர்கள் கவனத்தை அதிகமாகக் கவர்ந்தது.

மேக்கன் என்ற கிராமத்தில் மகாத்மாவைப்பற்றிப் பேசவேண்டும் என்று அழைத்திருந்தார்கள். அங்கே போன மறுநாள் காலை மாதா கோயில் முழுதும் ஜனங்கள் நிறைந்துவிட்டார்கள். பிரசங்க முடிவில் மகாத்மாவை ஏசுகிறிஸ்துவோடு ஒப்பிட்டேன். என் அருகிலே அமர்ந்திருந்த அந்த ஊர்ப் பாதிரி, "காந்தியோ மனிதப் பிறவி. ஏசு அவதார புருஷர். அவரோடு எப்படி நீங்கள் காந்தியை ஒப்பிடலாம்?" என்று ஆட்சேபித்தார். நான் அடக்க ஒடுக்கமாகவே, "ஏசு கிறிஸ்துவின் சில தத்துவங்களைக் காந்தி ஒப்புக்கொண்டு, அவற்றைக் கடைப்பிடித்திருக்கிறார்; அதனால்தான், ஏசுவோடு அவரை ஒப்பிட்டேன். இதில் தவறு என்ன இருக்கிறது?" என்றேன். அங்கே கூடியிருந்தவர்கள், "அது உண்மைதான்" என்றார்கள். ஆனால் பாதிரி மட்டும் கோபித்துக்கொண்டு சபையிலிருந்து எழுந்து போய்விட்டார். நான் மேலும் தொடர்ந்து பிரசங்கம் செய்தேன். அப்போது, "மகாத்மா காந்தியும் பிற இந்தியத் தியாகிகளும்" என்ற என் புத்தகம் பிரசுரமாகி யிருந்தது. அதன் 50 பிரதிகளை அங்கே கொண்டுபோயிருந்தேன். பாதிரியினுடைய கோபத்தின் பலனாக அத்தனையும் உடனே விற்பனையாகிவிட்டன!

சமீபத்தில் அமெரிக்க சர்க்கார் மகாத்மாவின் ஞாபகச் சின்னம் ஒன்றை வாஷிங்டன் நகரில் நிறுவ அநுமதி கொடுத்திருக்கிறார்கள். மகாத்மாவின் மேல் அமெரிக்கர் வைத்திருக்கும் மதிப்புக்கு இதைவிட வேறு அத்தாட்சி என்ன வேண்டும்?

உங்களுக்கு இன்னும் எத்தனை வயது?

உங்களுக்கு என்ன வயது ஆகிறதோ அதை எண்பதிலிருந்து கழியுங்கள். மீதியை ஏழால் பெருக்குங்கள். பெருக்கி வந்த தொகையைப் பத்தால் வகுங்கள். வகுத்து என்ன தொகை ஈவு வந்ததோ, அதுதான் ஏறக்குறைய உங்களுடைய மீதி ஆயுள்.

அது மிகவும் கொஞ்சமாக இருக்கும்பட்சத்தில் வாழ்க்கை இன்பங்களை இப்போதே நன்றாக அநுபவியுங்கள்; நீங்கள் அநுபவிப்பதோடு மற்றவர்களுக்கும் உங்களால் முடிந்த நன்மையையெல்லாம் செய்யுங்கள்.

—மேரியன் ரிச்சர்ட்ஸ்

இன்பம்

இன்பத்தை எண்ணலாம், விரும்பலாம், அடையலாம்; ஆனால் விலைக்கு வாங்க முடியாது. —'மகஸீன் டைஜெஸ்ட்

உலகத்திலே பிரசித்தமும் பழமையும் வாய்ந்த இந்த விளையாட்டிலே பல விசித்திரங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

ஒலிம்பிக் விளையாட்டு

எஸ். ஜே. டி.

1924-இல் பாரிஸ் நகரத்திலே ஒலிம்பிக் விளையாட்டு நடந்தது. அந்தத் தடவை வெகுதூரம் ஓடுவதில் ஜயித்தவர் ஏ. ஓ. ஸ்டென்ரூஸ். இவர் பின்லாந்துக்காரர். மொத்த தூரம் 26 மைல் 385 கஜம். ஸ்டென்ரூஸ் 2 மணி 41 நிமிஷம், 22·6 விநாடிக்குள் அவ்வளவு தூரம் ஓடி யிருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். இத்தனைக்கும் அவருக்குக் குஸ்தி போட வருமே தவிர ஓடிப் பழக்கமில்லை. இதில் இன்னும் ஒரு விசேஷம் என்னவென்றால், முன்னே எப்போதோ ஒரு சமயம் அவருக்குக் கால் ஒடிந்திருக்கிறதாம்; அப்படி இருந்தும் மற்றவர்களுக்கு ஆறு நிமிஷம் முந்தியே தாயச்சிக்கு வந்து சேர்ந்துவிட்டாராம்!

1904-இல் நடந்த இன்னொரு விசேஷம் இது: ஹாவானு என்ற ஊரில் பெலிக்ஸ் கர்ராஜால் என்று ஒரு தபால்காரன் இருந்தான். அந்தத் தடவை ஸெயிண்ட் லூயி என்ற இடத்தில் ஒலிம்பிக் விளையாட்டு நடக்க ஏற்பாடாகி யிருந்தது. இந்த விஷயம் எப்படியோ பெலிக்ஸுக்கு எட்டியது. ஆள் என்னவோ சோனிதான்; இருந்தாலும் இவனுக்கு உற்சாகம் அதிகம் உண்டு. உடனே தான் க்யூபாவின் பிரதிநிதியாக ஒலிம்பிக் விளையாட்டில் கலந்துகொண்டு விட்ட மாதிரியும் அதில் ஜயித்துவிட்ட மாதிரியும் எண்ணிக்கொண்டான். ஆனால் ஏழைத் தபால்காரன்தானே, அங்கே போக இவன் கையில் காசு ஏது? இருந்தாலும் தான் நினைத்த காரியத்தை நிறைவேற்றுவது என்று தீர்மானித்துவிட்டான். உடனே வேலையை ராஜீநாமா செய்தான். ஊர் நடுவில் ஒரு பெரிய சதுக்கம் இருந்தது. அதில் ஓடப் பழகிக்கொண்டான். முதல் நாள் அநேகம் பேர் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டார்கள். இதுதான் சமயம் என்று பெலிக்ஸ் ஒரு சுவரின் மேல் ஏறி நின்றுகொண்டான். தன் விருப்பத்தைத் தெரிவித்து வழிச் செலவுக்குப் பணம் தேவை என்று உரக்கக் கேட்டான். இப்படிச் சில நாள் செய்து வந்தான். கையில் கொஞ்சம் பணம் சேர்ந்தது. ஆனால் அது ஸெயிண்ட் லூயிக்குப் போகத்தான் சரியாக இருக்கும் என்று தெரிந்தது. எதற்கும் புறப்பட்டுப் போவது என்று தீர்மானித்தான். இவனுடைய துரதிருஷ்டம், பாதி வழியில் சில கெட்ட சகாக்கள் சேர்ந்தார்கள். சூதாட்டத்தில் கையில் இருந்த கொஞ்சம் பணத்தையும் தோற்றுவிட்டான். துணியோ கிழிந்துவிட்டது! வயிற்றுக்கு இல்லாமல் தவித்ததால் உடம்பில் சோர்வு. இந்த நிலையில் எப்படியோ தள்ளாடிக்கொண்டே ஸெயிண்ட் லூயிக்கு வந்து சேர்ந்

காப்பிரைட்: ஸ்போர்ட் அண்டு பாஸ்டைம் (ஆங்கிலம்: 20-8-'49), சென்னை.

தான். கனம் தூக்கும் பந்தயத்தில் கலந்துகொள்ள அங்கே சில அமெரிக்கர்கள் வந்திருந்தார்கள். இந்தச் சோனியைப் பார்த்ததும், என்ன காரணமோ, அவர்களுக்குப் பிடித்துவிட்டது. இவனைத் தங்களோடு இருக்கச் சொன்னார்கள்: வேண்டிய வசதிகளும் செய்து கொடுத்தார்கள்.

பந்தய நாள் வந்தது. பெலிக்ஸ் நீளமாக ஒரு நிஜாரும் சட்டையும் போட்டுக்கொண்டு அவர்கள் எதிரே காட்சி யளித்தான். ஓடும்போது இப்படி இருந்தால் சரிப்படுமா? அதனால் அந்த அமெரிக்கர்கள் இவன் நிஜாரையும் சட்டையையும் கத்தரித்துக் குட்டையாக்கினார்கள். லேசாகத் தள்ளிக்கொண்டே புறப்பட்டான் பெலிக்ஸ். மேலே வெயில் தீய்த்தெடுத்தது. பக்கத்தில் மோட்டார் எழுப்பும் தூம்பு வேறு சேர்ந்து எல்லாருக்கும் மூச்சுத் திணறியது. ஆனால் இவன்மட்டும் வழி முழுதும் சிரித்துக்கொண்டும் தமாஷ் செய்து கொண்டும் ஓடினான். இவனைவிட இரண்டு மடங்கு உயரமும் பருமனும் உள்ள ஆசாமிகளெல்லாரும் கூட மண்ணைக் கவ்விவிட்டார்கள். கடைசியாக, அந்தப் பந்தயத்தில் நாலாம் ஆசாமியாக வந்து சேர்ந்தான். அதில் ஜயித்தவன்கூட ஏதோ மயக்கத்தில் இருக்கிறவன் மாதிரி ஓடினானே தவிர, இவனைப் போல் அலுப்புத் தட்டாமல் ஓடவில்லை. இத்தனைக்கும் பெலிக்ஸுக்கு முன் பின் அப்படி ஓடிப் பழக்கமில்லை; சரியான உணவும் இல்லை; எந்த விதமான யுக்தியும் தெரியாது. எப்படி இவன் துளி கூடச் சிரமம் இல்லாமல் அவ்வளவு தூரம் ஓடினான்? அதுதான் ஆச்சரியம்!

ஒலிம்பிக் விளையாட்டில் வெகு தூரம் ஓடுவதற்கு 'மாராதன்' என்று சொல்லுவார்கள். ஆதி நாளில் மாராதன் என்ற இடத்தில் அந்நிய சாதியாரைக் கிரேக்கர்கள் எதிர்த்து நின்று வென்றார்கள். பிடிப்பைடிஸ் என்பவன் வெற்றிச் செய்தியை விரைவில் ஊராருக்குத் தெரிவிக்கப் போர்க்களத்திலிருந்து ஏதென்ஸுக்கு ஓடி வந்தானும். இதனால் தான் வெகு தூரம் ஓடும் பந்தயத்துக்கு அந்தப் பெயர் வந்தது. மாராதனிலிருந்து ஏதென்ஸுக்குச் சுமார் 25 மைல். ஆனால் இப்போது நடக்கும் ஒலிம்பிக் ஓட்டப் பந்தயத்தில் முழு எண்ணாக இராமல் 26 மைல் 385 கஜம் என்று சொச்சமாக வைத்துக்கொண் டிருக்கிறார்களே; அது ஏன் தெரியுமா?

முதல் ஒலிம்பிக் விளையாட்டு ஏதென்ஸில் ஆரம்பமானபோதும் பின்னால் மூன்றுதரம் அது வெவ்வேறு இடங்களில் நடந்தபோதும் இந்தத் தூரத்தின் அளவு 25 மைலாகத்தான் இருந்தது. 1908-இல் லண்டனில் நடந்தபோதுதான் இப்படிப் புது விதமாக மாற்றினார்கள். விண்ட்ஸர் கோட்டை மைதானத்திலிருந்து லண்டன் வரை ஓடுவது என்று பிரிட்டிஷார் தீர்மானித்தார்கள். அப்போது வேல்ஸ் இளவரசராக இருந்த ஜார்ஜ் இதை ஆரம்பித்துவைத்தார். இரண்டுக்கும் இடையில் உள்ள தூரம் 26 மைல் 385 கஜம். இதையே பின்னால் நிரந்தரமாக வைத்துக்கொண்டார்கள். அந்தத் தடவை எதிர்பாராதபடி டோரண்டோ என்பவர் இந்த ஓட்டப் பந்தயத்தில் ஜயித்துவிட்டார். ஆனால் இந்த $1\frac{1}{4}$ மைல் கூடுதலாக இராதிருந்தால் அதில் யார் ஜயித்திருப்பார்களோ சொல்லவே முடிந்திராது.

குறைந்த அளவு தூரம் வேகமாய் ஓடுவதற்கு 'ஸ்ப்ரிண்ட்ஸ்' என்று பெயர். ஆலன் உட்ரிங் என்பவர் இதில் தேர்ந்தவர். 1920-இல் அமெரிக்க ஒலிம்பிக் கோஷ்டியில் முதலில் இவரைச் சேர்த்துக் கொள்ளவில்லை. ஆனால் எதற்கும் கையிருப்புக்கு ஓர் ஆள் வேண்டும் என்று பின்னால் இவரை அழைத்துக்கொண்டு போனார்கள். ஆண்ட்வெர்ப் நகருக்கு வந்து சேர்ந்தார் ஆலன். அங்கே ஓடப் பழகிக் கொண்டிருக்கும்போது ஜோடு பிய்ந்துவிட்டது. இந்த ஓட்டப் பந்தயத்தில் ஜோட்டின் கீழ் ஆணி வைத்துத் தைத்திருக்கும். பிறகு யார் ஜோட்டையோ இரவல் வாங்கிக்கொண்டார் ஆலன். ஆனால் அதில் உள்ள ஆணிகள் முன்னதை விட இரண்டு மடங்கு நீளமாக இருந்தன. புறப்படும்போது, 'ஓட முடியுமோ முடியாதோ?' என்று திகிலாகத்தான் இருந்தது இவருக்கு. ஆனால் அங்கே மழை பெய்து தண்ணீர் ஊறியிருந்ததால் இவர் பாடு சௌகரியமாகப் போய் விட்டது. அந்தத் தடவை இவருக்குத்தான் ஜயம்.

1906-இல் ஒலிம்பிக் விளையாட்டிலே கலந்துகொள்ள அமெரிக்காவிலிருந்து ஒரு கோஷ்டி புறப்பட்டது. அதில் ஹாரி ஹில்மான் போன்ற பெரிய பெரிய ஆசாமிகளெல்லாம் இருந்தார்கள். பால் பில்க்ரிம் என்ற வாலிபனுக்கு அவர்களோடு தானும் புறப்பட வேண்டுமென்று ஆசை. ஆனால் செலவுக்குப் போதுமான பணம் கையில் இல்லை; அதனால் அவனை அவர்கள் சேர்த்துக்கொள்ளவில்லை. இருந்தாலும் பால் சும்மா இல்லை. எப்படியோ கொஞ்சம் பணம் சேர்த்துக்கொண்டு அவர்களோடு புறப்பட்டுவிட்டான்.

அந்தத் தடவை ஏதென்ஸில் ஒலிம்பிக் விளையாட்டு நடந்தது. 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் அதற்கு முன்னே ஒருதரம் ஜயித்தவர் ஹில்மான். அவரும் இரண்டு ஆஸ்திரேலியர்களும் வெகு தூரம் முந்திவிட்டார்கள். திடீரென்று ஒல்லியான ஓர் ஆசாமி அவர்களை நெருங்கினான். நாலு பேரும் சமமாக ஓடினார்கள். கடைசி இரண்டு எட்டில் ஒல்லி ஆசாமி ஜயித்து விட்டான். அவன் வேறு யாருமில்லை; பால் பில்க்ரிம்தான்; மறுநாள் நடந்த 800 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும் அவனுக்குத்தான் ஜயம்.

1908-இல் நடந்த 100 மீட்டர் ஓட்டப் பந்தயத்திலும் வாக்கர் என்ற தென்னாப்பிரிக வாலிபன்தான் ஜயித்தான்; பள்ளிக்கூடத்தில் படிக்கும் பையன்: அவனுக்கு வயது அப்போது 19தான்.

1906-இல் அமெரிக்க கோஷ்டியில் கடைசியாகச் சேர்த்துக் கொண்ட ஆசாமிகளில் ஜார்ஜ் போன்ஹாக் என்பவரும் ஒருவர். இவர் 5 மைல் ஓட்டப் பந்தயத்தில் தோற்றுவிட்டார். இருந்தாலும் சளைக்கவில்லை. 1500 மீட்டர் நடைப் பந்தயத்தில் கலந்துகொள்வது என்று முடிவு செய்தார். அங்கே கானடாக்காரர் ஒருவர் இவருக்குச் சிநேகமானார். அவரைக் கேட்டுச் சில விஷயங்களை இவர் தெரிந்து கொண்டார். இங்கிலாந்து கோஷ்டியைச் சேர்ந்த வில்கின்ஸன்தான் இந்தப் பந்தயத்தில் ஜயிப்பார் என்று எல்லாரும் பேசிக்கொண்டார்கள். கிரீஸ் இளவரசரை இதற்கு மத்தியஸ்தராக நியமித்திருந்தார்கள். அவர் மிகவும் நெட்டை; 6 அடி 5 அங்குல உயரம். முதல் சுற்றிலேயே ஓடின

காரணத்தால் ஒவ்வொருவராகத் தள்ளுபடியாகிக்கொண்டே வந்தார்கள். பாதி தூரம் போய்க்கொண்டிருக்கும்போது ஜார்ஜ் போன்ஹாக்கும் வில்கின்ஸனும் இன்னும் சில பேருந்தான் மிஞ்சினார்கள். வில்கின்ஸன் ஜார்ஜுக்கு 200 கஜ தூரம் முன்னே இருந்தார். சட்டென்று, வில்கின்ஸன் ஓடினதாகப் படவே, கிரீஸ் இளவரசர் கிரேக்க பாஷையில் அவரை விலகிப் போகும்படி உத்தரவிட்டார். இளவரசர் சொன்னது புரியாத மாதிரி வில்கின்ஸன் இன்னும் போய்க்கொண்டேயிருந்தார். அடுத்த சுற்றில் இளவரசரே வந்து குறுக்கே நின்று விட்டார். வேறு வழியில்லாமல் வில்கின்ஸன் தள்ளிப் போய் உட்கார்ந்தார். வயிறு வெடிக்கச் சிரித்துக்கொண்டே ஜார்ஜ் போன்ஹாக் மற்றவர்களுக்கெல்லாம் முன்னாலே வந்து சேர்ந்தார். முன் பின் தெரியாத விளையாட்டில் அவர் ஜயித்தது விசேஷந்தானே?

உபாத்தியாயர்

தன் குடிகளுக்குள் மற்ற எல்லாரையும்விட யார் மேலானவரோ அவரைக் கௌரவிக்கவேண்டும் என்று ஓர் அரசனுக்கு விருப்பம். அதற்காக அவன் சபை ஒன்று கூட்டினான்.

பல துறைகளில் பிரசித்தி பெற்றவர்கள் அங்கே வந்திருந்தார்கள். ஒவ்வொருவரைப்பற்றியும் அரசன் விசாரித்துக்கொண்டே வந்தான்.

முதலில் ஒரு கனவான் வந்து நின்றார். "இவர் யார்?" என்று அரசன் கேட்டான்.

"இவர் பெரிய வியாபாரி. இவர் சம்பாதித்திருக்கிற அளவு சொத்து இந்த உலகத்தில் வேறு யாருமே சம்பாதிக்கவில்லை" என்று அவரை மந்திரி பிரமாதமாக ஸ்தோத்திரம் செய்தார்.

"சரி. அடுத்தபடி யார்?"

பிறகு ஒருவர் வந்து நின்றார்.

"இவரிடத்தில் என்ன விசேஷம்?"

"இவரைப்போல் சட்ட நுணுக்கம் தெரிந்தவர் இந்தப் பூலோகத்திலேயே வேறு எவரும் இல்லை" என்று அவரை மந்திரி புகழ்ந்தார்.

"சரி. அடுத்தது யார்?"

அப்போது மற்றொருவர் வந்து நின்றார்.

"இவர் சாட்சாத் தன்வந்தரியின் அவதாரம். இவர் தொட்டுத் தேறாத நோயாளியே இல்லை" என்று அவரைப்பற்றிச் சிலாக்கியமாகக் கூறினார் மந்திரி.

கடைசியாக ஒரு கிழவர் மெலிந்த உடம்பும் கிழிந்த ஆடையுமாகத் தள்ளாடிக்கொண்டே அரசன் எதிரில் வந்து நின்றார்.

"இவர் யார்?" என்று கேட்டான் அரசன்.

"இப்போது வந்தார்களே அந்த மூன்று பேருக்கும் கல்வி போதித்த உபாத்தியாயர் இவர்" என்று பதில் சொன்னார் மந்திரி.

சபையில் கூடியிருந்த ஜனங்களெல்லாரும் சந்தோஷ ஆரவாரம் செய்தார்கள்.

அரசன் தன் சிம்மாசனத்திலிருந்து இறங்கி அவரை வணங்கி மரியாதை செய்து கௌரவித்தான்.

ஒவ்வொரு வருஷமும் இரண்டு சனியோடு முடிய வேண்டுமாம்; விஷயம் ஐ. நா. சங்கத்திலும் அடிபடப் போகிறதாம்!

காலண்டர் சீர்திருத்தம்

தேதி காட்டும் காலண்டர் என்னவோ என்றென்றும் நம்மிடம் இருந்துகொண்டிருக்கிறது. என்றாலும், அதைத் தர்க்க சாஸ்திரத்துக்கிசைய ஒழுங்குபடுத்திச் சீர்திருத்தம் செய்ய, ஒவ்வொரு காலத்திலும் எவராவது சிலர் கிளம்பிக்கொண்டேயிருக்கிறார்கள். நமக்குப் பழக்கமாயிருக்கின்றனவே வருஷம், மாதம், தேதி - இவைகளை அநுசரித்து உலக நிர்வாகம் சீர்கேடாக நடப்பது இந்தச் சீர்திருத்தக்காரர்களுக்குச் சகிக்கவில்லை. ஜூலியஸ் ஸீஸருக்கு வாரிசாக இவர்கள் கிளம்புகிறார்கள்.

வருஷம் ஒன்றுக்கு $365\frac{1}{4}$ நாள் என்று குறித்தவர் ஜூலியஸ் ஸீஸர்தான். இப்படிக் கால் நாளைச் சேர்த்த பிறகுங்கூடச் சரிப்படவில்லை. வருஷம் ஒன்றுக்கு 11 நிமிஷம் 10 ஸெகண்டு 'நஷ்டம்' ஆகத் தொடங்கியது. அதன்மேல் 1582-இல் கிரிகோரியன் காலண்டர் அமலுக்கு வந்தது. அதற்குப் பிறகு 175 வருஷத்துக்கெல்லாம் இங்கிலாந்து இன்னும் ஒரு சீர்திருத்தம் செய்தது. அதன் பயனாக வருஷம் ஒன்றுக்கு 365 நாள் 5 மணி 49 நிமிஷம் 12 செகண்டு என்ற கணக்கு ஏற்பட்டது. இதுதான் நமக்கு இப்போது உபயோகப்பட்டு வரும் (அல்லது அவதி கொடுத்து வரும்) காலண்டர். நாலு வருஷத்துக்கொரு தடவை லீப் ஈயர் வந்து நமக்கு ஒரு நாளைத் தானம் வழங்கி விட்டுப் போகிறது. இந்தச் சில்லறை ஏற்பாடெல்லாம் பெரிய அவந்தரையாக இருக்கிறது. அதனால், உண்மையான கணித மேதாவிகளுக்குப் பிடிக்கவில்லை. அப்பழுக்குச் சொல்ல முடியாத ஓர் ஏற்பாடு வேண்டும் என்று அவர்கள் விரும்பினார்கள். அவர்களில் சிலர் மகா உற்சாகிகள்; பிரஞ்சுப் புரட்சியிலே பிரபலமாய் விளங்கியவரும் சிலர். இப்படி ஒரு பரிபூர்ணச் சீர்திருத்தம் செய்ய முன்பே அவர்கள் ஒரு மூச்சுப் பிடித்துப் பார்த்தார்கள். அவர்கள் பேச்சுக்கு உலகம் செவி கொடுக்கவில்லை. உலக காலண்டர் அஸோஸியேஷன் செய்த முயற்சி யெல்லாம் ஜெனிவா நகரில் மண்ணாய்ப் போய்விட்டது. என்றாலும், இப்போது சில வீரர்கள் மீண்டும் கிளம்பியிருக்கிறார்கள். விஷயத்தைக் கடைசிவரையில் ஒரு கை பார்த்து விடுவது என்று இவர்கள் திட உறுதி கொண்டிருக்கிறார்கள். ஆரம்ப வெற்றியும் சிறிது இவர்களுக்குக் கிடைத்திருக்கிறது.

தென் அமெரிக்காவைச் சேர்ந்த ஈக்வடார் என்ற குடியரசின் தலைநகரான க்வைட்டோ என்னும் இடத்தில் அகில அமெரிக்கப் பத்திரிகை மகாநாடு ஒன்று சமீபத்தில் நடைபெற்றது. பனமா

மூலம்: ஹிந்து (ஆங்கிலம்: 5-9-'49), சென்னை.

என்ற குடியரசிலிருந்து வந்த பிரதிநிதி, காலண்டர் சீர்திருத்தம் பற்றிய ஒரு திட்டம் பிரேரித்தார். அதை மிகப் பெரும்பாலான பிரதிநிதிகள் ஆதரித்தார்கள். அந்த நாட்டின் சர்க்கார் இந்த விஷயத்தை ஐ. நா. ஜெனரல் அசெம்பிளியின் அடுத்த கூட்டத்தில் கிளப்பப்போகிறதாம். திட்டத்துக்கு இப்போதே பதினேழு இதர சர்க்கார்களின் ஆதரவு கிடைத்திருக்கிறதாம்.

நமது சூரிய மண்டல வருஷத்துக்கு 365·2422 நாட்கள் என்பதே அந்தக் திட்டத்தின் அடிப்படை. எனவே, வருஷத்தைச் சரி சமமான நாலு கால் வருஷங்களாகப் பிரிக்கிறார்கள். ஒவ்வொரு கால் வருஷத்துக்கும் மூன்று மாதங்கள், அல்லது 13 வாரங்கள் அல்லது 91 நாட்கள். ஒவ்வொரு கால் வருஷத்திலும் முதல் மாதத்துக்கு 31 நாள்; மற்ற இரண்டு மாதங்களுக்கும் தனித்தனி 30 நாள். ஒவ்வொரு கால் வருஷமும் ஒரே விதமாய் ஞாயிற்றுக்கிழமையில் ஆரம்பித்து, சனிக்கிழமை முற்றுப்பெறும். இதனாலெல்லாம் காலண்டர் மிகவும் கச்சிதமாய்ப் போய்விடும். அது மாத்திரம் அல்ல; ஒவ்வொரு வருஷமும் மற்ற வருஷங்களைப் போலவே இருப்பதோடு, இன்ன மாதம் இன்ன தேதி என்றால் இன்ன கிழமைதான் என்ற நிச்சயமும் ஏற்பட்டு விடும். அதனால், நமது காலக் கணக்கெல்லாம் மிகவும் சுலபம் ஆகிவிடும்; நிர்வாகிகளுக்கும் புள்ளி விவர நிபுணர்களுக்கும் நேரமும் பணமும் வெகுவாக மிச்சப்படும். இந்த அகில லோக காலண்டருக்கு 364 (91×4) நாள். கடைசியில் துண்டு விழும் ஒரு நாளை டிசம்பர் கடைசியில் ஒட்டிவிட வேண்டியது. இந்த டிசம்பர் 31-ஆம் தேதிக்கு 'உலக நாள்' என்று பெயர் சூட்டி, உலகெங்கும் ரஜா விட்டு விட வேண்டியது. ஆனால், இந்த 'உ. நா.' ஒரு சனிக்கிழமையாதலால், ஒவ்வொரு வருஷமும் இரண்டு சனிக்கிழமைகளோடு முற்றுப் பெறும். இன்றைய லீப் ஈயர் நாள் இருக்கிறதே, இது மற்றொர் 'உலக நாள்'. இதை நாலு வருஷத்துக்கொருதரம் ஜூன் 30-ஆம் தேதி சனிக்கிழமைக்குப் பின்னால் சேர்த்துவிட வேண்டியது. இந்தக் காலண்டரைத் திட்டமிட்டவர்கள் மிகவும் புத்திசாலித்தனமாக மதப் பண்டிகை நாட்களில் தலையிடாது விட்டிருக்கிறார்கள். அவைகளை நிலையானவையாகவோ மாறக் கூடியவையாகவோ அமைத்துக் கொள்ளலாம். அதெல்லாம் நம் இஷ்டத்தைப் பொறுத்த விஷயம்.

ஏற்கனவே சொன்னபடி, இந்தத் திட்டத்தை ஆதரிக்க 17 நாடுகள் சம்மதித்திருக்கின்றன. இன்னும் 24 நாடுகள் இதில் ஊக்கம் காட்டி வருகின்றன. திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறவர்கள் காரியத்தைச் 'சட்பட்'டென்று முடிக்கத் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால், 1951-ஆம் வருஷம் ஒரு ஞாயிற்றுக்கிழமையில் ஆரம்பிக்கிறது. புதிய காலண்டர் அப்போதிருந்தே ஆரம்பித்துவிட்டால் மாறுதல் சுலபமாக உபத்திரவமில்லாமல் நடந்தேறுமாம். (கிரிகோரியன் காலண்டருக்கு இங்கிலாந்து திரும்பியபோது, 11 நாள் நஷ்டத்தை அது சமாளித்துக் கொள்ள வேண்டியதாயிற்று. இந்த விஷயம் இங்கே நினைவில் வைக்கத் தக்கது.)

முந்தியே ஒரு தடவை-அதாவது 1939-இல் - இந்தத் திட்டத்தை

அங்கீகரிக்க உலகம் சித்தமாயிருந்த தாம். ஆனால், சர்வ தேச சங்கம் கெடுத்து விட்டதாம். 1922-ஆம் வருஷத்திலேயே அந்தச் சங்கத் திடம் இந்த விஷயத்தை சொல் லியும் கடைசியாக அது நிராகரித்து விட்டது. இடையிலே அநியாயமாக இரண்டாவது உலக யுத்தம் வந்து தொலைந்தது! 'ஒரே உலகம்' என்ற உணர்ச்சி இன்னும் இந்த மனிதவர்க் கத்துக்கு உண்டாக வில்லையே! தேசிய உணர்ச்சிதான் இன்னும் எங்கும் மல்கிக் கிடக்கிறது. அதன் பலிபீடத்தில் உயிரையும் அர்ப் பணம் செய்யத் தயாராயிருக்கும் மக்களுக்கு எங்கே பல நூற்றாண்டு களாகத் திரண்ட சர்வதேச நட் பின் லாபங்களை அநுபவிக்கத் தெரி யப் போகிறது? சர்வதேச எண் குறிப்புக்கள் சம்பந்தமாக நம் நாட் டில் ஏற்பட்டிருக்கும் விவகாரமே இதற்கு ஒரு சான்றாகும். காலண் டர் சீர்திருத்தக்காரர்களின் மார்க் கம் என்றும் போலவே இன்றும் வெகு கடினமாயிருக்கும் என்று தான் தோன்றுகிறது.

ரெயில் புதுமை

1851-இல் முதல் முதலாக ருஷியாவிலே மாஸ்கோவுக்கும் ஸெண்ட் பீட்டர்ஸ்பர்க்குக்கும் இடையே ரெயில் போட்டார் கள். அப்போது ருஷியாவை ஆண்டுவந்தவர் முதல் நிக்கோலஸ் சக்கரவர்த்தி. நடக்க முடியாத ஏதோ பெரிய அற்புதம் நடந்து விட்ட மாதிரி இதை அவர் எண்ணிக்கொண்டார்; உடனே, "ரெயில்வே ஸ்டேஷனில் நுழையும்போதோ ரெயில் வண்டி யில் பிரயாணம் செய்யும்போதோ ஆண்கள் தலையிலிருந்து ஹாட்டை எடுத்தும் பெண்கள் தலையில் முக்காடிட்டும் மரியாதை செலுத்தவேண்டும்" என்று ஓர் உத்தரவு போட்டு விட்டார். ரெயில் போட்டுப் பல வருஷங்கள் ஆன பிறகும் இந்த உத்தரவு அமலில் இருந்ததாம்.

—'காலியர்ஸ்', ஓஹியோ.

கட்டுப்பாடில்லாத காதல்

ரட்ஜர் யூனிவர்ஸிடி மாணவர் கவுன்ஸில் சட்டதிட்டங் களில் மாறுதல் செய்வதற்காக நாளைக்கு ஓட்டு எடுக்கப் போகிறோம். அதில் எல்லா மாணவர்களும் தவறாமல் ஓட்டுப் போடக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இது கல்லூரி மாணவர்கள் அத்தனை பேரையும் நேரே பாதிக்கக்கூடிய விஷயம். ஆகையால் மாணவர் எல்லாரும் இதில் கூர்ந்த சிரத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

[இந்தத் தலையங்கத்துக்குக் கொடுத்திருக்கும் தலைப்புக்கு மன்னியுங்கள். விஷயம் மிகவும் முக்கியமானது. ஆகையால், யாரும் தவறாமல் இதைப் படிக்கவேண்டும் என்பதற்காகவே இந்தத் தலைப்புக் கொடுத்தோம்.]

—ரட்ஜர் யூனிவர்ஸிடியின் பத்திரிகையான 'டார்கும்' என்பதன் தலையங்கம்.



பரமஹம்ஸர்

பக்திப் பைத்தியம்: தேவியின் தரிசனம் தமக்குக் கிடைக்க வேண்டும் என்று பரமஹம்ஸர் பட்ட அவஸ்தை சிறிதன்று. வேறு எதிலும் நாட்டம் இன்றி, "தாயே, உன் தரிசனத்தை அருளமாட்டாயா?" என்று நைந்து புலம்பி வேசாறிக் கிடப்பார். சரீரத்தைப் பற்றிய எண்ணமே அவருக்கு இராது. நீராட மாட்டார். தலை மயிர் காடுபோல் வளர்ந்து சடையாகிவிட்டது. தியானத்தில் அமர்ந்துவிட்டால் அவர் உடம்புக்கும் கல்லுக்கும் வேற்றுமையே தோன்றாது. உணர்ச்சியற்றுப் போய்விடும். வால்மீகி பகவானைச் சுற்றிப் புற்று எழுந்ததாகக் கதை



சொல்கிறார்கள். பரமஹம்ஸர் தியானத்தில் அமர்ந்தால் அவர் மேலே பட்சிகள் வந்து உட்காரும்; அணில்கள் ஓடி விளையாடும். சில பறவைகள் அவர் தலையைக் கொத்தும்.

பரமஹம்ஸருக்குச் சில சமயங்களில் அளவு கடந்த துக்கம் வந்துவிடும். 'தேவியின் தரிசனம் கிடைக்காமல் உயிரோடு வாழ்வது எதற்கு?' என்று தோன்றும். தலையைப் பூமியில் மோதிக்கொள்வார்; ரத்தம் வழியும். கண்கள் சிவந்துவிடும். அதைக் கவனிக்காமல் தேவியை நினைத்துப் புலம்புவார்.

தியானத்தில் அமர்ந்தாலோ நேரம் போவதே தெரியாது. மாலை வேளையில் ஆலயத்தில் பூசை மணி அடிக்கும்போது அந்த ஓசை காதில் விழுந்தால் அவர் தியானத்திலிருந்து சிறிது கலைவார். அன்று பகல் நேரம் கழிந்துவிட்டதென்று தெரிந்து கொள்வார். உடனே கரை கடந்த துக்கம் பொங்கும். "அம்மா, உன்னைத் தரிசிக்காமல் ஒரு நாள் வீணாகிவிட்டதே! இந்தப் பாவிக்கு உன் அருள் கிட்டாதா?" என்று கதறுவார். கீழே புரண்டு அழுவார்.

வாழ்வும் வாக்கும்

கடவுளை நேருக்கு நேரே கண்ட மகான் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர். அவர் வாழ்வு சத்திய ஜோதி; வாக்கு ஜீவ அமிர்தம்.

இத்தனை பக்தி வெறி மூண்டதன் பயனாகவே அவர் தேவியின் அற்புதக் காட்சியைக் கண்டு ஆனந்தக் கடலில் ஆழ்ந்தார். (வாழ்வு)



அகமும் புறமும்: ஒரு துறவி ஒரு கோயிலுக்கு அருகில் மடங் கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தார். ஜனங்கள் அவரிடம் வந்து உபதேசம் பெற்றுக்கொண்டார்கள். அவருடைய மடத்துக்கு எதிரில் ஒரு வேசி வசித்து வந்தாள். விலைமகளாகத் தன் உடம்பை விற்று ஜீவனம் செய்த அவளைக் கண்ட போது துறவிக்குக் கோபம் உண்டாயிற்று. ஒரு நாள் அவளை அழைத்து வரச் செய்து அவள் செய்வது பாவத் தொழில் என்று எடுத்துரைத்தார். அதைக் கேட்ட அந்த விலைமகள் மனமார வருந்தினாள். "தெய்வமே, என் பாவத்தைப் போக்கிப் புனிதமடையச் செய்தருள வேண்டும்" என்று உருகித் துதித்தாள். ஆனால், அவளுக்கு வேறு வழி ஒன்றும் இல்லாமையால், வாழ்க்கைக்குத் தேவையான பணத்தைச் சம்பாதிக்கத் தன் தொழிலை விடாமல் நடத்தி வந்தாள்.

துறவி இதைப் பார்த்தார். அவள் செய்யும் பாவத்தைக் கணக்கிட்டுக் காட்ட வேண்டுமென்று எண்ணியவராய், அந்த வேசியின் வீட்டுக்குள் ஓர் ஆடவன் புகுந்தால் ஒரு கூழாங்கல்லை ஓரிடத்தில்

போடுவார். இப்படிக் கணக்குப் பண்ணி வரும்போது சில நாட்களில் ஒரு சிறு குவியலே குவிந்துவிட்டது. அப்போது அந்தத் துறவி மறுபடியும் வேசியை அழைத்து வரச் செய்தார். "இதோ பார்த்தாயா?" என்று கூழாங்கற் குவியலைக் காட்டினர். "என்ன ஸ்வாமி, இது?" என்று கேட்டாள் விலைமகள். "இது, நீ செய்த பாவக் குவியலின் கணக்கு" என்று சொல்லி விஷயத்தை விளக்கினர்.

வேசிக்குக் குலை நடுக்கம் உண்டாயிற்று. வீட்டுக்குப் போனது முதல் அவள் உடம்பு சரியாக இல்லை. "கடவுளே! நான் எவ்வளவு பாவியாகிவிட்டேன். இந்த உடம்பை வளர்ப்பதற்காக அல்லவா இந்தப் பாவத்தைச் செய்தேன்? இனிமேல் இந்த உடம்பு எனக்கு வேண்டாம். என் உயிரை இப்போதே வாங்கிவிடு" என்று புலம்பினள். இறைவன் அவளுடைய பிரார்த்தனைக்கு இரங்கினன். அவள் உயிர் அந்த உடம்பிலிருந்து பிரிந்தது. அந்த உயிரை அழைத்துச் செல்ல வைகுண்டத்திலிருந்து தூதர்கள் வந்தார்கள்.

அதே சமயத்தில் துறவியும் இறந்துவிட்டார். அவர் உயிரை நரகத்துக்குக் கொண்டு செல்ல யமதூதர்கள் வந்தார்கள். துறவிக்கு ஒன்றும் விளங்கவில்லை. "இதென்ன அநியாயம்! சந்நியாசியாகி உலக விவகாரத்தை விட்டொழித்த எனக்கு நரகமா? விபசாரத் தொழிலில் ஈடுபட்ட வேசிக்கு வைகுண்டமா?" என்று கத்தினர்.

"ஆமாம், ஸ்வாமி. காவியுடையும் கமண்டலமும் தரித்த உம்முடைய அனுஷ்டானத்திலும் பிறருக்குச் செய்யும் உபதேசத்தில் கவனம் கொண்டு நீர் வாழ்ந்தீர். எல்லாம் வெளிவேஷம்; படாடோபம். நாலு பேரை உம் காலில் விழப் பண்ணின காரியங்கள். ஒரு நாளாவது கடவுளை எண்ணி உருகினதுண்டா? அந்த வேசியோ புறத்தில் என்ன தொழிலைச் செய்தாலும் அகத்தில் ஆண்டவனைச் சதா நினைத்து உருகினளே! அதனல் தான் அவளுக்கு வைகுண்டம் சித்தித்தது" என்ற பதில் யமதூதரிடமிருந்து வந்தது. (வாக்கு)

நல்லதுக்கு நான்: ஒரு பிராம்மணன் பெரிய தோட்டம் ஒன்றைப் பயிர் செய்து மிகவும் ஜாக்கிரதையாக வளர்த்து வந்தான். ஒரு நாள் ஒரு பசு அதற்குள் புகுந்து செடிகளை மேய ஆரம்பித்தது. அதைக் கண்டு கோபம் அடைந்த பிராம்மணன் தன் கைத் தடியால் அதைக் கடுமையாக அடித்துவிட்டான். அடி தாங்காமல் பசு இறந்துவிட்டது. ஊராருக்கு இந்தச் செய்தி தெரிந்ததும், "இவன் கோஹத்தி செய்துவிட்டான்" என்று தூற்ற ஆரம்பித்தார்கள். அவன் படித்தவனகையால், "நான் எங்கே பசுவைக் கொன்றேன்? இந்தக் கைதான் கொன்றது. கைக்கு அதிதேவதை இந்திரன். ஆதலால் பசுஹத்தி தோஷம் இந்திரனைச் சேர்ந்தது" என்று சொல்லிச் சாஸ்திரத்திலிருந்து சுலோகங்களைச் சொல்லி வாயடி அடித்தான்.

இந்திரன் காதில் இது விழுந்தது. ஒரு முதிய அந்தணன் போல வேஷம் போட்டுக்கொண்டு தோட்டக்காரப் பிராம்மணனிடம் வந்தான். "ஆஹா! இந்தத் தோட்டம் எவ்வளவு அழகாக இருக்கிறது? இது யாருடையது?" என்று கேட்டான்.

"என்னுடையதுதான்" என்றான் பிராம்மணன்.

"நல்ல சாமர்த்தியமான தோட்டக்காரர்களை வைத்திருக்கிறீர்கள் போல் இருக்கிறது. மிகவும் ஒழுங்காக இனம் பிரித்து நட்டிருக்கிறார்கள்" என்றான் இந்திரன்.

பிராம்மணன், "அவர்கள் செய்து கிழித்தார்கள்! இப்படிச் செய், அப்படிச் செய் என்று நான் இருந்து வேலை வாங்கினேன். நான் பார்க்காவிட்டால் இப்படி இருக்குமா?" என்றான்.

"இந்தப் பாத்திகளை ஒழுங்காக வகுத்திருக்கிறார்களே!"

"ஆமாம். இதுவும் என் வேலை தான்."

"பூச் செடிகள், பழ மரங்கள் இவற்றைத் தக்கபடி வளர்த்து வரும் சாமர்த்தியத்தைப் பாராட்டுகிறேன்."

"எல்லாம் நான் செய்ததுதான்" என்று இறுமாப்போடு சொன்னான் பிராம்மணன்.

உடனே இந்திரன் கையைக் குவித்தபடி, "ஆமாம், ஸ்வாமி. இத்தனை காரியங்களும் நீரே செய்தவை என்று சொல்லுகிறீர். இதில் வரும் புகழில் இம்மிகூடப் பிறருக்கு அளிக்க உமக்கு மனம் வரவில்லை. ஆனால் பசுவைக் கொன்றீரே; அது மட்டும் உம்முடைய வேலை அல்லவாக்கும்? அந்தத் தோஷத்துக்கு எங்கேயோ உள்ள இந்திரன் தான் பொறுப்பாளியோ?" என்று கேட்டுவிட்டு மறைந்தான். (வாத்து)

விசேஷமான வேடிக்கை

சினிமாக் கொட்டகை ஒன்றில் குழந்தைகளுக்காக ஏதோ படம் காட்டிக்கொண் டிருந்தார்கள். நடுநடுவில் மந்திரவாதி ஒருவன் செப்பிடு வித்தையும் காட்டினான். குழந்தைகளுக்குப் போது போவதே தெரியவில்லை; அவ்வளவு நன்றாக இருந்தது இந்த வேடிக்கை. ஆட்டம் முடியக் கொஞ்ச நேரத்துக்கு முன்னால் மந்திரவாதி மறுபடியும் மேடைமேல் வந்து நின்றான். "குழந்தைகளே, இப்போது நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யவெண்டும். என் பின்னால் சந்தடி செய்யாமல் ஒழுங்காக, வரிசையாக வாருங்கள். வெளியிலே இன்னும் ஒரு விசேஷ வேடிக்கை காட்டுகிறேன். வந்து பாருங்கள்" என்றான்.

குழந்தைகள் ஆவலோடு அவன் சொன்னபடியே செய்தார்கள். வெளியே வந்து பார்த்ததும் அவர்களுக்குப் பக்கென்றது. கொட்டகைக்குப் பக்கத்தில் இருந்த மருந்துக்கடை தீப்பற்றி எரிந்துகொண் டிருந்தது! தீ என்று முதலிலேயே அறிந்திருந்தால் குழந்தைகள் திகில் அடைந்து ஒருவர் மேல் ஒருவர் விழுந்து மிதிபட்டுச் செத்திருப்பார்கள். அப்படி நிகழாமல் அவர்களை அவன் இவ்விதம் தந்திரமாக வெளியே கொண்டு வந்து சேர்த்துவிட்டான்!

—ஸாலி பிரிஸ்டோ

நம் நாட்டிலிருந்து பௌத்தமதம் போய்விட்டது என்பது உண்மையா? அந்த மதத்தின் நுட்பம்தான் என்ன?



பௌத்த மதத்தின் மூலம்

பி. ஸி. பாக்சி

★

வைதிக மதம் வளர்ச்சி பெற்று வந்தபோது இரண்டு விதமான கொள்கைகள் உண்டாயின. ஒன்று, யக்ஞாதி கர்மங்களை வற்புறுத்தியது; இது, மந்திர சாதனையால் இயற்கையை வசமாக்கி வேண்டிய பயனைப் பெறலாம் என்ற நம்பிக்கை கொண்டது. மற்றொன்று, லௌகிக லாபத்தைப் பற்றிக் கருதாமல் மனிதன் அடையக் கூடிய உன்னதமான சத்தியப் பொருளையே நாடுவதில் ஈடுபட்டது. இந்த இரண்டாவது கொள்கையே உபநிஷத்துக்களில் விரிக்கப்படுகிறது. புத்த மதம் உதயமாவதற்கு முன்பே - கி. மு. ஆறாவது நூற்றாண்டிலேயே - அது பூர்ண வளர்ச்சியை அடைந்து விட்டது. அப்போது அந்தக் காலத்துப் பெரியார்களின் கவனத்தை அது இழுத்தது. இந்தச் சமயவளர்ச்சியினிடையே எழுந்த மார்க்கங்களில் ஒன்றே புத்தமதம்.

உபநிஷத்தில் சொன்னவற்றின் அடிப்படையான தத்துவங்களை, புத்தர் ஒப்புக்கொண்டார். 'உலகம் மித்யை, துயர் நிரம்பியது; ஆத்மா பழங் கர்மங்களால் உலகத்தில் பிறப்பைப் பெறுகிறது. பரமாத்மாவாகிய பிரம்மம் ஒன்று உண்டு. அது சச்சிதானந்தப் பொருள். ஆத்மஞானத்தைப் பெற்ற ஜீவாத்மா உலகமாயையைக் கடந்து பிரம்மத்தோடு ஒன்றாகி விடுகிறது. அதன்பின் அதற்குப் பிறப்பு இல்லை' என்று உபநிஷத் சொல்கிறது. புத்தரும் இந்த உலகம் அநித்தியம் என்றும் துக்கம் நிரம்பியதென்றும் எண்ணினார். நம்முடைய கர்மத்தாலும் அவித்தையாலும் துன்பத்தை அடைகிறோம். அநித்தியமான உலகப்பற்றினால் பிறவி உண்டாகிறது. பரிபூர்ண ஞானம் அடைந்தால்தான் இந்தத் துக்கம் நீங்கி இன்பம் உண்டாகிறது. நிர்வாணம் என்பது, பிரம்மத்தைப் போலச் சத்தியமான நிலை; பரிபூர்ண ஞானமும் ஆனந்தமும் நிரம்பியது. ஐம்புலன்களாலும் ஏற்படும் பஞ்சஸ்கந்தங்களை

காப்பிரைட்: விச்வபாரதி க்வார்ட்டர்லி (ஆங்கிலம்: பிப்ரவரி-ஏப்ரல் '49), கல்கத்தா.

மீண்டும் மீண்டும் பிறக்க ஏது ஆகின்றன. அவற்றை அழிக்கும் வரையில் ஜனன மரணம் சம்ப வித்துக்கொண்டே இருக்கின்றன. இப்பேர்ப்பட்ட விஷயங்களில் புத்தருடைய உபதேசங்களுக்கும் உபநிஷத்துக்களுக்கும் வேறு பாடே இல்லை.

புத்தர் உபநிஷத்திலுள்ள வேதாந்தத்தை ஒப்புக்கொண்ட தோடு அந்தணர்களின் ஆசாரங் களையும் ஏற்றுக்கொண்டார். அவர் காலத்துக்கு முன்பே சந்நியாசம் இந்த நாட்டில் இருந்துவந்தது. உலக வாழ்வைத் துறந்து காடுகளில் தனித்து வாழும் துறவிகள் இருந் தார்கள். எளிய வாழ்க்கையில் ஈடுபட்டுச் சத்தியப் பொருளை நாடிக் கடினமான சாதனை செய்து வந்தார்கள். அவர்களை ஆரண்ய கர்கள் அல்லது காட்டுவாசிகள் என்று வழங்கினார்கள். இந்த வாழ்க்கை புத்தரின் உள்ளத்தைக் கவர்ந்தது. அவர் அரண்மனையை யும் அரசபோகத்தையும் துறந்து மகத நாட்டு மலைகளையும் காடு களையும் நாடிச் சென்றார். அவர் உபதேசித்த மதம் அப்போதிருந்த துறவிகளின் தர்மத்துக்கு வேறு பட்டதன்று; இரண்டு வகையின ருக்கும் ஒரே மாதிரி ஆசரணைகள் இருந்தன.

அந்தணர்களின் ஆசாரத்தையும் வர்ணாசிரம தர்மத்தையும் எதிர்த் துப் புரட்சி செய்தவர் புத்தர் என்று சொல்வது அறிஞர்களின் வழக்கமாக இருக்கிறது. புத்தர் அப்படிப்பட்டவர் அல்ல. வைதிகக் கொள்கையின்படி துறவிகள் வீடற் றவர்கள்; அதிவர்ணாசிரமிகள்; அதாவது சாதிநிலை கடந்தவர்கள் அவர்கள். இந்த வகையில் புத்தரும் அவருடைய மாணாக்கர்களும் வேறு பட்டவர்கள் அல்லவே. ஆகவே, அவர்கள் சமூகச் சீர்திருத்தவாதி களும் அல்ல.

புத்தமத கிரந்தங்களில் பிராம் மணர்களைப் புத்தர் பல இடங்களில் கண்டிப்பதைப் பார்க்கிறோம். அது பிராம்மண குலத்தையே கண்டிப்ப தாகாது. தங்கள் ஆசாரத்தை மறந்து வழுவிய பிராம்மணர் களையே அவர் கண்டிக்கிறார். சமணர்களிடத்தும் பிராம்மணர் களிடத்தும் அவருக்கு உள்ள நன் மதிப்பைக் காட்டும் இடங்கள் அள விறந்தவை. யக்ஞங்களில் ஜீவ ஹிம்சை செய்வதை அவர் கண்டித் தார். உபநிஷத்துக்காரர்களின் கருத்தும் இதுதான். யக்ஞங்கள் அரசர்களுக்குப் போக போக்கியங் கள் உண்டாக வேண்டி அமைந் தவையே அல்லாமல், மோட்சத் தைப் பெறச் செய்பவை அல்ல. உபநிஷத்திலுள்ள தத்துவங்களே இந்த யக்ஞாதி கர்மங்களுக்கு விரோதமாக இருக்கின்றன. புத்த மதமும் அந்த மாதிரி அமைந்ததே.

ஆகவே, பழைய இந்து மதக் கொள்கைகளை உணராமல் புத்த மதத்தின் தோற்றத்தை அறிய முடியாது. உபநிஷத்துக் கொள்கைகளையும் சந்நியாச தர்மத் தையும் தெரிந்துகொள்ளாமல் புத்தருடைய உண்மை மதிப்பை உணர்ந்துகொள்ள முடியாது.

2

பழங்காலத்தில் இருந்த வேத மார்க்கம் எங்கும் பரவக் கூடியதாக இல்லை. பிராம்மண க்ஷத்திரியர் களாகிய இரண்டு வருணத்தாரிடமே அது நிலவியது. வேதத்தில் கூறும் தெய்வங்கள் பலவாக இருந் தாலும் குறிப்பிட்ட ஒரு வகையில் வழிபடத் தக்கவையாக இல்லை.

அவை இயற்கைச் சக்திகளின் உருவங்கள். அவற்றை விக்கிரக உருவத்தில் அமைக்க முடியவில்லை. வைதிக கர்மாக்கள் மந்திரங்களைக் கூறிச் செய்யும் காரியங்களே தவிர ஒரு கடவுளை வணங்கும் வணக்கமல்ல. உபநிஷத்துக்களில் உள்ள தத்துவமோ ஆத்ம ஞானம் பெற்ற சிலருக்கே உரியதாக இருந்தது.

புத்தர் மறைந்து ஒரு நூற்றாண்டு ஆவதற்குள் புத்தமதம் இந்தியாவிலுள்ள சாமான்ய ஜனங்களுக்கும் விளங்கும் உபதேசத்தைப் பரப்பியது. அது வெறும் தத்துவமாக இராமல் ஆசரணைக்குரிய சமயமாக ஆகிவிட்டது. புத்தரை நடுநாயகமாகக் கொண்டது அந்தச் சமயம். புத்தர் இயல்பாக ஒரு மனிதர்; தெய்வத்துக்கும் மேற்பட்டவர். தம்முடைய தியாகத்தாலும் தன்புறம் உயிர்களிடம் கொண்ட கருணையாலும் தீய இயல்புகளை வென்றதாலும் உயர்ந்த ஞானத்தை அடைந்ததாலும்தேவர்களும் வணங்கும் நிலை பெற்றார். அவர்கள் அவரைச் சரணடைந்தார்கள்; அவருடைய உபதேசத்தைக் கேட்டார்கள். இந்த மாதிரி செய்திகளால் சாமான்ய ஜனங்களின் உள்ளங்கள் புத்தரிடம் ஈடுபட்டன. அழகும் திருவும் போக போக்கியங்களும் நிறைந்த அரசிளங் குமரர் ஒருவர் மனித சாதியின் துக்கத்தைக் கண்டு இரங்கினார் நோய், முதுமை, மரணம் என்பவை மனிதர்களைக் கவ்வுவதைப் பார்த்த போது அவர் உள்ளம் தடுமாறியது. அவர் வீடற்ற துறவிகளின் வாழ்க்கையை மேற்கொண்டு துக்க நிவர்த்திக்குரிய மார்க்கம் என்ன வென்று ஆராய முற்பட்டார். ஆபரணங்களைக் கழற்றி எறிந்தார்; அரச உடையை நீத்தார். காவியுடை அணிந்தார். தம் கையாலேயே தம் கேசத்தைக் குறைத்துக் கொண்டு துக்க நிவாரண மார்க்கத்தை நாடிப் புறப்பட்டுவிட்டார். நெடுங்காலம் சாதனையும் வேதனையும் மேற்கொண்டு அந்த மார்க்கத்தைக் கண்டுபிடித்து மக்களுக்கு அதைக் காட்டினார்.

மனித சாதிக்கு யார் புகலாக இருக்கமுடியும்? பழங்காலத்துக் கொள்கைப்படி உள்ள உருவற்ற பரம்பொருள், சாமானிய ஜனங்களால் அணுகுவதற்கரியது; மனித இயல்புகளே இல்லாதது. மக்களின் வேதனைக்கு இரங்காதது; அதுவா? அல்லது மனித ஜாதியின் துக்கத்தைக் கண்டு உருகும் உள்ளமும், அவர்களுடைய நன்மைக்காகத் தம்மையே தியாகம் செய்யும் இயல்பும் படைத்துத் தீமையை வென்று புனித ஞானத்தைப் பெற்றுத் தேவர் யாவரிலும் மேலாக விளங்கும் புத்தரைப் போன்ற ஒருவரா? புத்தரே மக்களின் உள்ளத்தைக் கொள்ளை கொண்டு அவர்களுடைய பூசைக்கு உரியவரானர். அவரோடு சம்பந்தப்பட்ட இடங்களும் பொருள்களும் வழிபடும் நிலை பெற்றன. அவர் ஞானம் அடைந்த போதி விருட்சமும், அவருடைய சாம்பல் இருந்த சைத்தியங்களும் யாத்திரை ஸ்தலங்களாயின. அவருடைய விக்கிரகத்தைக் கற்பனை செய்து அமைக்க அவர் சிஷ்யர்கள் துணியவில்லை. ஆனாலும் அவருடைய திருவடிகளையும் போதி மரத்தையும் பொறித்து வழிபட்டார்கள். புத்த ஜாதகக் கதைகளைச் சித்திரமாகவும் சிற்பமாகவும் அமைத்துப் போற்றினார்கள்.

அசோக சக்கரவர்த்தியின்

காலத்தில் (கி. மு. 3-ஆம் நூற்றாண்டு) புத்தமதம் இப்படி வளர்ந்து சாமானிய ஜனங்களிடத்திலும் பரவி நின்றது. அசோகன் ஸ்தூபங்களையும் சைத்தியங்களையும் கட்டினான். அவனுக்குப் பிறகு ஸாஞ்சி, பார்ஹுத்திலுள்ள ஸ்தூபங்களில் அங்கங்கே இருந்த பக்தர்கள் புத்த ஜாதகக் கதைச் சித்திரங்களையும் புத்தரின் திருவடியையும் போதி விருட்சத்தையும் பொறித்தார்கள். அவருடைய உருவம் ஒன்று வேண்டுமென்ற ஆர்வம் அவர்களுக்கு அதிகமாக இருந்தது.

காலம் மாறியது. விக்கிரகம் கூடாதென்ற கொள்கை மறைந்தது. 'கபிலவாஸ்துவில் அவதரித்த கௌதம புத்தராகிய சாக்கிய முனிவர் நம்மைப் போன்ற மனிதரல்ல; பிறப்பு இறப்பு இல்லாத மூல புத்தரின் அவதாரம். உலகில் உள்ள மக்களின் துக்க நிவாரணத்துக்கு உரிய மார்க்கத்தைக் காட்டவே அவர் மனிதராக அவதரித்தார். அவருக்குச் சுகதுக்கங்கள் இல்லை. ஆகவே, அவரை விக்கிரகமாக வைத்து வழிபடுவதில் அபசாரம் ஒன்றும் இல்லை.' இப்படி எண்ணங்கள் மாறின.

மகாபுருஷ லட்சணங்கள் முப்பத்திரண்டும் அமைந்தவராக அவர் விக்கிரகத்தை அமைத்தார்கள். அந்த விக்கிரகத்தைச் சாமானிய மனிதனாக எண்ணாமல் தெய்வமாகவே கொண்டாடினார்கள். புத்த விக்கிரகங்கள் கி. மு. முதல் நூற்றாண்டில் ஏற்பட்டுப் பரவின. புத்த மதமும் வேரூன்றிப் பரவியது. இந்தியாவில் இருந்த கிரேக்கர், இரானியர் முதலிய பல நாட்டு மக்களும் புத்தரிடம் பக்தி கொண்டார்கள். சைத்தியங்களும் புத்த விஹாரங்களும் பெருகின. இந்த இடங்களில் வழிபடுவதில் சங்கடம் ஒன்றும் இல்லை. யாரும் தாராளமாகப் புகுந்து தூபம் ஏந்தி வலம் வந்து மலர் இட்டுத் தோத்திரம் செய்யலாம்.

இப்படிப் புத்த மதம் இந்திய மக்களிடையே விரிந்து பரவியது. மக்களிடமிருந்து விலகி நின்ற வைதிக மதம் இதைக் கண்டு இது மாதிரியே வேலை செய்யத் தொடங்கியது. இந்தக் காலத்தில்தான் மகா பாரதம் உண்டாயிற்று. கிருஷ்ண வாசுதேவன் என்னும் தெய்வத்தை மக்கள் உணர்ந்தார்கள். விஷ்ணுவே மனித உருவத்தில் கிருஷ்ணனாக அவதரித்தாரென்று கூறியது பாரதம். அவருடைய திருவாக்காகிய பகவத் கீதை மிகவும் பிரசித்தமான வேதாந்த கிரந்தமாயிற்று.

இதற்குமேல் புத்த மதமும், வைதிக மதமும் ஒன்றையொன்று விஞ்சிச் சென்றன. நூல்கள், தோத்திரங்கள், கோயில்கள், சிற்பங்கள், சித்திரங்கள் இவற்றால் மக்களைக் கவர்வதில் போட்டி போட்டன. இரண்டும் வளர்ந்தன.

3

இப்போது, இந்தியாவில் புத்த மதம் சிட்டகாங்கில் ஒரு சிறு வகுப்பினரிடத்திலும், நேபாளத்தில் ஒரு வகுப்பினரிடத்திலுமே இருந்து வருகிறது. சென்ற எட்டு ஒன்பது நூற்றாண்டுகளாக இந்தியாவில் புத்த சமயம் ஒரு மதமாகவே இருந்து வரவில்லை. அதைக் கொண்டு இந்தியா புத்தரை மறந்து விட்டது என்று சொல்லமுடியுமா?

புத்தமதம் ஒரு மதமாகவோ, தனியான வகுப்பினரின் ஆசாரணைக்கு உட்பட்டதாகவோ இந்தியாவில் இருக்கவில்லை. ஆனாலும் இந்திய நாகரிகத்தில் புத்த மதமும் அதன் கொள்கைகளும் முக்கிய

மான பகுதியாக இருக்கின்றன. உருவம் மாறினாலும் ஜீவன் நிலைத்து நிற்கிறது. மரபுக்கு மதிப்பு அளித்தாலும் பல காலமாக ஒன்றையே பற்றிக்கொண்டிருப்பதில் பயனில்லை என்பதை இந்தியா முன்பே உணர்ந்திருக்கிறது. அதனால்தான் பழைய தெய்வங்கள் போய்ப் புதிய தெய்வங்கள் முளைக்கின்றன. பழைய கொள்கைகளுக்குப் புதிய புதிய வியாக்கியானங்கள் வருகின்றன. சரித்திர பூர்வமான இந்த வளர்ச்சிக்குப் புத்த மதமும் உட்பட்டது அதிசயமல்ல.

புத்த சாக்கிய முனியைத் திருமாலின் தசாவதாரங்களில் ஒன்றாகக் கருதுகிறோம். வைஷ்ணவ மதத்தில் பௌத்த மத ஆசாரணைகள் சில இருக்கின்றன. சரித்திர புருஷராகிய புத்தர் பக்தர்களுக்குத் தெய்வமாகிவிட்டார். இதற்குப் போட்டியாகக் கிருஷ்ணர் வந்தார். புத்தரைப் போலவே மனித உருவத்தில் அவர் அவதரித்தார். நாளடைவில் புத்தரும் திருமாலின் அவதாரம் என்று வந்துவிடவே வைஷ்ணவ மதக் கோட்பாடுகளில் புத்த மதம் இணைந்து ஒன்றியது.

இந்துக்களின் தத்துவங்களில் மிகவும் பரவியது வேதாந்தம். கி. பி. ஏழாம் நூற்றாண்டில் வாழ்ந்த சங்கராசாரியர் அதைப் பரப்பினார். அவர் புத்த மதத்தை இந்தியாவிலிருந்து ஓட்டினாரென்று பலர் பல முறை சொல்லுவதுண்டு. வேறு கொள்கையுடையவர் அவரைப் பிரச்சன்ன பௌத்தர் என்று சொன்னார்கள். இரண்டும் உண்மையே. அவருடைய வேதாந்தம் பழைய வைதிக ஞானநெறியின் புதிய வியாக்கியானமாக இருந்தாலும் ஒரு புதிய முறையாக இருந்தது. பரிபூர்ண ஞானத்தால்தான் சத்தியப் பொருளை அடையலாம்; உலகம் மாயை. இந்தக் கொள்கைகளை உடையது புத்த சமயம். சங்கராசாரியர் புத்த சமயக் கொள்கைகளில் பலவற்றை இணைத்துக் கொண்டார். வேதாந்த மதத்தில் அவை மறைந்து வாழ்கின்றன.

கடைசிக் காலத்தில் இந்தியாவில் புத்த மதத்தில் பல ரகசிய முறைகள் வந்தன. அவற்றில் முக்கியமானது வஜ்ரயானம். மந்திர சாதனை, முத்திரை முதலியவற்றை உபயோகிக்கும் மார்க்கங்களை உடையது அது. பலபல தெய்வங்களைப் புகுத்தியது. இவற்றைச் சில வேறுபாடுகளுடன் இந்து மதத்தினர் ஏற்றுக்கொண்டார்கள். ஆகவே, பழைய பௌத்த மதம் பெயரளவில் மாறியது.

விதியின் விளையாட்டு!

பீட்டர் பெர்ட் என்பவர் சிறு வயதில் ஏதோ ஒரு மரத்தைச் செதுக்கிக்கொண்டிருந்தார். அப்போது அதிலிருந்து ஒரு சில்லு வந்து அவர் கண்ணில் பட்டது. அதனால் அந்தக் கண் பார்வை போய்விட்டது. நாற்பத்திரண்டு வருஷம் கழித்து மறுபடியும் ஒருநாள் இன்னொரு மரத்தை அவர் செதுக்கிக்கொண்டிருக்கும்போது அதே மாதிரி மற்றொரு சில்லு அதே கண்ணில் பட்டது. இழந்த கண் பார்வை உடனே திரும்பி வந்து விட்டதாம்!

—'அஸோஷியேடெட் பிரஸ்'

‘எங்கிருந்து வந்தேன்?’

ஆண் - பெண் உறவு பற்றிய விஷயங்களைக் குழந்தைகளுக்குத் தெரியாமல் ஒளிப்பது சரியல்ல என்று மனத்தத்துவ நிபுணர் பலர் இன்று கருதுகிறார்கள். இது பற்றிய இந்தக் கட்டுரை, ‘லுக்’ பத்திரிகையில், தியோடோரா ஆரன்ஸ்டாம் என்பவர் எழுதியதை ஆதாரமாகக் கொண்டது.

ஆண் - பெண் உறவு பற்றிய அறிவு குழந்தைப் பருவத்திலேயே ஆரம்பிக்கிறது. குழந்தை தன் ஜனனேந்திரிய உறுப்பில் கவனம் செலுத்துவதைக் கண்டு அதன் தாய் பயப்படவேண்டியதில்லை. பயப்பட்டால் குழந்தைக்கு அது ஏதோ கெட்டது என்ற எண்ணம் தோன்றிவிடுகிறது. அந்தக் குழந்தை பெரியவனாகும்போது ஆண் - பெண் மர்ம உறுப்புப் பற்றி அருவருப்பைத் தவிர வேறு உணர்ச்சி தோன்றுவதில்லை.

குழந்தைகளுக்கு மூன்று வயதாகும்போது அவை ஜனனேந்திரியங்களைப் பற்றிக் கேள்விகள் கேட்க ஆரம்பித்துவிடுகின்றன. அப்போது பதியும் அபிப்பிராயம் ஆயுள் உள்ளவரையில் நிலைத்துவிடுகிறது. இதனால்தான் மனோவியாதி வைத்தியர்களும் அறிஞர்களும் அதிகாரிகளும் குழந்தைகளிடம் உண்மையைச் சொல்ல வேண்டும் என்கிறார்கள்.

ஒரு குழந்தை தன் தாயைப் பார்த்து, “அம்மா, நான் எங்கிருந்து வந்தேன்?” என்று கேட்கிறதென்று வைத்துக்கொள்வோம். அதற்கு, “நீ என் உடம்புக்குள் தோன்றி வளர்ந்தாய்” என்று பதில் சொல்லிவிடவேண்டும். குழந்தைக்குத் தன் கேள்வியை விளக்குகிற குறிப்பான பதில்தான் தேவை. ஆண்-பெண் உறவுபற்றிய பிரசங்கம் அதற்குத் தேவையில்லை. கூடுமான வரையில் உடற் கூற்றைப்பற்றிய சரியான பதங்களை அப்படியே உபயோகப்படுத்த வேண்டும். இதற்காக விஞ்ஞானம் என்று சொல்லிக்கொண்டு மிக நுணுக்கமான விஷயங்களைக் கற்பித்துவிடக் கூடாது.

குழந்தைகளின் பாஷையிலேயே சொல்வது எளிதென்றால் அப்படியே செய்யலாம். ஜனனேந்திரிய உறுப்பு, ஆண் - பெண் உறவு இவை பற்றிய சரியான பதங்களை உபயோகப்படுத்துவதால் குழந்தைகள் மறுபடியும் தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் ஏற்படாது. ஆறு வயதாகும்வரையில் குழந்தை அதிக விவரம் தெரிந்துகொள்ள விரும்பாது. பிறகு உண்மையைச் சொல்லிவிடுவதுதான் சரியான வழி. சிரமம் கொடுக்காமல் அதைச் சொல்ல வேண்டும். “மழை எப்படிப் பெய்கிறது?” என்று குழந்தை கேட்டால், “நீ பெரியவனான பிறகு சொல்கிறேன்” என்று பெற்றோர்கள் சொல்லக்கூடாது. அதைப் போலவே இந்த விஷயத்தையும் இயற்கையான முறையில் சொல்ல வேண்டியதுதான்.

இந்த விஷயங்களை விளக்கிச் சொல்வது பல பெற்றோருக்குச் சிரமம். கூச்சமோ, குறுகுறுப்போ இல்லாமல் சொல்ல முடிவதில்லை. பரம்பரை பரம்பரையாக இதை விகல்பமாகவே எண்ணி நடந்து வந்திருப்பதுதான் இதற்குக் காரணம். ஆண் - பெண் உறவுபற்றி விசித்திரமாகக் கருதும் பெரியவர்கள் இதைச் சரியானபடி சொல்ல முடியாமல் அவதிப்படுவார்கள். வயது வந்தவர்கள் தங்களுடைய பழைய கருத்துக்களை மாற்றிக் கொண்டால்தான் இந்தச் சங்கடத்திலிருந்து விடுபட முடியும் என்று மனேவியாதி நிபுணர்கள் நம்புகிறார்கள். நிறையத் தெரிந்தவர்கள் கூட இந்த ஆண் - பெண் உறவு விஷயங்களை வார்த்தைகளில் சொல்லக் கூசுவார்கள். குழந்தைகள் தம் உடம்பைப்பற்றிச் சுய உணர்வற்ற நிலையில்தான் இருக்கிறார்கள் என்பது ஞாபகத்தில் இருக்கவேண்டும். அப்போதுதான் அதை அவர்களுக்குச் சொல்வது எளிதாகும்.

இந்தக் காலத்தில்கூடச் சில பெற்றோர்கள் தம் குழந்தைகளிடம் பொய்க் கதை சொல்லுகிறார்கள். ஆனல், குழந்தைகள்பெரியவர்களான பெற்றோர் சொன்னதெல்லாம் தவறு என்று தெரிந்துகொள்வார்கள். அதோடு இதில் ஏதோ மறைவாகஇருப்பதாகவும் தோன்றுகிறது. பெற்றோர்களை நம்பவும் முடியாது. குழந்தைகளிடம் பொய் வரலாறுகளைச் சொல்லும் பெற்றோர்கள் இதை அடியோடு மறந்துவிடுகிறார்கள். ஆகவே, வைத்தியர்களும் சரி, அதிகாரிகளும் சரி, இந்த விஷயங்களில் யாராவது பொய் சொல்வதைக் கண்டால் ஆத்திரமடைகிறார்கள்.

குழந்தைகளுக்குப் பெற்றோரிடம் நம்பிக்கை சிதையாமல் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் பெரிதும் கெடுதலே விளையும். குழந்தையிலிருந்து தம் பெற்றோரிடம் நெருங்கிப் பழகுகிறவர்கள்தான் யௌவனத்தில் ஏற்படும் சங்கடங்களின்போது சமாளித்துக்கொள்ள முடியும்.

இதைப் பெற்றோர் கவனிக்க வேண்டும். பெற்றோர் விரும்பினலும் விரும்பாவிட்டாலும் குழந்தைகளுக்கு இந்த ஆண்-பெண் உறவு விஷயங்கள் எப்படியோ அரைகுறையாகத் தெரிந்து விடுகின்றன. அவைகளெல்லாம் தவறான செய்திகள். பெற்றோரிடமிருந்து சரியான தகவல்கள் தெரிந்துகொண்டுள்ள பிள்ளைகள், தெருவில் கேள்விப்பட்ட விஷயங்கள் மனத்தைக் குழப்பும்போதும் விகாரப்படுத்தும்போதும் அவர்களிடம் மனம் விட்டுக் கேட்க முன் வருவார்கள்.

கேள்வியே கேட்காத குழந்தைகளைப்பற்றி என்ன செய்வது? 'ஒரு தொல்லை விட்டது' என்று இராமல், இது எதனல் என்று சிந்திக்க வேண்டும். கைக் குழந்தையாக இருக்கும்போது தாயின் மனேபாவம் இதற்குக் காரணமாக இருக்கலாம். இப்படிப்பட்ட குழந்தைகளிடம் பெற்றோர்களே இந்தக் கேள்விகளை எழுப்பவேண்டும். "அடே, அவளுக்கு ஒரு குழந்தை வரப்போகிறது! வேடிக்கையாக இல்லை இது உனக்கு!" என்ற மாதிரியில் குழந்தையைத் தாய் கேட்கலாம்.

பையன்களும் பெண்களும் தம்மிடம் தோன்றக்கூடிய மாறுதல்களின் காரணத்தை அறிந்து கொள்ள வேண்டும். பெரியவர்களாவ

தற்கு முன் அதற்குத் தயாராகவும் இருக்க வேண்டும். மூன்று வயது முதல் தன் அவயவங்களைச் சரியான படி பெயரிட்டு அழைக்கத் தெரிந்த குழந்தை, பெரியவனான பின்பு மற்ற உண்மைகளைக் கண்டு திடுக்கிட மாட்டான்.

ஆண் - பெண் உறவுபற்றித் தெரிந்துகொண்டால் குழந்தைகள் தாமே அதை நடத்திப் பார்க்க ஆரம்பித்துவிடும் என்று பெரும்பாலான பெற்றோர்கள் பயப்படுகிறார்கள். இதை ஆராய்ந்தவர்கள் இப்படிப் பயப்பட வேண்டிய அவசியமே இல்லை என்கிறார்கள். பெற்றோரிடம் எந்த விஷயத்தையும் கேட்டுப் பதில் தெரிந்து கொள்ளலாம் என்ற எண்ணமுள்ள குழந்தைகள் இந்த மாதிரி விஷயங்களில் அதிகமாய்ப் பிரவேசிப்பதில்லை. ஆனால் இந்த விஷயங்களைத் தெரிந்துகொள்ளவே கூடாது என்று கட்டுப்பாட்டுடன் வளர்த்த குழந்தைதான் இன்னும் அதிகமாகத் தானே செய்து பார்க்க ஆசைப்படும்.

குழந்தைகளுக்கு ஒரு குறிப்பிட்ட வயது வரும் வரையில் எதையும் தெரிவிக்கக்கூடாது என்ற எண்ணம் சென்ற தலைமுறையில் இருந்தது. ஆண் - பெண் உறவில் தோன்றும் பயங்கர விளைவுபற்றிப் பெற்றோர்கள் சிலர் தம் பிள்ளைகள், பெண்களிடம் பிரசங்கம் செய்து வந்தார்கள். இந்த உறவுபற்றிய விவரம் தெரிகிற வயதில் கர்ப்பம், மேக நோய், விபசாரம் இவைபற்றிய விவரங்கள் பயங்கரமாகப் பட்டன. ஆண்-பெண் உறவு கெடுதல், வெறுக்கத் தக்கது என்று தோன்றும்படி பெற்றோர்கள் பேசி வந்தார்கள். இதனால் விளைந்த விளைவுகளால், மனோவியாதி நிபுணர்கள் பின்னால் ஆண்-பெண் உறவு பற்றிய அறிவைப் பலருக்கு ஊட்ட வேண்டி வந்திருக்கிறது. சிறுவயதில் தவறான மனோபாவத்தில் வளர்ந்த பெரும்பாலானவர்கள் தம்முடைய மண வாழ்க்கையைச் சரியானபடி அநுபவிக்க முடியாமல் போய் விட்டது.

"பெற்றோர்கள் குழந்தைகளுக்குப் பதில் சொல்லும்போது இயற்கையாகவும், தெளிவாகவும் சொல்லவேண்டும். பதங்களைத் தேடிக் கஷ்டப்பட வேண்டியதில்லை. சொல்லுவது குழந்தைகளுக்குப் புரிய வேண்டும்; அவ்வளவுதான். பதில் தெரியா விட்டால், கண்டுபிடிக்க முயல வேண்டும்" என்று குழந்தை ஆராய்ச்சிச் சங்கத்தைச் சேர்ந்த ஒரு ஸ்திரீ நிர்வாகி கூறுகிறார்.

ஒரு பிரசித்தி பெற்ற மன நோய் மருத்தவர் கூறுவது இது: "ஆண்-பெண் உறவுபற்றிய அறிவு தான் குண விசேஷ அறிவுமாகும். தன் மதிப்பும் பிறரிடம் தனக்கு இருக்க வேண்டிய கடமையுணர்ச்சியும் இதனால் ஏற்படுகின்றன. அன்றாட வாழ்வில் சுய கௌரவத்துடன் நடந்து நல்வாழ்வு பெறப் பெற்றோர், தம் குழந்தைகளுக்கு வைத்துச் செல்லும் சேமநிதி இது."

அரிய சந்தர்ப்பம்

குமாஸ்தாவிடம் முதலாளி சொன்னது: "நீ சுதந்தரமாய் முன்னேற இதோ உனக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் அளிக்கப் போகிறேன். இன்று உன்னை டிஸ்மிஸ் செய்து விட்டேன்."

—ஸாடர்டே ஈவினிங் போஸ்ட்

கார்ட்டூன்



தேசீயபாஷை விவகாரம்

மந்திரத்தில் மாங்காய்



குட்டி போட்ட பூனைபோல

மேலே: ப்ரீ இந்தியா. நடு: பம்பாய் கிராணிக்கிள். கீழே: அமிர்தபஜார்.

கதம்பம்



மந்திரி கித்வாய் தபாலாபீஸில்
பார்ஸல் அனுப்பப் போனால்...

மந்திரி நியோகி திடீர் விஜயம்
செய்தால்...



மந்திரி ராஜகுமாரி ஆஸ்பத்
திரிக்குப் போனால்...

உணவு மந்திரி உணவுச் சீர்
திருத்தவாதியிடம் சிக்கினால்...

மந்திரி சந்தானம் பஸ்ஸில்
ஏறினால்...



கவர்னர்ஜெனரல் மாறுவேஷத்
தில்பிரபலமடைய விரும்பினால்...

—சங்கர்ஸ் வீக்லி.

'பேலியோ' என்ற இந்த வியாதியை ஒழிக்க அமெரிக்காவில் பிரமாதமான முயற்சி நடக்கிறது. நம் நாட்டிலோ?

இளம்பிள்ளை வாதம்

கே. கோபாலகிருஷ்ண ஹேகடே

இளங் குழந்தைகளுக்கு வரும் நோயில் இளம்பிள்ளை வாதம் ஒன்று. இதை ஏதோ சகஜம் என்றுதான் நினைப்போம். ஆனால் இது மிகவும் கொடிய நோய். இந்த நோய் வந்தால் குழந்தைகளுக்கு ஏதாவது ஓர் அங்கம் ஊனமாகி விடும். வாழ்க்கை முழுவதும் இதனால் துன்பம் அநுபவிக்க வேண்டி வரும். சமீபததில் இந்த நோய் பமபாயில் அதிகமாகப் பரவி வந்தது. அங்கம் ஊனமாவதோடு நிற்கவில்லை. எத்தனையோ குழந்தைகள் செத்துப் போய்விட்டன. வைசூரிபோல் தெய்வத்தோடு சம்பந்தப்படுத்தி இதற்கு மருந்தே இல்லை என்று ஜனங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த வாதம் குழந்தைகளுக்கு ஏன் வருகிறது என்று நிச்சயமாகக் கண்டுபிடிக்க முடியவில்லை. இதற்கு வைத்தியமும் ஒரே மாதிரியாகச் செய்ய முடியவில்லை. நோய் முதலில் முதுகு எலும்பின் பக்கத்தில் உள்ள நரம்பில் பற்றுகிறது. நோயைப் பரவச் செய்யும் கிருமியை எவ்வளவு நுட்பமாகப் பார்த்தும் கண்டுபிடிக்க முடியவில்லை. அங்கிருந்து அது கொஞ்சங் கொஞ்சமாக மற்றப் பாகங்களுக்குப் பரவுகிறது. பலவீனமுள்ள குழந்தைக்குத்தான் இது வரும் என்று சொல்வதற்கில்லை; பலமுள்ள குழந்தைகளுக்குக்கூட வரலாம். நோய் வருவதறகுமுன் நமக்குத் தெரியாது; ஊனம் ஏற்படும்போதுதான் தெரியும். அதற்குள் குழந்தை அவதிப்பட்டு மெலிந்துவிடும். இது தொற்று நோய். இந்த நோய்க்குத் தனி ஆஸ்பத்திரியோ, வைத்தியமோ மிகவும குறைவு.

1947-இல் பம்பாயில் இதற்காகவே சங்கம் ஒன்று கூட்டினார்கள். நோயைப்பற்றிய ஆராய்ச்சி தீவிரமாக நடந்தது. சிறந்த வைத்தியர் இரண்டுபேர் இதில் ஈடுபட்டு, பண உதவி தேவை என்று வேண்டுகோள் விடுத்தார்கள். வைத்தியர்கள் வேண்டின அளவு பணம் கொடுக்க இரண்டே மாதங்களில் பம்பாய் மக்கள் முன் வந்தார்கள்.

முதல் முதலில் ஆஸ்பத்திரிக்கு இடங் கொடுத்தவர் டாக்டர் லஞ்சகிரி என்பவர். பிறகு அமெரிக்கா முதலிய நாடுகளுக்குப் போய் வந்த வி. வி. பாளிகர் என்பவர் பிரசவ ஆஸ்பத்திரி ஒன்றை இதோடு சேர்த்தார். குழந்தைகளைக் கவனிக்க இது மிகவும் சௌகரியமாய் இருந்தது. குழந்தைகள் வந்து குவிய ஆரம்பித்துவிட்டன. சிறிய இடத்தில் நடத்த முடியவில்லை. சர்க்

காப்பிரைட்: கர்மவீர (கன்னடம்: 22-8-'49), பெங்களூர்.

காரின் சகாயத்தை நாடினார்கள். கட்டிடம் கிடைத்தது.

இப்போது இந்த ஆஸ்பத்திரி பம்பாய்க் கடற்கரை ரஸ்தாவுக்குத் தெற்கே கடைசிக் கட்டிடம் ஒன்றில் நான்காவது மாடியில் இருக்கிறது. இதை 1947-இல் வைத்திய டைரெக்டர் ஜெனரல் டாக்டர் ஜீவராஜ மேஹ்தா அவர்கள் திறந்து வைத்தார். இந்த ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் எல்லாரும் அநேகமாய் நல்ல அநுபவமுடையவர்கள்; இந்தியப் படை வைத்தியர்களாக இருந்து புகழ் பெற்றவர்கள். ஆங்கில முறை, இந்திய வைத்திய முறை இரண்டும் கலந்து வைத்தியம் நடக்கிறது. ஆபரேஷன் செய்வதில் கைதேர்ந்த டாக்டர் எம். ஜி. கிணி என்பவர் இதற்கு வேண்டிய உதவி செய்கிறார்.

இந்த நோயைப் 'போலியோ' என்கிறார்கள். இதற்கு அங்கே நடக்கும வைத்தியம், உடம்பைப் பிடித்துவிடுவதுதான். ஒவ்வொரு குழந்தையையும் கவனித்து அதற்கு ஏற்ற முறையில் இதைச் செய்கிறார்கள். குழந்தைக்குத் தொந்தரவு கொடுக்கும்படி எதையும் செய்யவே மாட்டார்கள். உடம்பைப் பிடித்து விட விட ஒவ்வொரு குழந்தையும் சந்தோஷமாக விளையாடுகிறது. இதோடு தேகப்பயிற்சியும் உண்டு. நான் அங்கே சுமார் இரண்டு வாரம் தங்கினேன். குழந்தைகள் விளையாடவும் எழுதப் படிக்கவும் நல்ல வசதி இருக்கிறது. மிகவும் கவனித்து ஆகாரம் கொடுக்கிறார்கள். குழந்தை அங்கே வந்து இரண்டு வாரங்களுக்குள்ளாகவே நல்ல குணம் தெரிந்துவிடுகிறது. ஒரு மாதத்தில் சில குழந்தைகள் வீட்டுக்கே போய்விடுகின்றன. குழந்தைக்குத் தகுந்தபடி வெந்நீர், தண்ணீர் இரண்டிலும் குளிப்பாட்டுகிறார்கள்.

குழந்தைகளை மூன்று விதமாகப் பிரித்து வைத்தியம் செய்கிறார்கள்.

(1) பலவீனமாகவோ, அங்கங்களின் அசைவு சற்றுக் குறைவாகவோ உள்ளவை.

(2) முகம், கழுத்து, கால், முழங்கால் இவற்றில் தனியாக உபாதி உள்ளவை.

(3) ஓர் அங்கம் முழுதுமே ஊனமாக இருப்பவை.

இதுவரையில் 500-க்கு மேற்பட்ட குழந்தைகள் இங்கே வந்து குணம் அடைந்திருக்கின்றன. இந்தியாவின் பல மூலைகளிலிருந்தும் குழந்தைகள் வருகின்றன. ஆஸ்பத்திரியில் இடம் போதவில்லை.

ஏழை, பணக்காரர் என்ற வேற்றுமை இங்கே இல்லை. எல்லாருக்கும் ஒரே மாதிரிதான் வைத்தியம் நடக்கிறது. நாள் ஒன்றுக்குச் சுமார் நான்கு அணாவிலிருந்து ஐந்து ரூபாய் வரையில் செலவாகும். அவரவர் சக்திக்குத் தகுந்தபடி பணம் வாங்குகிறார்கள்; ஏழையிடம் நான்கு என்றால் பணக்காரரிடம் ஐந்து ரூபாய் வாங்குவார்கள். ஆனால் யாராக இருந்தாலும் ஒருமாத முன்பணம் கட்டியாக வேண்டும். சிலருக்கு இலவசமாகவும் வைத்தியம் செய்யவேண்டி வருகிறது. அப்படிப்பட்டவர்களை அங்கேயே வைத்துக்கொள்ளும் சக்தி ஆஸ்பத்திரிக்கு இப்போது இல்லை. ஆகவே, அவர்கள் அங்கே வந்து சிகிச்சை செய்துகொண்டு மருந்தை வாங்கிக்கொண்டு வீட்டுக்குப் போகவேண்டியதுதான்.

ஏழைகளின் சௌகரியத்துக்காக ஒரு பஸ் வைத்திருக்கிறார்கள்.

அது ஊரெல்லாம் அலைந்து குழந்தைகளைக் கொண்டு வந்து விட்டுத் திரும்ப அழைத்துப் போகிறது.

ஆஸ்பத்திரி வேலை, அதன் முன்னேற்றம் இவைகளைப்பற்றி வைத்தியர்கள் கூடி முடிவு செய்கிறார்கள். இதற்குப் பொருள் உதவிதான் மிகவும் அவசியம். சங்கத்தின் தலைவர் டாக்டர் ஏ. வி. பாளிகர் என்பவர். பாதீமா இஸ்மேல் என்ற பெண்மணி கௌரவக் காரியதரிசி. நிகோபார் தீவில் இந்த நோய் திடீரென்று அதிகரித்து, சங்கத்தின் உதவியைக் கேட்டார்கள். உடனே வைத்தியர்கள் சிலபேர் அங்கே புறப்பட்டுப் போனார்கள்.

இங்கிலாந்தில் இதைப் போன்ற ஆஸ்பத்திரிகள் நூற்றுக்கணக்கில் இருக்கின்றன. இந்தியாவிலோ இதற்கு இந்த ஒரே ஆஸ்பத்திரி தான்.

இளம்பிள்ளை வாதத்தின் அறிகுறிகள்

இளம்பிள்ளை வாதத்தைப் போலியோமைலைடிஸ் என்று ஆங்கிலத்தில் சொல்வார்கள். வாதம் முற்றாமல் ஆரம்ப தசையிலேயே நோய் நின்றுவிட்டாலும் இது மற்றவர்களுக்குத் தொற்றிக்கொள்ளலாம். இதன் அறிகுறிகள்:

	தொற்றிக்கொண்டதிலிருந்து நோய் வெளிப்பட ஆகிற நாள்.	அறிகுறிகள்
முதல் படி நோய் ஆரம்பம்	1—4	ஜுரம், பலவீனம், தொண்டைக் கரகரப்பு, அல்லது சீதபேதி, அடிக்கடி மார்பிலும் மற்ற அங்கங்களிலும் வலி.
இரண்டாம் படி நிலை (1)	7—21	ஜுரம், முகம் சிவத்தல், நாக்கில் சொரசொரப்பு, தலைவலி, சில வேளை வாந்தி, சோர்வு, எரிச்சல், பலவிதத் தோற்றம், கழுத்து விறைத்துக் கொள்ளுதல், தசை இசிவு.
நிலை (2) (வாதம் தோன்றுவதற்கு முன்)	10—15	நல்ல மயக்கம், வலி, கழுத்து இசிவோடு முதுகு ஒடிந்துவிடுவது போல் தோன்றுதல், அதிக எரிச்சல், சில வேளை கண் விழி சுழலுதல்.
நிலை (3) (வாதம்)	13—35	கண்டதற்கும் எரிந்து விழுதல், தசைகளில் பலவீனமுண்டாகி வாதம் ஏற்படுதல், தசை நார் மடக்கவும் நீட்டவும் முடியாமல் இருத்தல், வாதம் பின்னும் முற்றுதல்.

ஆரம்ப தசையிலேயே, அக்கம்பக்கத்தில் எந்தக் குழந்தைகளுக்காவது இந்த நோய் இருக்கிறதா, அதற்கு இரண்டு வாரத்துக்கு முன்னேயே தொண்டைக் கரகரப்போ, இன்புளுயன்ஸா மாதிரி ஜுரமோ இருந்ததா என்றும் வைத்தியர் கவனிக்க வேண்டும். உடனே நோயாளிக் குழந்தையைத் தனி இடத்தில் வைத்துவிடவேண்டும். அறிகுறிகள் நன்றாகத் தெரிந்துவிட்டால் குறைந்தது மூன்று வாரமாவது இப்படி இருப்பது நலம்.

பாரததேசத்தின் மூல புருஷன்

மகாகவி காளிதாஸன்

'பாரத்' என்ற பெயரே நம் நாட்டுக்கு வழங்கவேண்டும் என்று இந்திய அரசியல் சட்டத்தில் தீர்மானித்திருக்கிறார்கள். பாரதம் என்பது நம் நாட்டின் பழமையான பெயர். பரதனுடைய நாடு பாரதம். இந்த பரதன் யார்? ராமனுடைய சகோதரன் அல்ல; அவன் வேறு பரதன். இவன் துஷ்யந்த மன்னனின் மகன். ஸர்வ தமனன் என்பது இவனுடைய குழந்தைப் பிராயப் பெயர். இவன் சின்னஞ் சிறு குழந்தையாக இருந்தபோதே சிங்கத்துடன் விளையாடியவன். அந்தக் காட்சி நிகழும்போதுதான், பிரிந்த காதலர் சந்திக்கிறார்கள். அதை உருக்கமாகச் சித்திரிக்கும் இந்தப் பகுதி 'சாகுந்தல' நாடகத்திலிருந்து எடுத்தது. உலகத்திலேயே மகோன்னதமான நாடகம் என்று பெயர் பெற்றது அது.

[துஷ்யந்தன் சகுந்தலையைக் காதல் மணம் புரிந்திருந்தும், துர்வாசரின் சாபத்தால் அதை மறந்துவிடுகிறான் அதனால் அவளை ஏற்க மறுக்கிறான். சகுந்தலை தேவலோகத்துக்கு அருகிலிருக்கும் மரீசி முனிவரின் ஆசிரமத்தில் வந்து ஒரு மகனை ஈன்று அங்கேயே வசித்து வருகிறாள். தான் சகுந்தலைக்கு அளித்த மோதிரம் கிடைத்தவுடன் துஷ்யந்தனுக்கு அவள் நினைவு வருகிறது. ஆனால் அவள் இருப்பிடம் தெரியாமல் மிகவும் கஷ்டப்படுகிறான். இந்த நிலையில் இந்திரனுக்கு உதவி செய்யத் தேவலோகம் போகிறான். திரும்பி வரும்போது மரீசி முனிவரை வணங்க அவருடைய ஆசிரமத்தில் இறங்கி ஒரு பக்கமாக உட்கார்ந்திருக்கிறான். இந்திரனின் தேரோட்டியான மாதலி மரீசி முனிவரைப் பார்த்து அரசன் வந்திருக்கும் சமாசாரத்தைத் தெரிவிக்கப் போகிறான்.]

*   *

(திரைக்குள்)

துஷ்டத்தனம் பண்ணாதே! என்ன, உன் சுபாவத்தை மறுபடியும் காட்டுகிறாயே!

அரசன்: (கேட்டு) துஷ்டத்தனத்துக்கு இது இடமில்லையே! யாரைத் தடுக்கிறார்கள்? (திரைப் பக்கமாகப் பார்த்து ஆச்சரியத்தோடு) அதோ இரண்டு தவ மாதர்களும் ஒரு பையனும் வருகிறார்கள்; பின்னாலே ஒரு சிங்கமும் சிங்கக் குட்டியுங்கூட வருகின்றன! அந்தக் குட்டியைக் கசக்கி விளையாடப் பலவந்தமாக இழுக்கிறானே, இந்தப் பையன்!

[சிங்கக்குட்டியுடன் ஒரு சிறுவனும் இரண்டு தவ மாதர்களும் வருகிறார்கள்.]

சிறுவன்: சிங்கமே, வாயைத் திற; உன் பல்லை எண்ணுகிறேன்.

முதல் தவமாது: அட பொல்லாத பயலே! எங்கள் குழந்தை மாதிரிடா இது! ஏண்டா இதை வதைக்கிறாய்? ஐயோ! இதென்ன,

பொல்லாத்தனம் வரவர அதிக மாகிறதே! முனிவர் உனக்கு ஸர்வ தமனன் என்று பெயர் வைத்தது சரியாகத்தான் இருக்கிறது. எல்லா வற்றையும் இப்படி அடக்கி மட்டந் தட்டுகிறாயே!

அரசன்: (தனக்குள்) இந்தப் பையனிடம் ஏனோ எனக்கு வாஞ்சை ஏற்படுகிறது! குழந்தை இல்லாத காரணமாகத்தான் இருக்கும்!

இரண்டாம் தவமாது: குட்டியை விடாவிட்டால் பெண்சிங்கம் உன் மேல் பாய்ந்துவிடும்.

சிறு: (சிரித்துக்கொண்டே) அப்ப! பயந்தே போய்விட்டேன்! (பரிகாசமாக உதட்டை மடித்துக் காட்டுகிறான்.)

மு. தவ: அடே! சிங்கக் குட்டியை விட்டுவிடு. உனக்கு வேறு விளையாட்டுச் சாமான் கொடுக்கிறேன்.

சிறு: எங்கே, கொடு. (கையை நீட்டுகிறான்.)

அர: (சிறுவனுடைய கையைப் பார்த்துத் தனக்குள்) சக்கரவர்த்தியின் லட்சணமெல்லாம் இவனுக்கு இருக்கிறதே!

இ. தவ: சுவிரதே, இவனிடம் வார்த்தை சொல்லி நாம் ஈடு கொடுக்க முடியாது. என் குடிசையில் வர்ணம் தீட்டின மண் மயில் ஒன்று இருக்கிறது. அது மார்க்கண்டேயனுடையது. போய் அதை எடுத்துக்கொண்டு வா.

மு. தவ: ஆகட்டும். (போகிறாள்.)

சிறு: இதோடுதான் விளையாடுவேன். (இரண்டாம் தவமாதைப் பார்த்துச் சிரிக்கிறான்.)

அர: (தனக்குள்) ஆகா! இந்தப் பொல்லாத சிறுவன்மேல் எனக்கு ஏன் இவ்வளவு அன்பு? குழந்தைகள் அரும்புபோல் பல்லைக் காட்டிக்கொண்டு மழலை பேசுவது எவ்வளவு அழகாக இருக்கிறது! இவர்கள்மேல் புழுதி படிந்திருந்தாலும் மடியில் எடுத்து வைத்துக் கொள்ளுகிறார்களே, அந்தப் பெற்றோர்கள் கொடுத்து வைத்தவர்கள் தான்!

இ தவ: இந்தப் பையனுக்கு என்னைக் கண்டாலே அலட்சியம்! (அருகில் பார்த்து) முனிகுமாரர் யாராவது இருக்கிறாரா, பார்ப்போம். (அரசனைப் பார்த்து) ஐயா! இந்தச் சிங்கக் குட்டியைச் சற்று இவனிடமிருந்து விடுவியும்.

அர: (அருகில் சென்று சிரித்துக்கொண்டே) அப்பா, முனிகுமாரா, சந்தன மரத்தில் கருநாகக் குட்டி சுற்றிக்கொண்டு அதைக் கெடுக்கும் என்பார்கள்; அதைப் போல் செய்கிறாயே! ரிஷி ஆசிரமத்தில் போய் இப்படிச் செய்யலாமா?

இ. தவ: ஐயா, இவன் முனி குமாரன் அல்ல.

அர: அதுதானா? பார்த்ததும் வேறுமாதிரிதான் தோன்றிற்று. ஆனால் இந்த இடத்தில் அப்படி இராதே என்று நினைத்தேன். (சிறுவனை அன்போடு அணைத்துக் கொள்கிறான்.)

இ. தவ: (குழந்தையையும் அரசனையும் உற்றுப் பார்த்து) அதிசயம்! அதிசயம்!

அர: அம்மணி, என்ன?

இ. தவ: உங்கள் இரண்டு பேர் சாயலும் ஒரே மாதிரி இருக்கிறது.

அர: (சிறுவனைச் சீராட்டிக் கொண்டே) இவன் முனிகுமாரன் இல்லையா? சரி; இவன் எந்த வம்சம்?

இ. தவ: புரு வம்சம்.

அர: (தனக்குள்) என்னுடைய வம்சமா? அதனால்தான் இவன் என்னைப்போலவே இருப்பதாக இவள் சொல்கிறாள். புரு வம்

சத்து அரசர்கள் முதலில் அழகிய அரண்மனையில் இருந்து அரசு செலுத்தியபோதிலும் கடைசி காளில் தம் மனைவிமாரோடு காட்டில் வசிப்பது வழக்கம். (வெளிப்படையாக) சாமான்ய மனிதர்கள் இங்கே வந்து சகஜமாக இருக்க முடியாதே?

இ. தவ: அது சரி; ஆனால் அப்ஸரஸ்களோடு சம்பந்தம் இருந்ததனால் இக்தப் பையனின் தாய் இங்கே வந்து இவனைப் பெற்றெடுத்தாள்.

அர: (தனக்குள்) ஆகா! என் ஆசை நிறைவேறுமோ ஒரு வேளை? (வெளிப்படையாக) இவன் தாய் யாருடைய மனைவி?

இ. தவ: முறைப்படி மணந்து மனைவியைக் கைவிட்ட அந்த அரசனுடைய பெயரை இங்கே யார் சொல்வார்கள்?

அர: (தனக்குள்) என்னைத்தான் சுட்டிக் காட்டுகிறாளோ? இவன் தாயின் பெயர் என்ன என்று கேட்கலாம். (தயங்கி) மற்றவர்களுடைய மனைவிமாரின் பெயரைக் கேட்பது சரியல்ல.

[முதல் தவமாது மண் மயிலுடன் வருகிறாள்.]

மு. தவ: ஸர்வதமனா! இந்தச் சகுந்தம் எவ்வளவு அழகாயிருக்கிறது பார்!

சிறு: (சகுந்தம் என்றதும் தன் தாய் சகுந்தலையின் ஞாபகம் வரவே நான்கு பக்கமும் பார்த்து) அம்மா எங்கே?

இ. தவ: குழந்தாய், இந்த மண் மயிலின் அழகைப் பார் என்றுதான் சொன்னேன்.

அரசன்: (தனக்குள்) ஓகோ! இவன் தாயின் பெயர் சகுந்தலையா? ஆனால் ஒரே பெயர் பலருக்கு உண்டு. பெயரைமட்டும் கேட்டு ஏமாந்துவிடக் கூடாது.

சிறு: இந்த மயில் எனக்குப் பிடிக்கிறது. (அதை எடுத்துக் கொள்கிறான்.)

மு. தவ: (பரபரப்போடு) ஐயோ! குழந்தையின் கையிலிருந்த ரட்சையைக் காணுமே!

அரசன்: அவசரப்படாதீர்கள்! இதோ, இவன் சிங்கக்குட்டியைக் கசக்கும்போது விழுந்துவிட்டது. (எடுக்கப் போகிறான்.)

தவமாதர்: ஐயோ! எடுக்க வேண்டாம்! எடுத்துவிட்டாரே! (இருவரும் மார்பில் கையை வைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்கிறார்கள்.)

அரசன்: ஏன் எடுக்கவேண்டாம் என்றீர்கள்?

மு. தவ: அரசே, இது அபராஜிதா என்னும் மூலிகை. இவனுக்குப் பெயரிடும்போது இதை மாரீச முனிவர் கட்டினார். தாய்தந்தையரையும் இவனையும் தவிர மற்றவர்கள் இதைத் தொடக்கூடாது.

அர: தொட்டால்?

மு. தவ: அது பாம்பாக மாறித் தொட்டவர்களைக் கடிக்கும்.

அர: அப்படி மாறிப் பார்த்திருக்கிறீர்களா?

தவமாதர்: பல முறை பார்த்திருக்கிறோம்.

அர: (சந்தோஷத்தோடு தனக்குள்) அப்பா! என் ஆசை நிறைவேறியது. இன்னும் ஏன் சும்மா இருக்கவேண்டும்? (குழந்தையை அணைத்துக்கொள்கிறான்.)

இ. தவ: சுவிரதே, வா, வா. இந்தச் சமாசாரத்தைச் சகுந்தலையிடம் போய்ச் சொல்வோம். (போகிறார்கள்.)

சிறு: என்னை விடு; அம்மாவிடம் போகிறேன்.

அர: மகனே, நானும் வரு கிறேன், உன்னோடு; அம்மாவைப் பார்க்கலாம்.

சிறுவன்: என் அப்பா துஷ்யந் தர்; நீ இல்லே.

அர: (சிரித்துக்கொண்டே தனக்குள்) இதைவிட வேறென்ன அத்தாட்சி வேண்டும்? தெளிவாகத் தெரிந்துவிட்டதே!

[தலையை ஜடையாகப் பிரித்துத் தொங்கவிட்டபடி சகுந்தலை வருகிறாள்.]

சகு: (தனக்குள்) ஸர்வதமன னுடைய ரட்சை மாறாமல் போய் விட்டதாமே! சீ! நான் துரதிருஷ் டம் பிடித்தவள்!

அர: (சகுந்தலையைப் பார்த்து) ஆ! சகுந்தலையா!

சகு: (அரசனைப் பார்த்ததும்) இவர் யார்? ரட்சையோடு என் குழந்தையைத் தழுவிக்கொள் கிறாரே!

சிறு: (அவளை நெருங்கி) இது யார், அம்மா, என்னைக் கட்டிக் கொள்கிறாரே?

அர: (சகுந்தலையைப் பார்த்து) என் அன்பே, தெரிந்து கொண் டாயா என்னை? உன்னிடம் கொடு மையாக நடந்து கொண்டேன்... ஆனால் அதுவும் எப்படியோ நன்மையாகத்தான் முடிந்தது!

சகு: (தனக்குள்) மனமே, சாந்தமாக இரு. உன் தெய்வத் துக்கு மனம் இரங்கிவிட்டது. இது அவரேதான்! (வெளிப்படையாக) ஆரியபுத்திரரே! உமக்கு ஜய முண்டாகட்டும்....... (அவள் தொண்டை அடைபடுகிறது. அதற்கு மேல் பேச முடியவில்லை.)

சிறு: அம்மா, இது யார்?

சகு: (துஷ்யந்தனைக் காட்டி) உன் அதிருஷ்ட தெய்வத்தையே கேள்.

அர: (சகுந்தலையின் கால்களில் விழுந்து) என் அன்பே, போனதை யெல்லாம் மறந்துவிடு. அப்போது என் மனத்தில் என்னவோ இருள் சூழ்ந்திருந்தது. அதனால்தான், குரு டன் தன் தலையில் இட்ட பூமாலை யைப் பாம்பு என்று எண்ணி உத றின மாதிரி உன்னைத் தள்ளி னேன்.

சகு: ஆரியபுத்திரரே, எழுந் திரும்; எழுந்திரும். இப்படிச் செய் வது உங்களுக்குத் தகுதி அல்ல.

[அரசன் எழுந்திருக்கிறான்.]

சகு: ஆரியபுத்திரருக்கு எப்படி அடியாளின் கவனம் வந்தது?

அர: இரு; என் வருத்தம் தீர்ந் ததும் சொல்லுகிறேன். அன்று உன் கண்ணீரை லட்சியம் செய்ய வில்லை. உன்னைப் புறக்கணித்தேன். அதே கண்ணீர் இப்போது உன் இமைகளில் ததும்பி நிற்கிறது. அதைத் துடைத்துவிட்டு என் மனத்தைத் தேற்றிக்கொள் கிறேன். (துடைக்கிறான்.)

சகு: (அரசன் விரலில் இருந்த மோதிரத்தைப் பார்த்து) ஆரிய புத்திரரே, இதோ அந்த மோதி ரம் இருக்கிறதே!

அர: ஆமாம். இந்த மோதிரம் கிடைத்ததனால்தான் எனக்கு உன் கவனம் வந்தது. [அவள் கையில் அதை அணிய வருகிறான்.]

சகு: தங்களை நம்பும்படி செய்ய எண்ணினேன். அந்தச் சமயம் பார்த்து இது என்னை ஏமாற்றி அநியாயம் பண்ணிவிட்டது. எனக்கு இதன்மேல் நம்பிக்கை இல்லை. தாங்களே இதை அணிந்துகொள் ளுங்கள்.

[இந்திரனின் தேர்ப்பாகன் மாதலி அவர்களை வாழ்த்திக் கொண்டே வருகிறான்.]

சிறுகதை :

மாம்பழம்

கருண குமார்

ஜப்பான் குண்டுக்குப் பயந்து வீட்டுக்காரர் கிராமத்தில் போய் முடங்குகிறார். குடியிருப்பவர்களுக்குக் கொண்டாட்டந்தானே! காயும் கனியும் அவர்களுக்கே சொந்தமாயின. கடைசியிலே—?

இரண்டாவது உலக யுத்தத்தின் போது குண்டு விழும் என்ற பயத்தினால் சென்னையை விட்டு ஓடியவர்களில் காந்தையாவும் ஒருவர். அவர்தான் நாங்கள் குடியிருக்கும் வீட்டுக்குச் சொந்தக்காரர்.

கீழ்க்கட்டு முழுவதையும் இருபத்தைந்து ரூபாய்க்கு எங்களுக்கு விட்டுவிட்டு அவர் மாடியில் வசித்தார். நாங்கள் இருந்த பேட்டை புதிதாக ஏற்பட்டது. வீட்டுக்காரர் சொந்த உபயோகத்துக்கு என்று ஆசைப்பட்டுக் கட்டியதால் வீடு பெட்டி போல் இருந்தது. தெற்குப் பார்த்த வாசல், தாழ்வாரம், சிறிய காம்பவுண்டு, பின்புறம் அழகிய சிறு தோட்டம் எல்லாம் இசைவாக அமைந்திருந்தன. வீட்டுக்கு முன்புறம் 'ஆர்ச்' கட்டுவித்து வாடா மல்லிகைச் செடிகள், சிவப்பு பூகின்விலீ கொடிகள், அழகிய காசித் தும்பைச் செடிகள் எல்லாம் வளர்த்திருந்தார். இடப்புறத்தில் தென்னம்பிள்ளை ஒன்று நின்றது. அதன் பக்கத்தில் பவழ மல்லிகை, செவ்வரளி, கனகாம்பரம் இந்தப் பூஞ்செடிகள் ஒய்யாரமாய் ஆடிக்கொண்டிருந்தன. கொல்லையில் கோவைக் கொடி, வாழைக் கன்று, தக்காளிச் செடி எல்லாம் தளதளவென்று செழிப்போடு வளர்ந்து கண்ணுக்கு விருந்து செய்தன. வீட்டு முன்புறம் காம்பவுண்டுக்குள் தென் புறத்தில் ஒரு மாஞ்செடியையும் வைத்திருந்தார் காந்தையா.

நாங்கள் அந்த வீட்டுக்குக் குடி போவதற்குமுன், எங்களுக்கு வீட்டுக்காரர் கடினமான நிபந்தனைகள் போட்டார். மாதம் பிறந்தால் சுளைசுளையாக இருபத்தைந்து ரூபாயைக் கொடுப்பது எங்கள் கடமை. வீட்டுத் தோட்டத்தில் பயிராகும் எந்தச் செடியின் மேலும் கை வைக்க எங்களுக்கு அதிகாரம் இல்லை; அவைகளை நாங்கள் கண்ணெடுத்துப் பார்க்கவும் கூடாது. கோவைக்காயை நினைத்து நாக்கில் ஜலம் ஊறக்கூடாது. தக்காளியையும் கத்தரிக்காயையும் பார்த்து ஆசைப் படக்கூடாது. இவ்வளவு

காப்பிரைட்: பாரதி (தெலுங்கு), சென்னை.

தூரம் எதற்கு? பத்தியச் சாப்பாட்டுக்குக் கருவேப்பிலை வேண்டியிருந்தாலும் வீட்டுச் சொந்தக்காரரின் அநுமதி இல்லாமல் அதைத் தொடக் கூடாதென்று கண்டிப்பான நிபந்தனை. ஆமாம்; சொத்து அவருடையது. அதுபற்றி என்ன வேண்டுமானாலும் அதிகாரம் செய்ய அவருக்கு உரிமை உண்டு; அது அவசியமாகவும் இருக்கலாம்.

பொழுது விடிய வேண்டியது தான் தாமதம்; கடப்பாரையையும் மண்வெட்டியையும் எடுத்துக் கொண்டு ஆஜராகி விடுவார் மனிதர்! ஒவ்வொரு செடிக்கும் பாதி வெட்டி, எருப் போட்டு வாய்க்கால் வெட்டுவார். தண்ணீர் பாய்ச்சுவார். பந்தல் போடுவார். குழந்தைகளை வளர்ப்பது போல் அந்த ஜடப் பொருள்களைப் பேணி வளர்த்தார். அப்படிக் கஷ்டப்பட்டு வளர்த்ததன் பயனைத் தம்மைத் தவிரப் பிறர் அநுபவிக்க எப்படிச் சம்மதிப்பார்?

அவர் திருப்பித் திருப்பிப் படித்த சட்டங்களுக்கு அடங்கினோம். வாழை குலை போட்டால் அவரே வெட்டிக் கொள்வார். பப்பாளி பழுத்தால் அவரே பறித்துக் கொள்வார். கோவை காய்த்தால் அவரே உதிர்த்துக் கொள்வார். முருங்கை பிஞ்சு வைத்தால் அவரே ஒடித்துக்கொள்வார். நாங்கள் அவைகளைக் காலகூட விஷமாக நினைத்தோம், இந்த இரண்டு வருஷமும்!

இந்த வருஷம் வேறு விதமாக நடந்தது. பாழும் யுத்தம் அவரை ஒரு கலக்குக் கலக்கிவிட்டது. 'எங்கே புலி' என்றால் 'இதோ வந்துவிட்டது' என்றார்கள் எல்லாரும். 'ஜப்பான்காரன் வந்துவிட்டான்; குண்டு போடுகிறான்; எல்லாரையும் தொப்சம் செய்கிறான்' என்ற கூக்குரல் காதைத் துளைத்தது. அப்பா! நினைத்தாலும் குலை நடுங்குகிறது. 'ஈர இரக்கம் இல்லாமல் ஊர்ஜனங்களின் மேலும் பள்ளிக்கூடங்களின் மேலும் கோவில்களின் மேலும் குண்டு வீசும் அரக்கன் நம் வீட்டை மட்டும் விடுவானா? எத்தனை ஆசையாய்க் கட்டிய வீடு! எவ்வளவு பாடுபட்டு வளர்த்த செடிகள்! எருதின் வலி காக்கைக்குத் தெரியுமா? இந்த வீட்டிலே இருப்பது - ஏன், சென்னையின் எல்லைக்குள்ளே இருப்பதுகூட - அபாயம்!' என்று நினைத்தார் அவர். அதற்கு ஏற்றாற்போல அவர் மனைவியும் சொந்த ஊருக்கே போய் விடலாமென்று ஜபம் பண்ணிக் கொண்டிருந்தாள். "உயிர் இருந்தால் உப்பு மாறிப் பிழைக்கலாம்" என்றாள். வீட்டுச் சாமான்களைச் சென்னையிலேயே தெரிந்த ஒருவர் வீட்டில் போட்டார். யாராவது குடித்தனம் வந்தால் தம் வீட்டு மாடிப் பாகத்தை இருபத்தைந்து ரூபாய் வாடகைக்கு விடச் சொல்லி எங்களிடம் சாவியைக் கொடுத்தார்; தம் மனைவியுடன் நெல்லூருக்குப் போய்விட்டார்.

அவர்கள் நகர்ந்த மறு நிமிஷமே என் மனைவியும் அவள் தம்பியும் வீட்டின் சர்வாதிகாரத்தை ஏற்றுக் கொண்டார்கள். வீடு, தோட்டம், காய்கறி, பழங்கள் எல்லாம் அவர்கள் ஆட்சிக்குள் வந்துவிட்டன.

அன்றுமுதல் என் மனைவியும், மைத்துனனும் வீட்டு விஷயமாக எடுத்துக்கொண்ட சிரமத்துக்கும் அக்கறைக்கும் அளவே இல்லை. காலையிலிருந்து மாலைவரைக்கும் கிடைத்த ஒவ்வொரு விநாடியும்

செடியைக் கவனிக்க முனைந்தார்கள்; செடிகளின் கீழேயே குடியிருந்தார்கள். வீட்டுக்காரரைவிட அதிகச் சிரத்தையுடன் காலை மாலை இரண்டு வேளையும் அவைகளுக்குத் தண்ணீர் ஊற்றினார்கள். ஆர்ச்சில் பூத்த ஜாதி, மல்லிகை, அரளி, கனகாம்பரம், பவழமல்லிகை எல்லாவற்றையும் ஓர் இதழ் வெளியே போகாமல் தாங்களே உபயோகித்துக் கொண்டார்கள். பாவம்! வீட்டுக்காரர்கள்தான் கொடுத்துவைக்கவில்லை. அவர்கள் போனது முதல் அந்தப் பொல்லாத செடிகள் பூத்துக் காய்த்துப் பழுத்துக் குலுங்க ஆரம்பித்தன. ஆவேசம் வந்ததுபோல் கோவைக் காய்கள் காய்த்துத் தள்ளின. ஒவ்வொரு நாளும் செடியில் கை வைத்தால் ஒரு வீசை காய்க்குக் குறையாது. சாப்பிட்டுச் சாப்பிட்டு எங்களுக்கு அலுத்துவிட்டது. தின்று ஜீர்ணித்துக்கொள்ள முடியாமலும், கஷ்டப்பட்டுப் பயிராக்கிய செடியின் காயைக் கையாரப் பிறருக்குத் தானம் செய்ய இஷ்டமில்லாமலும் என் மனைவியும் மைத்துனனும் தவித்த தவிப்பைச் சொல்லி முடியாது. போதாக்குறைக்கு இரண்டு வாழைகளும் குலை போட்டு இரண்டு வாரத்துக்குள் காய்கள் முற்றி ஒரு பக்கம் சாய்ந்தன. தக்காளிக்காய்கள் என்னவோ கொள்ளை போவது போல் ஏராளமாகக் காய்த்தன. ஒரு முருங்கைக்காயை இன்றைக்குப் பார்த்தால் மண்ணுண்ணிப் பாம்புபோல் இருக்கும்; நாலு நாளைக்குப் பின் பார்த்தால் புடலங்காய் மாதிரி பருத்துவிடும். இத்தனை காய்களையும் தின்று ஜீர்ணிப்பது யார்? தின்பதற்குத் தான் யார் இருக்கிறார்கள்? எங்கள் வீட்டிலே நான், என் சகதர்மிணி, என் மைத்துனன், அவன் மனைவி, என் பையன் இவ்வளவு பேர்தான். பத்துப் பலம் கோவைக்காயை வதக்கினால் 'ஓகோகோ' என்றாகி விடும். பருத்து நீண்ட இரண்டு வாழைக்காய்களை நறுக்கிச் சறி சமைத்தால், நாங்கள் சாப்பிட்டு இன்னும் இரண்டு பேருக்குக் காணும். ஒரு முருங்கைக்காயை நறுக்கிக் குழம்பில் போட்டால் இரண்டு வேளைக்கும் தாராளமாய் வரும்; மீதிக் காய்களை வேலைக்காரிக்குக் கொடுத்துவிடுவாள் என் மனைவி. செடிகள் நல்ல பக்குவ நிலைக்கு வரும்போது, பாவம், வீட்டுக்காரர் அநுபவிக்கக்கொடுத்து வைக்கவில்லை!

வீட்டுக்காரர் போன இரண்டு மாதத்துக்கெல்லாம் ஒன்றிரண்டு பெரிய மனிதர்கள் மாடிக்குக் குடித்தனம் வருவதாகச் சொல்லி வீட்டை வந்து பார்த்தார்கள். மாடியில் இருப்பவர்களுக்கும் கீழே இருப்பவர்களுக்கும் எந்த விதத்திலும் சம்பந்தம் இல்லாமல் போனாலும் வீட்டில் வேறொரு குடித்தனம் வந்துவிட்டால் இப்போது உள்ள சுயேச்சை இருக்குமா? மாடிக்கு யாரும் குடித்தனம் வருவது என் மனைவிக்கும் மைத்துனனுக்கும் கட்டோடு இஷ்டம் இல்லை. அதனால் வீடு பார்க்க வந்தவர்களிடம், மேலே சரியாகத் தண்ணீர் வராதென்றும் நெட்டுக்குத்தலான படிகளில் குழந்தைகள் தவறி விழுந்தால் அபாயமென்றும் கீழே இருப்பதுபோல் மேலே விஸ்தாரம் இல்லை என்றும் ஏதாவது குறை சொல்லி, வந்தவர்களை வாசலோடேயே திருப்பி அனுப்பி

விடுவார்கள். ஆனால் எத்தனை நாளைக்கு இந்தத் தந்திரம் பலிக்கும்?

ஒரு நாள், காந்தையா கைப்பட ஒரு கடிதம் எழுதி வாங்கிக் கொண்டு ஒரு தமிழர் வந்தார். அவர் காந்தையாவுக்குத் தெரிந்தவர் என்றும் அவருக்கு மாடியைக் குடியிருக்க விடவேண்டுமென்றும் கடிதத்தில் கண்டிருந்தது. வேறு வழி இல்லாமல் அவரைக் குடியிருக்க அநுமதிக்கும்படி நேர்ந்தது. அவர் பத்துக் குழந்தைகளுடன் மாடிக்கு வந்து சேர்ந்தார். இப்போது வாயை மூடிக்கொண்டிருந்தால் பின்னால் செடி, கறிகாய் முதலியவற்றின்மேல் அவர்கள் உரிமை கொண்டாடிவிடுவார்களோ என்ற முன்யோசனையுடன் என் மனைவியும் அவள் தம்பியும், "எங்கள் அநுமதி இல்லாமல் பூ, செடி, மரம் எதையும் தொடக்கூடாது" என்று கண்டிப்பாகச் சொன்னார்கள். அதோடு விடவில்லை. வீட்டுக்காரர் போட்ட ஷரத்துகளுக்கு ஒரு படி மேலே போய், "குழந்தைகள் தெரியாத்தனமாய்த் தொட்டு விடாமல் அவர்களையும் கண்டித்து வைக்கவேண்டும்" என்றும் தீர்மானமாய்ச் சொல்லிவிட்டார்கள். இப்படியெல்லாம் சொல்லியும் அந்த விடாக்கண்டர் வீட்டுக்கு வந்துவிட்டார்.

புதிய ஆசாமி மேலே குடி வந்துவிட்டாலும், கீழே வீட்டுத் தோட்டம், செடிகள் மீதுள்ள ஏகபோக உரிமையைச் சிறிதும் குறையாமல் எங்கள் வீட்டாரே அநுபவித்து வந்தார்கள்.

மாசி மாதம் வந்தது. தென்னண்டை மூலையில் இருந்த மாமரத்தில் குப்பென்று தங்கநிறப் பூக்கள் பூத்துக் குலுங்கின. தாழ்வாரத்தில் கட்டிலைப் போட்டுப் படுத்துக்கொண்டால் குளிர்ந்த காற்றோடு வாசனை கலந்து வரும். அந்த மரம் இப்போதுதான் கன்னிக்காய்ப்புக் காய்க்க ஆரம்பித்திருக்க வேண்டும். நாங்கள் இங்கே வந்து வசித்த இத்தனை வருஷத்துக்குப் பின் இப்போதுதான் முதல் முதலாகப் பூத்திருக்கிறது. புதிதாகக் கணவன் வீடு செல்லும் மணப் பெண்ணை நினைவூட்டியது அந்த மரம். அது ஒட்டு மாமரமோ என்னவோ, தெரியாது! இலைகள் கூடாரம் போல் பரந்து அடிமரத்தையே மறைத்துக்கொண்டன. தண்ணீர் ஊற்ற வேண்டுமென்றால் குனிந்து செடிக்குள் புகுந்து கொள்ள வேண்டும். தாழ்வாரப் படிமீது நின்றால், முகத்திலே மகரந்தப் பொடி வந்து சொரியும்.

"பூத்திருக்கும் மாமரத்துக்குத் தினந்தோறும் தண்ணீர் விட்டால், அத்தனையும் காய்" என்று யாரோ சொன்னார்களாம். தினமும் நாலு குடம் தண்ணீர் பாய்ச்சினார்கள். பூக்கள், கொஞ்சம் உதிர்ந்தாலும் முக்கால் வாசியும் காயாக மாறின. பிஞ்சுகளைப் பார்க்கும்போதே நாக்கில் ஜலம் ஊறியது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வரும் மாம்பிஞ்சுகளின் தோற்றம் எதிர்வீட்டுக் குழந்தை அரைஞாணைக் கட்டியிருக்கும் மாம்பிஞ்சு மாலையை ஞாபகப்படுத்தியது.

ஒட்டு மாமரந்தான்; ஆனால் எந்தத் தினுசு என்று தெரியாது. பெங்களூரா, பங்கனபல்லியா, சேலமா, பீத்தரா, எது என்று தெரியவில்லை. ஒரு நாள் கீழே உதிர்ந்த ஒரு பிஞ்சை வாயில் வைத்துக் கடித்துப் பார்த்தேன். அப்பா! குப்பென்று பங்கனபல்லி வாசனை



வேலி போடுகிறார்கள்....

ஜமாய்த்தது! என் மனைவியின் சந்தோஷம் கட்டுக்கு அடங்கவில்லை. மைத்துனனும் அப்படியே மகிழ்ந்தான். பட்டணத்திலே பங்கனபல்லி மாம்பழம்! இப்போது காய்த்திருக்கும் காய்கள் வீணாகாமல் முற்றினால்-கொஞ்சம் காற்றுக்கு உதிர்ந்தாலும் மிஞ்சுவது, குறைந்தது இருநூறாவது தேறும். அவைகளைப் பிறர் கண்ணில் காட்டாமல் காப்பாற்றினால் நல்ல பழமாக நூற்றைம்பது தேறும். சென்னைக்கு வந்தது முதல் பங்கனபல்லிக்கு வீங்கிப் போய்விட்டோம்.

கஷ்டப்பட்டால் சுகம் உண்டு. தோட்டத்துக்குள்ளே இருந்தது மரம். அதைக் காவல் செய்வது அப்படி ஒன்றும் சிரமம் இல்லை. ‘ஒருவர் மாற்றி ஒருவர், கையில் ஒரு புஸ்தகத்துடன் தாழ்வாரத்தில் உட்கார்ந்திருக்கலாம். மாடி வீட்டாரின் குழந்தைகளையும் பிச்சைக்காரர்களையும் ஒரு கண் கவனித்துக் கொண்டால் சரி; இரண்டு மாதத்தில் பழம் தயாராகிவிடும்.’ என் மனைவியும் மைத்துனனும் போட்ட பிளான் இது.

தோட்டத்திலுள்ள எல்லாச் செடிகளின் மூலமும் கிடைக்கும் லாபம் ஒரு பங்கு; மாமரம் தரும் பழம் மட்டும் ஒரு பங்கு-இது அவர்களின் நினைப்பு. கோவைச் செடி கருகினாலும் சரி; வாழைக் குலை இரவில் திருட்டுப் போனாலும் சரி; தக்காளி தண்ணீர் இல்லாமல் வாடினாலும் சரி; காசித் தும்பை காசிக்கே போய் விட்டாலும் சரி - அதனால் எல்லாம் பரவாயில்லை. வேறே என்ன இருந்தாலும், காமதேனுவையும், கற்பகத்தையும் போன்ற மாமரத்துக்கு ஈடாகுமா?

காய்கள் முதிரமுதிர, பெற்ற குழந்தையை வளர்ப்பது போல் அவைகளை என் மனைவியும் மைத்துனனும் ஆசையோடு காப்பாற்றினார்கள். காம்பவுண்டு சுவரைத் தாண்டி வெளியே நீட்டிக்கொண்டிருந்த கிளைகளில் முள்வேலி போட்டாள் மனைவி. தாழ்வாரத்துக்கு வருபவர்கள் மரத்தை நெருங்காதபடி முள் வேலி போட்டான் மைத்துனன். வெளியிலிருந்து அயோக்கியர்கள் யாராவது கல் எறிந்தால் மரத்திலிருந்து காய் காம்பவுண்டுக்குள்ளே தான் விழும்; வெளியே போகாது.

இத்தனை கட்டுக் காவலையும் மீறி யார் எந்த வேளையில் கல் எறிவார்களோ என்று கவலைப்பட்டார்கள் அக்காளும் தம்பியும். உள்ளே யார் நுழைந்தாலும் மாங்காய்க்காக வருகிறதாகவே இவர்களுக்கு எண்ணம். சதா சர்வதா மரததின் பக்கத்தில் இருந்துகொண்டு பாராக் கொடுத்தபடி இருப்பார்கள்;

வெளியில் 'மளுக்' என்ற சத்தம் கேட்டாலும், "யார் அது? போ, தூரப் போ!" என்று பைத்தியக் காரனைப் போல் தன்னையும் அறியாமல் என் மைத்துனன் கூச்சலிடுவான். கையில் ஒரு கட்டையை எடுத்துக்கொண்டு தாழ்வாரத்தில் நின்றுகொள்வான். தெருவில் போகிற சிறுவர்களைப் பார்த்து, "மரத்துப் பக்கம் போனீர்களோ முதுகுத்தோலை உரித்து விடுவேன்" என்று மிரட்டுவான். பிச்சைக்காரன் எட்டிப் பார்த்தால், வசவு மாரி பெய்து அவனை விரட்டியடிப்பான். ஒரு சமயம் வாசலோடு போன ஒரு ரிக்ஷாக்காரனுடைய சின்னப் பெண், "மாங்கா,சாமி" என்று கேட்டதற்கு, "உனக்கு மாங்காயா வேண்டும்? வா, தருகிறேன்" என்று அந்தப் பெண்ணைக் கூப்பிட்டு அவளுடைய இரண்டு கன்னத்திலும் இரண்டு அறை கொடுத்து அனுப்பினான். மாடியில் இருக்கும் குழந்தைகள் மார்க்கெட்டிலிருந்து வாங்கி வந்த மாங்காயைக் கையில் வைத்திருந்தால், அதையும் மரத்துக்காயையும் ஒப்பிட்டுப் பார்ப்பான். எங்கள் வீட்டு மரத்தில் எந்தக் கிளையில் எவ்வளவு காய்கள் இருக்கின்றன என்பது அவனுக்குத் தலைகீழ்ப் பாடம். காற்றில் அசைந்து ஒரு பிஞ்சு கீழே விழுந்து விட்டால், அக்காளும் தம்பியும் துடி துடித்துப் போவார்கள். திருஷ்டி பொம்மை ஒன்று பண்ணி வைத்தார்கள்.

அவர்களுடைய சிரத்தை, ஆசை, கஷ்டம் எல்லாவற்றையும் பார்க்க எனக்கு ஒருபுறம் சந்தோஷம்; மறுபுறம் வருத்தம். ஒன்றைப் பாடுபட்டு வளர்ப்பது ஒருவர்; அதை அநுபவிப்பவர் வேறொருவர்! இது சிருஷ்டியின் விசித்திரமான ஓர் உண்மை. வேண்டும், வேண்டுமென்று வீடு கட்டிய சொந்தக்காரர் அநுபவிக்கக்கொடுத்து வைத்தாரா? அவர் போனபிறகு அல்லவா மாமரம் இப்படிக் காய்த்துக் குலுங்குகிறது!

சித்திரை போய் வைகாசி வந்தது. காய்கள் மிருதுவாக இருந்து மாறிச் சதைப் பற்றுடன் கல்போல் இறுகின; தோலி முற்றிவிட்டன. காய்களின் பாரம் தாங்காமல் மரமே தாழ்ந்தது. அது வரையில் இலை மறைவில் இருந்த காய்கள் பருத்து, 'மைனாரிட்டி' நீங்கிய ஜமீன்தார்களைப்போல் கர்வத்தோடு வெளியே வந்தன. இலைகள் குறைந்து மரம் பூராவும் காயாகத் தோன்றியது.

நல்ல நாள் பார்த்துக் காய் பறிக்க ஏற்பாடு செய்தார்கள், என் மனைவியும் மைத்துனனும். மார்க்கெட் விலைக்கு மாம்பழம் வாங்கித் தின்று பழகிய அவர்களுக்குக் காயைப் பழுக்க வைக்கும் வித்தை எப்படித் தெரியும்? 'கூடையில் வைத்துக் கதவைத் தாழிட்டுப் பழுக்க வைப்பதா? வைக்கோலைச் சுற்றி வைப்பதா? எப்படி?' என்று தான் அவர்களுக்குத் தெரியவில்லை. 'பழுக்க வைக்கும் முறை தவறிவிட்டால் அழுகிவிடுமோ? பழுக்காமல் வெம்பிவிடுமோ? பூச்சி விழுந்துவிடுமோ?' என்றெல்லாம் பயந்தார்கள். என்னைக் கேட்டார்கள். மரந் தாங்காமல் பழங்கள் குலுங்கிய அந்தத் தோற்றம் எனக்கும் சற்றுத் தயக்கத்தை அளித்தது. வீணாக்காமல் பழுக்க வைத்தால் இந்த வருஷம் ஒரு தம்பிடி செலவில்லாமல் தெவிட்டத் தெவிட்ட மாம்பழம் தின்னலாம். என் சிறு பிராயத்தில் குளத்தங்கரையில் காய்த்த மாம்பழங்களை என் தகப்ப

னுர் பனை ஓலைக் கூடையில் போட்டு நெல் குதிருக்குள் வைத்ததாக ஞாபகம். வைக்கோலின் கதகதப்பிலே தான் அது பழுக்குமென்று கேள்விப்பட்டிருக்கிறேன். இதை அவர்களிடம் சொன்னேன். இங்கே குதிருக்கு எங்கே போகிறது? காற்று நுழையாத அறையே இல்லை. இருநூறு காய்களையும் பறித்து வைத்தால், ஓர் அறை நிறைந்து விடும். எங்கள் வீடு சின்னதுதான். நாலு நாள் கஷ்டப்பட்டால் பின்னால் நாங்களேதான் சுகப்படப் போகிறோம். அதனால் கதவுகள், ஜன்னல்கள் எல்லாவற்றையும் சாத்தித் தென்னண்டை அறையைத் தயார் செய்தார்கள் மனைவியும் மைத்துனனும். அந்த அறையில் பழங்களை வைக்கத் தீர்மானித்தார்கள்.

உள்ளே இருந்த பீரோ, மேஜை பெட்டிகள் எல்லாவற்றையும் ஹாலில் எடுத்துப் போட்டார்கள். கடைக்குப் போய் ஐம்பது பழம் கொள்ளக்கூடிய நாலு பெரிய கூடைகளை வாங்கி வந்து உள்ளே வைத்தான் மைத்துனன். ஒரு ரூபாய்க்கு வைக்கோல் புரி வாங்கிப் பிரித்துக் கூடைகளில் பரப்பினாள் மனைவி. கடைசியாக மரத்திலிருந்த பழங்களை இருவரும் எண்ணினார்கள். இருநூறு காய்க்குப் பத்துப் பன்னிரண்டு குறைந்தது.

போது விடிந்தால் வளர் பிறைப் பஞ்சமி. புதன்கிழமை சாய்களைப் பறிக்க நிச்சயித்தார்கள். பறிக்கும்போது காய்கள் கீழே விழக் கூடாது. விழுந்து நசுங்கினால் பழம் அழுகிவிடும் என்ற பயம். அதனால் என் மனைவியும் மைத்துனனும் ஒவ்வொன்றாகப் பறிக்க வேண்டும்; என் பையனும் மைத்துனன் மனைவியும் அவைகளை வாங்கிக் கண்ணாடிப் பொம்மைபோல் அலுங்காமல் நலுங்காமல் கொண்டு போய் உள்ளே கூடையில் வைக்க வேண்டும். இந்த விதமாக ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

மறுநாள் சீக்கிரமே எழுந்து சமையலை முடித்தாள் என் சகதர்மிணி. நான் பத்து மணிக்குச் சாப்பிட்டு விட்டு ஆபீசுக்குப் போனேன்.

மாலையில் ஏழு மணிக்கு வீட்டில் நுழையும்போது தாழ்வாரத்திலிருந்து மாமரத்தை அண்ணாந்து பார்த்தேன். அது சோபை குன்றிக் களையிழந்து தென்பட்டது. மரத்தின் கீழே தழைகளும் காம்புகளும் சிதறிப் பார்க்கச் சகிக்கவில்லை. 'ஒரு காய் இல்லாமல் இருவருமாகப் பறித்து விட்டார்கள்போல் இருக்கிறது' என்று நினைத்துக்கொண்டே நான் உள்ளே நுழைந்தேன். சாய்வு நாற்காலியில் சோர்ந்து படுத்திருந்தான் மைத்துனன். தரையில் படுத்துப் பொல பொல வென்று கண்ணீர் பெருக்கிக்கொண்டிருந்தாள் என் மனைவி.

"ஏன் என்னவோபோல் இருக்கிறாய்?" என்று அவளைக் கேட்டேன்.

"இரண்டு மாதமாய், கை புண்ணாக உழைத்து வளர்த்தேன் காயை" என்று தொண்டை அடைக்க விக்கினாள் அவள்.

"என்ன காய்?" என்றேன்.

"பங்கனபல்லி மாங்காயைத் தான். பட்டணத்தில் கிடையாதே; தின்றது போகக் குண்டூருக்கு எங்கள் வீட்டாருக்கும் கொஞ்சம் அனுப்பலாமென்று மனப்பால் குடித்தேன்."

"ஆமாம்; அது என்ன ஆச்சு?"

"நீங்கள் வீட்டை விட்டு இறங்கி அந்தப் பக்கம் போனதுதான் தாமதம்; அவரும் இந்தப் பக்கமாக உள்ளே நுழைந்துவிட்டார்.

"யாரது?"

"எல்லாம் அந்தச் சனீசுவரன் காந்தையாதான்!"

"வந்து-?"

"இன்னும் முற்றவில்லை என்று சொல்லி நாங்கள் எவ்வளவு தடுத்தும் உதறிவிட்டு இரண்டு கூலிகளைக் கூப்பிட்டு மாங்காயையெல்லாம் பறித்துக்கொண்டு போய் விட்டார்"

"மாங்காய் விஷயம் அவருக்கு எப்படித் தெரிந்தது?"

"மாடியில் இருக்கும் மகாராஜன் தான் எழுதியிருப்பான்?"

"அவனுக்கு அதில் என்ன லாபம்?"

"வயிற்றெரிச்சல்தான்! கொல்லையில் காய்க்கும் காய்களையெல்லாம் நாமே தின்றுவிடுகிறோம் என்று ஏற்கனவே பொருமிக்கொண்டிருந்தான். தமிழ் வருஷப் பிறப்பன்று 'வாசற்படிக்குத் தோரணம் கட்ட மாவிலை பறித்துக்கொள்ளுகிறேன்' என்றான் அவன். 'முடியாது' என்றான் என் தம்பி. அதற்காகப் பழி தீர்த்துக்கொண்டுவிட்டான் அந்த மனுஷன்!" என்றாள்.

சரிதான்; விஷயம் தெள்ளத் தெளியப் புரிந்துவிட்டது.

சாதாரண மனிதன்

'இது சாதாரண மனிதனின் காலம்' என்று ஓயாமல் கூச்சல் போடுகிறார்கள். இது அபாயம். இதனால் மக்களின் திறமை மட்டரக மாகிவிடும்.

ஆனால், இந்தச் சாதாரண மனிதன் யார்? எவனும் தன்னைச் சாதாரண மனிதன் என்று எண்ணுவதே யில்லை. சகலமான பேருக்கும் சரிசமமான சந்தர்ப்பம் இருக்கவேண்டும் என்றுதான் எல்லாரும் கருதுகிறோம். அப்படியென்றால், தலைவனாக உயர்ந்தெழவும் எல்லாருக்கும் சந்தர்ப்பம் இருக்கும்.

உங்களுக்கு வியாதி வந்தால் அசாதாரண டாக்டரைத் தேடுகிறீர்கள்; உங்கள் கார் பழுதானால் அசாதாரண மெக்கானிக்கைத் தேடுகிறீர்கள்; நாம் யுத்தத்திலே சிக்கினால், அசாதாரண தளபதியை நாடுகிறோம். தங்கள் குழந்தைகள் அசாதாரண புருஷர்களாகவும் ஸ்திரீகளாகவும் வளரவேண்டும் என்று ஆசைகொள்ளாத தாயும் தந்தையும் எவராவது உண்டா?

மட்டரகத் திறமையுள்ளவரால் நாட்டின் வருங்காலம் பெருமை பெறாது; நம் தேசீய வாழ்க்கையின் சகல துறைகளிலும் புதுப்புதுத் திறமை வாய்ந்த தலைவர்கள் இடையறாது தோன்றிக்கொண்டே யிருக்கவேண்டும். அதுதான் நமது வருங்காலச் சிறப்புக்கு வழி.

—ஹெர்பர்ட் ஹூவர், 'திஸ் வீக்.

காப்பிரைட்: நவயுகப் பிரசுராலயம், சென்னை.

பெண்

தபால்காரன் ஒரு கூரை வீட்டின் முன்னால் நின்று, "ஜம்னா பாய்! தபால்!" என்று கத்தினான்.

உள்ளே சாணத்தால் மெழுகிக் கொண்டிருந்த ஜம்னா குரலைக் கேட்டாள். அதை அவள் வருஷக் கணக்காக எதிர்பார்த்து மறந்து போயிருந்தாள்; ஆயினும் அதை அறிந்துகொள்ள அவளுக்கு நேரம் பிடிக்கவில்லை.

அவள் இடைகழிக்கு வந்த போது தபால்காரன் வெகு தூரம் போய்விட்டான். சாணம் ஒட்டிய கையில், இரண்டு விரல்களால் மட்டும் பிடித்துக்கொண்டு அவள் அந்தப் பாக்கெட்டைப் பார்த்தாள். உள்ளே என்ன இருக்கிறது என்று அறிய அவள் அதை மெதுவாக அழுத்தினாள். 'அடே! இது ஏதோ அச்சிட்ட புத்தகம்! இத்தனை பெரிய கடிதமா அவர் எழுதுவார்? இது அவர் கடிதமல்ல' என்று அவள் யோசித்தாள்.

திடீரென்று ஒரு புது விஷயம் அவள் மூளையில் உதித்தது. 'காளியம்மையின் கல்கத்தா மிசப் பெரிய பட்டணமாச்சே! என்னைத் திடுக்கிட வைக்க, அவர் ஏதாவது ஓர் அச்சாபீஸுக்குப் போய் இந்தக் கடிதத்தை அச்சடித்து அனுப்பியிருக்கலாம்! நகரத்துக்குப் போனாலே எல்லாரும் ஷோக் பேர்வழிகள் ஆகிவிடுவார்கள். அங்குள்ளவர்கள் தண்ணீரைக்கூட விலை கொடுத்து வாங்கிப் புட்டித் தண்ணீராகத்தான் குடிப்பார்கள். இந்தக் கடிதம் அவர் எழுதியதாக இருந்தாலும் இருக்கலாம். பள்ளிக்கூடத்திலிருந்து ஹல்லீ வரட்டும்; இதைப் படிக்கச் சொல்கிறேன்' என்று அவள் நினைத்தாள்.

அவள் தேகத்தில் சுறுசுறுப்பு உண்டாயிற்று. சட்பட்டென்று மெழுகிவிட்டு, மண் தொட்டியில் தண்ணீர் நிரப்பி அவசர அவசரமாகக் குளித்தாள். ஈரக் கூந்தலிலிருந்து நீர்த் துளிகள் உதிர, அடுப்பருகில் போய் அவள் உட்கார்ந்தாள்.

"அம்மா, எங்கே இருக்கிறாய்?" என்ற குரல் வந்தது.

ஹல்லீ வந்துவிட்டான். மைக் கறை படிந்து, சீட்டித் துணிபோல் காணப்பட்ட ஒரு துணிப்பை அவன் கக்கத்தில் இருந்தது. வலது கையில் மைப்புட்டி. இப்போது தான் சிறையிலிருந்து விடுபட்டு வந்தவன் போல, முகத்தில் சந்தோஷக் களை!

ஜம்னா சமையலறையிலிருந்தே, "இதோ வந்துவிட்டேன், ஹல்லீ! இன்று என்ன இவ்வளவு நேரம் உனக்கு? வா, சாப்பாடு தயாராக இருக்கிறது!" என்றாள்.

ஹல்லீ புத்தகப் பையை ஒரு புரையில் எறிந்துவிட்டு உள்ளே ஓடினான். "கீரையும் ரொட்டியுந்தானா சமையல்? உருளைக்கிழங்கு என் செய்யவில்லை? நான் ஒண்ணுமே சாப்பிடமாட்டேன், போ!" என்று பிடிவாதம் பிடிக்க ஆரம்பித்தான்.

ஜமனா சிரித்தாள். "இன்றைக்கு உனக்கு ஒரு நல்ல வஸ்து கொடுக்கப் போகிறேன்!" என்றாள்.

ஹல்லீ தனக்குப் பிரியமான லட்டு, பேடா, ஜிலேபி முதலிய பண்டங்களை எண்ணிப் பார்த்தான். என்ன வஸ்து கிடைக்குமென்று அவனுக்குத் தெரியவில்லை. தாய் அந்தப் பாக்கெட்டை எடுத்ததும், 'இதில் சாப்பிட என்ன இருக்கப் போகிறது!' என்று நினைத்தான். மறுக்ஷணம் முகமலர்ச்சியோடு, "ஓகோ! அது வந்துவிட்டதா!" என்றான்.

ஜம்னு சந்தேகத்தோடு, "இந்தக் கடிதம் வரப்போகிறதென்று உனக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டாள்.

"கடிதமா? - யாருடைய கடிதம் வரவேண்டும்? இது காலண்டர், அம்மா! உன் பெயரால் தபால் தலை ஒட்டாத கடிதம் எழுதிப் போட்டேன். வருமோ வாராதோ என்று நினைத்தேன்" என்று சொல்லி விட்டு, அவன் தாயைக் கவனிக்காமலே, அந்தப் பாக்கெட்டை வாங்கி மேலும் கீழுமாகப் புரட்டினான். அதை எப்படி உடைப்பதென்றே அவனுக்குத் தெரியவில்லை.

"ஒன்றும் பார்க்கத் தெரியாது; படிக்கத் தெரியாது. அது இல்லை, இது இல்லை என்று மட்டும் சொல்லத் தெரியும்!" என்று ஜம்னு அவனை அதட்டிக் கூறினாள்.

அம்மா ஏன் சந்தோஷமாக இல்லை என்பது அவனுக்கு விளங்கவில்லை. இத்தனை அருமையான வஸ்துவை எவ்வளவு தூரத்திலிருந்து அவன் வரவழைத்திருக்கிறான், அதுவும் காலணாச் செலவு இல்லாமல்! இது புகழ வேண்டிய செய்கை அல்லவா? அம்மா இதற்காகத் தன் வாயால் ஒரு வார்த்தைகூடச் சொல்லவில்லையே!

இரண்டாம் வேளை படிக்க அவன் பள்ளிக்கூடம் போனான். ஜம்னு அன்று சாப்பிடவே இல்லை.

மனத்திலே துக்க தேவதை வந்துற்றபோது, அதை ஏற்று மனிதன் தன் உணவையும் நீரையும் மறந்துவிடுவதுதான், அவன் அதற்குச் செய்யும் மரியாதை. துன்பத்தின் நடுவில் இந்த இன்பம் இல்லாவிட்டால் அதை யார்தான் ஏற்றுக் கொள்வார்கள்? ஜம்னுவுக்கு இந்தத் துன்பம் புதிதல்ல. மூடிய பெட்டியில் வைத்த பழைய பொம்மையைப் போல, மறுபடி அது அவள் கைக்கு வந்தது; அப்போது அது அவளுக்குப் புதிது போலவே தோன்றியது. பழைய நினைவுகளில் ஆழ்ந்து போன அவளுக்கு, பொழுது எப்போது சாய்ந்தது என்பதே தெரியவில்லை.

"அம்மா, அம்மா! இன்னுமா விளக்கு ஏற்றவில்லை?"

ஹல்லீயின் குரல் அவளைத் திடுக்கிடச் செய்தது. "இதோ ஏற்றுகிறேன்" என்று கூறி அவள் எழுந்து நின்றாள்.

2

ஐந்தாறு வருஷங்களுக்கு முந்திய சமாசாரம். ஜம்னுவின் கணவன் பிருந்தாவனனுக்கு நகரத்துக்குப் போகவேண்டுமென்ற பைத்தியம் பிடித்தது. வீட்டின் பண நிலைமை அப்படியொன்றும் கெட்டுப் போயிருக்கவில்லை. பசுமாடுகள், பாட்டன் காலத்து நிலம், நிலத்திலேயே நல்ல செங்கல் கிணறு - இவ்வளவும், எல்லாம் ஒரே மொத்தமாக, எத்தனை பேரிடம் இருக்கும்? அவனுடைய கிழத் தந்தைக்கு, ஒரு குடியானவன் இதைவிட அதிகம் வேண்டுமென்று ஆசைப்படுவது அதிருப்தியையே அளித்தது. "வீட்டில் இருக்கும் பசுவுக்குத் தொண்டு

செய்யமாட்டான்; வெளியே போய் அயலார் செருப்புக்கு உழைக்கப் போகிறானாம்! இந்தக் காலத்துப் பையன்களின் புத்தியே கெட்டுப் போச்சு!" என்றான் கிழவன்.

பழங்காலத்துத் தந்தையின் இந்தப் பேச்சு மகனுக்கு விளங்கவில்லை. ஜம்னாவின் அழுகையும் புலம்பலும் மட்டும் இவனை ஒரு முறை யோசனை செய்ய வைத்தது வாஸ்தவம். ஜம்னா நல்ல கட்டழகி. அவள் மடியில் ஒரு சிறு குழந்தை. இவையெல்லாவற்றையும் விட்டுப் போவது பிருந்தாவனனுக்குக்கூட வருத்தமாகத்தான் இருந்தது. ஆனால் எந்தக் கூட்டாளியுடன் போவதாக முடிவாகியிருந்ததோ, அவனிடம் இவன் என்ன பதில் சொல்வது? ஆணாயிருந்து பெண்ணுக்கு அடிமையாவது வெட்கமில்லையா? ஆகவே, திடீரென்று ஒரு நாள் இவன் யார் கண்ணிலும் படாமல் இரவோடு இரவாக ஓடிப் போனான்.

ஆரம்பத்தில் அவனிடமிருந்து இரண்டு மூன்று கடிதங்கள் வந்தன. கல்கத்தாவில் ஓர் ஆலையில் அவனுக்கு வேலை கிடைத்தது. தன் மகன் அவ்வளவு தூரம் போய், கல்கத்தாவில் இருக்கிறானே என்று தந்தையின் மனம் சிறிது ஆறுதல் அடைந்தது. அது எவ்வளவு தூரம் என்று அவனுக்கே தெரியாது. அங்கே இந்த ஊரான் எவனும் கனவில்கூடப் போனதில்லை. அப்படி எவனாவது ஒருகால் போயிருந்தாலும், அங்கேயே நிலைத்தவன் எவனுமில்லை. இந்த அற்புதச் செய்தியை ஊராரிடம் சொல்லி, பிருந்தாவனன் வரைந்த கடிதங்களையும் பிரமாதமாகப் படித்துக் காட்டுவான் கிழவன். சில நாளைக்குப் பிறகு இது சாதாரணமாகிவிட்டது. அவனுடைய மனம் உடைந்தது; பின்பு கிழச் சரீரமும் சாய்ந்தது. அவன் கட்டிலில் படுத்துக் கிடந்தான். ஜம்னா அல்லும் பகலும் மாமனுக்குப் பணிவிடை செய்தாள்.

நோய், பிடிவாதம் பிடிக்கும் குழந்தையைப் போன்றது. புத்தி சொல்லிச் சமாதானப்படுத்தி எப்படியாவது கொஞ்ச நேரத்துக்கு அதை வசப்படுத்தலாம்; ஆனால் சாவு, அவ்வளவு சாதுவல்ல. தன்பாட்டிலே வந்துவிட்டு, நடுவிலே அது எப்படி நிற்கும்? ஒரு நாள் பிருந்தாவனனுடைய தந்தையின் முடிவுக்காலம் நெருங்கியது.

மேல்மூச்சு வாங்கிக்கொண்டே அவன் ஜம்னாவைப் பார்த்து, "குழந்தாய், அவன் வரவில்லை; வராமலே இருக்கட்டும்! என் உண்மையான பிள்ளை நீதான்! நீ அவனைவிட வேறல்ல. பயப்படாதே, குழந்தாய். இப்போது என் துன்பம், நோய் எல்லாம் பறந்து போச்சு; எனக்கு அழைப்பு வந்துவிட்டது. நீ அழாதே. குழந்தையைப் பார்த்துக்கொள். உன் புண்ணியம் உன்னைக் காக்கும்!" என்றான்.

அன்றிரவே ஜம்னா தன் சிறு குழந்தையுடன் வீட்டில் தன்னந்தனியே வசிப்பவளானாள்.

சற்று நிலைத்தவுடன், வீட்டிலிருப்பதெல்லாம் தன்னுடையதல்ல என்பதையும், தன்மீது ஒரு பெரிய கடன் சுமந்திருப்பதையும் அவள் உணர்ந்தாள். முதல்முதலில் அந்த வீட்டில் அந்தக் கடன் வந்தபோது புதிதாகக் குழந்தை பிறந்ததுபோல ஆனந்தமாக அதைக் கொண்டாடினார்கள். குழந்தை ஒரு குறிப்பிட்ட எல்லைவரைக்கும் வளர்ந்து நின்றுவிடும்; ஆனால் கடனின் வளர்ச்

சிக்கு எல்லே ஏது? அது வளர்ந்து கொண்டே போகும்; வீட்டின் கூரையும் சுவர்களும் அதன் வளர்ச்சியைத் தடுக்க முடியாது. அடைமானம் வைத்த கிணற்றையும் வயலேயும் அப்போது ஜம்னுவினல் மீட்க முடியவில்லை; காளை மாடுகளை விற்று வேறு சில கடன்களுக்கு மட்டும் செல்லு வைத்துவிட்டாள்.

இந்தச் சம்பவங்கள் நிகழ்ந்து வெகு நாளாகிறது. ஹல்லீ இப்போது பெரியவனுகிப் பள்ளிக்கூடம் போகிருன். அவனுடைய புத்தகக் கட்டைப் பார்த்து, 'பையன் ஏதோ படிக்கிருன்' என்று ஜம்னு நினைக்கிருள். ஆனல் என்றைக்கு அவளுடைய கணவனின் கடிதம் வந்து, அதை ஹல்லீ அவளுக்குப் படித்துச் சொல்வானே, அன்றைக்குத்தான் அவன் படிப்பை அவள் உறுதியாக நம்புவாள்.

3

ஜம்னு, தூக்கத்திலே, முன்பின் தெரியாத ஏதோ ஓர் இடத்துக்குப் போகிருள். வயல்களில் பசுமையான கதிர்கள் காற்றில் ஆடுகின்றன. கல்கத்தாவில் நெல் நிறைய விளைவதாக ஹல்லீ சொன்னனே; இதுதான் அந்த இடமோ?

சிறிது தூரத்தில் ஆட்டுக்கடா ஒன்று நிற்கிறது. ஜம்னுவைப் பார்த்ததும் அது சரேலென்று ஓடுகிறது. சில பெண்கள் ஆண்களை ஆட்டுக் கடாவாக மாற்றி வைத்துக்கொள்வார்களாமே! இதை நினைத்ததும் அவள் பயப்படுகிருள். தன்னை அறியாமல் ஆட்டின் பின்னல் ஓடுகிருள்.

பயங்கரமான ஒரு காடு; அதற்கு ஆரம்பமோ முடிவோ இருப்பதாகத் தெரியவில்லை. ஜம்னு அங்கே தனியாக உட்கார்ந்து அழுகிருள். சிறிது நேரத்தில் இரண்டு பேருடைய நிழல் தென்படுகிறது. ஒன்று ஆண்; மற்றென்று பெண். அடடா! அவன் பிருந்தாவனன்! கூட இருக்கும் அந்தப் பெண் யார்?

அந்தப் பெண் ஜம்னுவைச் சுட்டிக் காட்டி, "இவளைத்தான் அழைத்து வருவதாக இருந்தீர்களா? யார் இவள்?" என்று கேட்கிருள்.

"இவளா? ஒரு பட்டிக்காட்டுப் பெண். அன்று ஒருத்தியைப்பற்றிப் பேசினேனே, அவள்தான் இவள்" என்கிருன் பிருந்தாவனன்.

"வேடிக்கையான பெண்தான்!" என்று அவள் பதில் சொல்கிருள். பிருந்தாவனனும் முகத்தைத் திருப்பிக்கொண்டு சிரிக்கிருன்.

ஜம்னுவின் உடல் முழுவதும் எரிகிறது. 'இவளுடைய வலேயிலா இவர் சிக்கியிருக்கிருர்? இவளோடு கலந்து சிரிக்கிருரே! என்னை ஏனென்றுகூடக் கேட்கவில்லையே! சீச்சி, என்ன நீசப் பெண்! உருவத்திலும் நிறத்திலும் அழகில்லை; பேச்சும் நன்ருயில்லை. பளபளப்பான சேலை அணிந்திருப்பதனுலேயே தன்னைப்போல் யாருமில்லை என்று நினைக்கிருள்!'

ஜம்னு ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்து அவளிடம் போவதற்குள் அவள் தன் உருவத்தை மாற்றிக் கொள்கிருள். 'ஐயோ அம்மா! இவளுக்கு எவ்வளவு நீளமான பல்! இவள் மனிதனை விழுங்கும் ராட்சசியாச்சே!'

உரக்கச் சத்தம் போட்டுப் படுக்கையிலிருந்து எழுந்தாள் ஜம்னு. "அம்மா, என்ன ஆச்சு, என்ன ஆச்சு?" என்று கேட்டுக்கொண்டே ஹல்லீயும் எழுந்தான்.

பறவைகள் கூவின; இருட்டு இன்னமும் கொஞ்சம் கொஞ்சம்

இருந்தது. ஏதோ ஓர் அலௌகிக மான தூப பாத்திரம், காலைப் பொழுதை வரவேற்க, இந்த நறு மணத் தூபத்தை எங்கும் ஒரே மாதிரியாய்ப் பரப்பியதோ என்று தோன்றிற்று.

"பயப்படாதே, ஹல்லீ! நான் கனாக் கண்டேன்" என்று வெட்கத் தோடு சொன்னாள் ஜம்னா. பிறகு சோர்ந்த முகத்தோடு படுக்கையைச் சுருட்டி வைத்துவிட்டுக் கட்டிலைத் தூக்கினாள்.

4

பகலில் ஹல்லீ பள்ளிக்கூடத்தி லிருந்து வந்ததும், "இன்று சாயந் தரம் எனக்கு ராமாயணம் படித்துச் சொல்கிறாயா, குழந்தாய்?" என்று ஜம்னா கேட்டாள்.

"நம்முடைய புத்தகம் நன்றா யில்லை, அம்மா! ஏடு ஏடாகக் கிழிந்து போய்விட்டது" என்று தன் உற்சாகக்குறைவைத் தெரிவித்துக்கொண்டான் ஹல்லீ.

"அத்தனை பெரிய எழுத்துள்ள புத்தகம் இனி எங்குமே கிடைக் காது. ஐந்து ரூபாய் கொடுத்து வாங்கியது அது!"

"ஐந்து ரூபாயா! இரண்டே ரூபாயில் பொன்னெழுத்துப் பொறித்த பேஷான பைண்டு புத்தகம் வாங்கி வருகிறேன், அம்மா! நீ பார்த்தால் மலைத்துப் போவாய். ரூபாய் கொடுக்கிறாயா?"

'ராமாயணப் புத்தகத்துக்கு இரண்டு ரூபாய் என்ன பிரமாதம்?' என்று அவள் நினைத்தாள். "இந்தா, வாங்கி வந்து எனக்குப் படித்துச் சொல்லு" என்று கூறி, ரூபாய் கொடுத்தாள். ஹல்லீ ஆனந்தமாகக் குதித்துக்கொண்டே போனான்.

வீட்டில் தனியாக இருக்கவே, மீண்டும் அவள் மனம் கலங்கியது. வீட்டு வேலைகளை முடித்துவிட்டு, அவள் வயல்வெளிக்குச் சென்றாள். அந்தி வேளையில் அந்த அழகிய இடத்தில் அவளுக்குப் பழைய நினைவுகள் தோன்றின. கணவனோடு ஆனந்தமாய்ப் பழகிய நாட்கள் ஞாபகத்துக்கு வந்தன. வெகு நேரம் அவள் அங்கேயே உட்கார்ந் திருந்தாள்.

"மாமரத்தின் கீழே யார் இருப் பது? அடே! ஜம்னுவா? இந்த வேளையில் நீ இங்கே எப்படி இருக் கிறாய்?"

எதிரே ஒற்றையடிப் பாதையில் அஜீத் நிற்பதைக் கண்டு அவள் வெட்கமடைந்தாள். "இதோ, நான் வீட்டுக்குத்தான் போகிறேன். நீ எங்கிருந்து வருகிறாய்?" என்று கேட்டாள்.

"தனுவின் குச்சிலிலிருந்து வருகிறேன். அவன் வீட்டுக் காரியைக் கடுமையான பேய் பிடித்திருக்கிறது. எத்தனையோ மந்திரவாதிகள் வந்து ஒன்றும் செய்ய முடியாமல் போய்விட்டார் கள். என்னை வந்து கூப்பிட்டான். அவளுக்கு ஆயுள் மிச்சம் இருந்தது என்றுதான் சொல்லவேண்டும். இன்னும் ஒரு நாள் கடந்து போயி ருந்தால் என் வசத்தில் ஒன்றும் இருந்திராது" என்றான் அஜீத்.

ஜம்னா மெதுவாக அவனுடனே சென்றாள். "என் நாட்டாண்மைக் காரரே, காலையில் காணும் கனவெல் லாம் உண்மையாகவே நடக் குமோ?" என்று அவனைக் கேட்டாள்.

"நடக்கும், நடக்காமலும் இருக் கும். ஏன், என்ன விஷயம்? அண்ணா பிருந்தாவனைப்பற்றி ஏதா வது கனவு கண்டாயோ?"

சந்திரன் மரங்களின் மறைவில் ஒதுங்கினுன்; ஆயினும் பார்வையைக் கீழே செலுத்தியபடி "ஊம்" என்ருள் ஜம்னு. கண்டவனிடமும் கணவன் பேச்சை எடுக்க, அவளுக்குச் சங்கோசமாக இருந்தது.

"எனக்கு முதலிலேயே தெரியும். அந்தப் பழைய பேச்சையெல்லாம் விட்டுவிடு. புதுக் குடும்பம் அமைத்துக்கொள்; அப்போதுதான் உனக்குச் சுகம் கிடைக்கும்."

"அண்ணி செத்துப்போய் இவ்வளவு நாளாகியும் நீ மட்டும் ஏன் மறுபடி குடித்தனம் வைத்துக் கொள்ளவில்லை?"

"என் விஷயம் வேறு. ஜனங்கள் மேல்வாரியாகப் பார்க்கிருர்கள். அதனுல்தான் 'இவனுக்குத் துன்பம்' என்கிருர்கள். ஒருவனுக்கு வெறும் துன்பம் மட்டுமே இருந்தால் அவன் எப்படி உயிர் பிழைத்திருப்பான்? இன்று பகலில் அடுப்பு மூட்டிக்கொண்டிருந்தபோது அவன் என்னை இழுத்துப் போனுன். மந்திரிக்கவோ, கழிப்புக் கழிக்கவோ போனுல், அந்த இடத்தில் தண்ணீர் குடிப்பதுகூடப் பாவம். இனி வீட்டுக்குப் போய் நெருப்பு மூட்டுவதேது? இன்று முழுவதும் உபவாசம். ஆனந்தம் இதிலுந்தான் இருக்கிறது. ஆண்டவன் நம்மை எப்படி வைக்கிருனே அப்படி இருக்க வேண்டியது."

ஜம்னுவுக்கு அவனிடம் அநுதாபம் உண்டாயிற்று. அவளது உள்ளம் ஆவலோடு, 'ஆனந்தம் இதிலும் இருக்கிறது, ஆனந்தம் இதிலும் இருக்கிறது!' என்று உருப்போட்டது.

அஜீத் போய்விட்டான். ஹல்லீ ராமாயணப் புத்தகத்தோடு வந்து காத்திருப்பான் என்று ஜம்னுவுக்கு ஞாபகம் வந்தது. அவளும் வேகமாக நடந்தாள்.

5

மைதானத்தில் பல பையன்கள் முன்னமே வந்துவிட்டார்கள். ஒரு பையன் துணியால் தைத்த பந்தும், தேக்கம் பலகையில் செய்த மட்டை ஒன்றும் கொண்டு வந்தான். "ஓர் ஆட்டம் பந்து விளையாடலாம்" என்ருன் அவன்.

மற்ருெரு புறம் சில பையன்கள் கோலி விளையாடிஞர்கள்.

ஹல்லீ வந்ததும், "ரெயில் விளையாட்டு விளையாடலாம், வாருங்கள். இந்த மொட்டை, மொட்டை வண்டியாக உபயோகப்படுவான்" என்ருன்.

எல்லாப் பிள்ளைகளும் உற்சாகத்தோடு இந்த ஆலோசனையை ஒப்புக்கொண்டார்கள். ஏழு பெட்டிகளோடு எஞ்சினை மாட்டி, வண்டி புறப்பட்டது.

ஸ்டேஷன் ஜபல்பூர். வண்டி இங்கே ஐந்து நிமிஷம் நிற்கும். பின்பு லக்னௌ; பிறகு லாகூர்; லாகூரிலிருந்து டில்லி!

"டில்லி இல்லை; இந்த ஸ்டேஷன் கல்கத்தா!" என்ருன் ஹல்லீ.

வண்டி மறுபடி புறப்பட்டு ஒரு ஸ்டேஷனில் நின்றபோது, "கரம் சா! சா கரம்!" என்று ஒரு பையன் கூவினுன். ஹல்லீ ஒரு கப் டீ வாங்க, சட்டைப் பையில் கைவிட்டவுடனே அசையாப் பதுமைபோல அங்கேயே நின்றுவிட்டான்; "அடே! என் இரண்டு ரூபாய் எங்கே?" என்ற சொல் அவன் வாயிலிருந்து வெளிவந்தது.

பையன்கள் அவனைச் சுற்றிக் கூட்டமாகக் கூடி, பல கேள்விகள் கேட்டார்கள். ஹீராலாலும் அந்தக் கூட்டத்தில் இருந்தான்; "ரூபா

யாவது! எங்கிருந்து வந்ததுடா?'' என்று அவன் கேட்டான்.

“ரூபாய் எப்படி இருக்கும்? தெரியாதா உனக்கு! உன் அப்பனுடையதா என்ன? கேட்க வந்துவிட்டாயே!'' என்று ஹல்லீ எரிந்து விழுந்தான்.

“ஏனப்பா கோபம் உனக்கு? ஏழைப் பையனை உன்னிடம் ரூபாய் எப்படி வந்தது என்றுதான் கேட்டேன். இப்போதே நான் போய் ஜம்னு சித்தியிடம் சொல்லுகிறேன்'' என்று கூறி, ஹீரா அங்கிருந்து நடந்தான்.

பையன்கள் எல்லாரும் தேடினார்கள்; ரூபாய் கிடைக்கவில்லை. “இந்த ஹீரா ரொம்பப் பொல்லாதவன்; அவன்தான் எடுத்திருப்பான்'' என்றான் ஒரு பையன்.

ஜம்னு வயலிலிருந்து வரும்போது ஊர்க்கோடியிலேயே, ஹல்லீ ரூபாய் தொலைத்த செய்தி எட்டியது. அவள் அகலில் விளக்கு ஏற்றியபோது, வாசலில் ஹல்லீயின் காலடிச் சத்தம் கேட்டது. “யாரங்கே, ஹல்லீதானே? ரூபாய் தொலைந்து போச்சா?'' என்று அவள் மெல்லிய குரலில் கேட்டாள்.

இது கோபக் குரல் இல்லையே! இந்த அன்பு அவனை உருக்கியது. “அம்மா!'' என்றான்.

“இரண்டு ரூபாய் போனால் போகிறது. வாழ்க்கையில் நம்மை அறியாமல் எவ்வளவோ தொலைந்து போகிறது. ஆனந்தம் இதிலும் இருக்கிறது; ஆனந்தம் இதிலும் இருக்கிறது'' என்று அவள் சொன்னாள்.

6

“அன்று தோன்றியதுபோன்ற கெட்ட கனவு மறுபடி தோன்றவில்லையே?'' என்று அஜீத் ஜம்னுவைக் கேட்டான்.

“தோன்றவில்லை.''

“இது நல்லதுக்கு லட்சணமில்லை. கனவு பொய்யாக இருந்தால், அதே மாதிரியான மூன்று கனவுகள் ஒரு மாதத்துக்குள் மறுபடி தோன்றும். இல்லையானால் முதல் கனவு உண்மை.''

ஜம்னுவுக்கும் அந்தக் கனவில் சிறிது நம்பிக்கை இருந்தது. அவள் கவலைப்படுவதைக் கண்ட அஜீத், “இதற்காக நீ பயப்படாதே, ஜம்னு! குருவின் கிருபையால் கனவின் கெட்ட பலன் மாறிவிடும். இப்போது உன்னிடம் வேறு அவசர காரியமாக வந்திருக்கிறேன்'' என்றான்.

அதைக் கேட்கும் ஆவலோடு ஜம்னு பேசாமல் நின்றாள். அதற்குள் மாடத்தில் ஏதோ சத்தத்தைக் கேட்டு அவன் திடுக்கிட்டான். அவன் மாடத்தைக் கூர்ந்து பார்த்து, “அடே! இதில் நாகப் பாம்பு இருக்கிறதே!'' என்று கூறினான்.

ஜம்னு கலக்கத்தோடு, “அம்மாடி, இது எங்கிருந்து வந்தது? ஹல்லீ விளையாடும் மரச் சாமான் இந்த மாடத்தில் இருக்கிறதே. அவன் இதில் கை வைத்திருந்தால் என்ன ஆகியிருக்கும்!'' என்றாள்.

அஜீத் அந்தக் கருநாகத்தை அடிக்காமலே, சாமர்த்தியமாகப் பிடித்து, மண்பானையில் அடைத்து விட்டான். இந்தக் கலவரத்தில் அவன் ஏதோ அவசர காரியமாகத் தன்னிடம் வந்ததையே அவள் மறந்துவிட்டாள்.

7

மோதிலால் சௌத்ரீ நானூறு ரூபாயைவிட அதிகமாக அவள்

தனக்குக் கடன் கொடுக்கவேண்டும் என்று சொன்ன செய்தியைக் கேட்டு, ஜம்னு ஸ்தம்பித்துப் போனாள். "இவ்வளவு ரூபாய் எப்படி ஆச்சு? நான் வருஷந் தோறும் விடாமல் அடைக்கிறேனே?" என்றாள்.

"ரசீது வாங்கியிருக்கிறாயா?" என்று அஜீத் கேட்டான்.

"வாங்கியிருக்கிறேன்."

"யாரையாவது ரசீதைப் படிக்கச் சொல்லிக் கேட்டாயா?"

ஜம்னு வாயை மூடினாள். எவனிடமிருந்தாவது பணத்துக்கு ரசீது வாங்குவதற்கு அர்த்தம் அவனிடம் நம்பிக்கை இல்லை என்பதுதான். ரசீதை வாங்கிக்கொண்டு அதை மற்றவர்களைக் கொண்டு படிக்கச் செய்வது, ஒருவனை அடித்த பிறகு அவன்மேல் இரட்டைக் கறுக்குள்ள கத்தியைச் செலுத்துவது போலத் தோன்றியது அவளுக்கு. ஆனால் இந்தச் சமயத்தில் அதையெல்லாம் வெளியில் சொல்ல அவளால் முடியவில்லை.

அவள் சும்மா இருப்பதைக் கண்ட அஜீத், "ரசீதை எப்போதும் யார் மூலமாகவும் படித்துப் பார்க்கவில்லையென்றால், அதை வாங்குவதும் ஒன்றுதான்; வாங்காமல் இருப்பதும் ஒன்றுதான். தந்திரசாலிகள் இப்படித்தான் பெண்களை ஏமாற்றிவிடுகிறார்கள்!" என்றான்.

"நான் என்ன செய்வது? சௌத்ரீ என்னைக் கொள்ளையடிக்க விரும்புகிறார்"

"'ரூபாய் கொடுக்கமாட்டேன்; தாவா செய்துகொள்' என்று அவரிடம் சொல்லிவிடு."

"அது என்னால் முடியாது; நான் புதப் பத்திரம் எழுதிவிடுகிறேன்."

"புதப் பத்திரமா! அதனால் என்ன ஆகும் தெரியுமா? ஹல்லீயின் கழுத்தில் சதா காலத்துக்கும் சுருக்கிடுவது என்பதுதான் அதற்கு அர்த்தம். ஹல்லீயின் கழுத்துக் கயிறு சௌத்ரீயின் கையில் இருக்கும். அவன் பாவம், அடிவாங்கி வாங்கி மற்றவன் வயலில் மேய்ந்துவிட்டு வந்து, தன் பாலை மோதீலாலின் வீட்டுக்குப் போய்க் கறப்பான். கன்றின் பாலைக் கறக்கும் வித்தைகூட லேவாதேவிக்காரனுக்குத் தெரியும். நான் பெரிய மந்திரவாதிதான்; எவ்வளவு பெரிய பேய் பிசாசையும் ஒரு நொடியில் ஓட்டிவிடுவேன்; எந்த விஷத்தையும் இறக்குவேன். ஆனால் லேவாதேவிக்காரனின் கடிக்கு மருந்து என்னிடம் கிடையாது!"

"இந்தச் சூதெல்லாம் எனக்கு என்ன தெரியும்?"

"சௌத்ரீ தாவா செய்தால் நான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்கிறேன். இப்போது இருக்கும் முனிசிப் மிகவும் நல்லவர். என்னிடம் அவருக்கு அபிமானம் உண்டு. நீ கவலையில்லாமல் இரு, மோதிலால் நம்மிடமிருந்து ஒரு காசு வாங்கிக்கொண்டு போனால் பார்!"

ஜம்னு எழுந்து நின்றாள். அஜீத்தும் எழுந்து, "சரி, நான் பிறகு வந்து பேசுகிறேன்" என்றான்.

8

சாப்பிட்டுவிட்டு ஹல்லீ போன பிறகு ஜம்னுவுக்குச் சோம்பலாக இருந்தது. இடைவிடாமல் வேலை செய்தாலும், விழிப்பிலே துயில் போல ஆழ்ந்த வேதனையை அவள் தனக்குள் தரித்திருந்தாள். திடீரென்று சோம்பல் தோன்றவே, தன் உடல்நிலை சரியில்லையென்று அவள் தன்னைத்தானே திருப்திப் படுத்திக்கொள்ள விரும்பினாள்.

அவள் பேசாமல் ஓர் இருட்டறையில் போய்ப் படுத்துக்கொண்டாள்.

மாலை வேளையில் பசு கத்துவதைக் கேட்டு அவள் திடுக்கிட்டு எழுந்தாள்; உடனே வேலையில் முனைந்தாள். ஒரு கையில் பாலையும் மற்றொரு கையில் விளக்கையும் ஏந்தி அவள் சமையலறைக்குப் போனபோது, ரேழியில் ஹல்லீயின் புத்தகப் பையைக் கண்டு, 'அவன் இன்னும் வரவில்லையே! வெகு நேரமாச்சே?' என்று அவளுக்குக் கவனம் வந்தது. "எனக்குத் தேசம் பர்தேசமெல்லாம் சுற்றவேண்டுமென்று ஆசையாக இருக்கிறது" என்று அவன் காலையில் சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. 'இப்படி யோசிக்கும் பையன் பெரியவனானதும் வீட்டில் தங்குவானா? அவனும் என்னை விட்டுவிட்டால் நான் எப்படி வாழ்வேன்?' என்று அவள் சிந்தித்தாள். சற்று நேரம் கழித்தும் அவன் வராமல் போகவே, அவள் கவலைகொண்டு அவனைத் தேடப் புறப்பட்டாள்.

தெருக்கோடியில் வந்த விஜயன், "ஹீரா திருடிவிட்டு ஓடினான்; ஹல்லீ அவன்மேல் கல்லை எறிந்தான். ஆனால் அவனுக்குக் காயம் படவில்லை. பிறகு ஹல்லீ எங்கே போனானோ, தெரியாது" என்று தகவல் கொடுத்தான்.

"அடே, திரும்பி வாடா, குழந்தாய்! நான் உன்னை அடிக்க மாட்டேன். நீயும் என்னை விட்டுவிட்டுப் போவாயா?" என்று ஜம்னா உருக்கமாகக் கதறினாள்.

அவளும் அஜீத்தும் அக்கம் பக்கத்தார்களும் சிறுவர்களும் ராந்தலை எடுத்துக்கொண்டு எல்லா இடங்களிலும் தேடினார்கள். ஹீராலால்கூட, "எங்கே ஒளிந்திருந்தாலும் வந்துவிடடா, ஹல்லீ! எனக்குக் காயம் படவில்லை" என்று சொன்னான். ஆனால் ஹல்லீயை எங்கும் காணவில்லை.

ஜம்னா அன்றிரவை எப்படிக் கழித்தாளோ, அது அவளுடைய அந்தர்யாமிக்குத்தான் தெரியும்!

௭

அஜீத் அருகிலுள்ள ஸ்டேஷனுக்குப் போய்ப் பார்த்தான். ஹல்லீ எங்கோ ஓடிப் போய்விட்டான் என்பது இவனுடைய நம்பிக்கை. வெளியே போகும் பேச்சை ஹல்லீ பல தடவை சொல்லியிருக்கிறான். அஜீத் ஒரு தடவையாவது அவனைத் தடுத்துப் புத்தி சொல்லவில்லை. ஆகையால் அவன் ஓடிப்போன குற்றம் தன்னைச் சார்ந்ததாக அஜீத்துக்குத் தோன்றிற்று. அக்கம் பக்கத்து ஊர்களில் தேடப் போனவர்கள் சாயந்தரமே திரும்பி வந்துவிட்டார்கள். அஜீத் மட்டும் திரும்பவில்லை.

ஹல்லீக்காகப் பல நாள் இடைவிடாமல் அலைந்து திரிந்துவிட்டு, ஒரு நாள் காலையில் அஜீத் திரும்பி வந்தான். திரும்புவதற்கு முன்னமே அவனுக்கு நம்பிக்கை போய்விட்டது.

பையப் பைய நடந்து வந்து ஜம்னா சுவரில் சாய்ந்துகொண்டு நின்றாள். அஜீத் பார்த்தான்; அவள் முகத்தில் கருமை படர்ந்திருந்தது; கண்கள் ஆசையிழந்தவை போல் அசையாமல் இருந்தன.

"ஜம்னா, நீ கவலைப்படாதே. ஹல்லீயைத் தேடிப்பிடித்துச் சீக்கிரமே உன் முன்னால் நிறுத்தாவிட்டால் பார். காசியில் ஜோதிஷம் படித்து, திக்விஜயம் செய்த பண்டிதரிடம் ஆருடம் கேட்டேன்.

ஹல்லீயை அழைத்து வராமல் எனக்கு நிம்மதியே கிடையாது'' என்றான் அஜீத்.

"இப்போது எங்கே போய் வந்தாய்?'' என்று ஜம்னு மெலிந்த குரலில் கேட்டாள்.

அஜீத் பல ஊர்களின் பெயரைச் சொன்னபோது, "புத்தூர் வரையிலா!'' என்றாள் ஜம்னு.

"என்ன செய்வது? ஓடிப் போகும் பையன்கள், யாருக்கும் சுலபத்தில் கவனம் வராதபடி, இப்படித்தான் வெகு தூரத்திலுள்ள உறவினர்களை நினைத்துக்கொண்டு ஓடுவார்கள். இன்றைக்கு மறுபடி தெற்குப் பக்கம் போகிறேன்.''

அஜீத் எழுந்திருப்பதைக் கண்டு "இரு'' என்று சொல்லிவிட்டு, அவள் உள்ளே போனாள். சற்று நேரத்தில் திரும்பிவந்து அஜீத்தின் பக்கமாக ரூபாயை நீட்டினாள். அவன் வியப்புடன், "இது என்ன?'' என்றான்.

"காசிப் பண்டிதருக்குத் தட்சிணை.''

அவன் வாடிய முகத்துடன், "இது என்ன பிரமாதம்? நீ கொடுத்தாலென்ன, நான் கொடுத்தாலென்ன? இப்போது இருக்கட்டும்; பிறகு பார்த்துக்கொள்ளலாம்'' என்றான்.

ஜம்னு அப்போதும் கையை நீட்டியபடியே இருந்தாள். வருந்திய மனத்துடன் ரூபாயை அஜீத் வாங்கிக்கொள்ள வேண்டியதாயிற்று.

10

சலிப்பும் களைப்பும் அடைந்து அஜீத் கிராமத்துக்குத் திரும்பி வந்தவுடனே, ஹல்லீ திரும்பி வந்த செய்தி அவனுக்கு எட்டியது. ஹல்லீ பல பையன்களுக்கு நடுவில் கூடத்தில் உட்கார்ந்து, தன் பிரயாண விருத்தாந்தத்தைச் சொன்னான். "ஹீராலாவின் மேல் கல் எறிந்துவிட்டு நான் ஓடினேன். ஓரிடத்தில் நின்றபோது, நான் காட்டில் இருப்பதைக் கண்டேன். ஒரு குடும்பத்தார் அந்த வழியே ஜகதம்பிகையின் திருவிழாவுக்குப் போனார்கள். நானும் அவர்களோடு கலந்துகொண்டேன். ஆஹா! எவ்வளவு ஜோரான திருவிழா!......''

அஜீத்தைக் கண்டதும் பையன்கள் உற்சாகத்தோடு, "சித்தப்பா, வந்துவிட்டாயா?'' என்று கூவினார்கள்.

அஜீத் சிரித்துக்கொண்டே, ஹல்லீயைப் பார்த்து, "நான் ஓடிவிட்டாற்போலவும், என்னை நீ தேடிப் பிடித்து வந்தது போலவும் அல்லவா நீ பேசுகிறாய்?'' என்றான்.

ஹல்லீயோடு பிரியமாகப் பேசிய பின், அஜீத் சமையலறையில் போய் நின்றான். ஜம்னு எழுந்து வந்து குனிந்தாள்; அவனுடைய இரண்டு கால்களையும் தீண்டித் தன் கரங்களைச் சிரத்தில் குவித்தாள்.

அவனுக்குத் திடீரென்று சங்கோசம் உண்டாயிற்று. தன் கால்களைத் தீண்டிச் சென்ற அந்தப் பொருளை அவன் தன் தலைமேல் வைத்துக்கொள்ளக் கூடுமானால் எவ்வளவு நன்றாக இருக்கும்! இந்த உணர்ச்சி அவனுக்கு உண்டாயிற்று.

11

ஹல்லீ ஜகதம்பாவின் திருவிழாவைப் பார்த்ததுபோல் அவ்வளவு நன்றாகத் தான் அதைப் பார்க்கவில்லை என்பதை ஹீராலால் மற்றப் பையன்களுக்கு முன்னால் ஒப்புக்கொண்டான். அவன் அங்கே ராமலீலைக்காரர்களைப் பார்க்கவில்லை; ரங்கராட்டினங்களையும்

பார்க்கவில்லை; அந்தத் தடவை கூட்டமும் அவ்வளவு இல்லை. இந்த உண்மைப் பேச்சினால் அவனிடம் ஹல்லீக்கு அன்பு அதிகரித்தது.

ஒரு நாள் ஹல்லீயைப் பார்ப்பதற்காக ஹீராலால் அவன் வீட்டுக்கு வந்தான். ஹல்லீ எங்கோ விளையாடப் போயிருந்தான். வீட்டில் ஜம்னாவும் இல்லை. அப்போது அங்கே தபால்காரன் வந்தான். "ஜம்னா சித்திக்கு ஏதாவது கடிதம் இருக்கிறதா? அவள் வேலையாகப் போயிருக்கிறாள். இப்படிக் கொடு; நான் கொடுத்துவிடுகிறேன்" என்றான் ஹீராலால்.

"இதோ பார், எங்கும் தொலைக்காமல் இதை அவளிடமே கொடு" என்று சொல்லி, தபால்காரன் ஒரு கவரை அவனிடம் கொடுத்தான்.

கடிதம் எழுதியவனுடைய பெயர் பிருந்தாவனன் என்று இருப்பதைக் கண்டு, ஹீராலால் திடுக்கிட்டான். கடிதத்தை எடுத்துக்கொண்டு, அவன் ஏகாந்தமான இடத்துக்கு ஓடினான். அதைப் பிரித்துப் படித்தான். தூரத்திலுள்ள ஏதோ ஓர் ஆஸ்பத்திரியிலிருந்து ஜம்னாவுக்கு எழுதியிருந்தது:

"பல வருஷங்களுக்குப் பிறகு எழுதுகிறேன். என்னை மன்னித்துவிடு. என் மனம் அமைதியாக இல்லை. இந்தக் கடிதம் உனக்குக் கிடைக்குமோ கிடைக்காதோ, தெரியாது. நீ எங்கே இருக்கிறாயோ, குழந்தை எங்கே இருக்கிறானோ, எப்படி இருக்கிறாயோ, என்ன செய்கிறாயோ - இதெல்லாம் எனக்கு ஒன்றுமே தெரியாது. ஆயினும் உனக்கு இந்தக் கடிதம் எழுதுகிறேன். ஆண்டவனுடைய திருவுள்ளம் எப்படியோ!

"துவாரகைக்கு யாத்திரை செய்து திரும்பியபோது திடீரென்று காயலாகப் படுத்துவிட்டேன். இந்த ஆஸ்பத்திரியிலேயே எல்லாம் முடிந்துவிடும், யாருக்கும் ஒன்றும் தகவல்கூடக் கிடைக்காது என்று நினைத்தேன். ஆனால் ஆண்டவன் அருளால் எழுந்து நடக்க ஆரம்பித்திருக்கிறேன். கடிதம் கிடைத்தவுடனே பத்து ரூபாய் அனுப்ப முடியுமானால் அனுப்பு. ஒரு தடவை ஜன்மபூமியையும் உங்களெல்லாரையும் பார்க்க ஆவல். மீதியெல்லாம் அங்கே வந்து சொல்வேன். நீ எல்லாவற்றையும் கேட்டால், என்னை மன்னித்துவிடுவாய்."

கீழே ஆஸ்பத்திரி அறையின் இலக்கம் முதலிய விலாசம் கொடுத்திருந்தது.

இந்தக் கடிதத்தை எப்படி ஜம்னா சித்தியிடம் கொடுப்பது என்று ஹீராலால் யோசித்தான். அன்றே அவன் தன் தந்தையுடன் ஓர் உறவினரின் வீட்டுக்குப் போக வேண்டியிருந்தது. அவன் யாருக்கும் தெரியாமல் ஒரு வெள்ளைக் காகிதம் கொண்டுவந்து, ஜம்னா பிருந்தாவனனுக்கு எழுதிய பாவனையாக, அவசர அவசரமாக இப்படி எழுதினான்:

"ஹல்லீ இறந்துபோய் வெகு நாளாயிற்று. என் சம்பந்தப்பட்ட வரையில் நீயும் இறந்துவிட்டாய். நான் அஜீத்துடன் கூடித்தனம் வைத்திருக்கிறேன். இனி நீ இங்கே வரவேண்டிய அவசியமே இல்லை. பிச்சை எடுத்தால் ரூபாய் நிறையக் கிடைக்கும். நான் க்ஷேமமாக இருக்கிறேன். நீ க்ஷேமமாக இருக்க வேண்டுமென்று ஆண்டவனை வேண்டுகிறேன்."

கடிதத்தைத் தபால் பெட்டியில் போட்டுவிட்டு அவன் வீடு திரும்பிய

தும், வெளியில் செல்ல வண்டி தயாராகப் பூட்டியிருந்ததைக் கண்டான். எந்த நண்பனிடமாவது தன் வேலைத் திறமையைக் கூற வேண்டுமென்று அவன் மனம் புடைத்துக்கொண்டது; ஆனால் நேரமில்லை. தந்தையோடு அவன் புறப்பட வேண்டியதாயிற்று. பிருந் தாவனனுடைய கடிதம் அவன் சட்டைப் பையில் இருந்தது; அதை அவனுடைய தந்தை பார்த்து விட்டான்.

12

பல நாட்களாக அஜீத்தின் உதவிகளைப்பற்றி ஜம்னு யோசித் தாள். ஒரு நாள் சமயம் பார்த்து, "நான் உன்னோடு ஒரு விஷயம் பேச வேண்டும்" என்றாள்.

"நானும் அதைத்தான் சொல்ல எண்ணியிருந்தேன். மோதிலால் சௌத்ரீ இனி ஏதாவது செய்வான். நீ மனத்தைத் திடப்படுத்திக்கொண் டால் வேலை முடிந்துவிடும்" என்றான் அஜீத்.

அவன் எழுந்து நின்றான். "உட் காரு, நான் பேச வேண்டும்" என்றாள் ஜம்னு.

பேச வேண்டும், ஆனால் முடிய வில்லை. பேச்சுக்கு இடையே ஒரு பெரிய கல் அதன் பிரவாகத்தைத் தடுத்தது. அஜீத் உட்கார்ந்தான்.

"என் பேச்சை உதறித் தள்ள மாட்டாயே?" என்று ஜம்னு கேட் டாள்.

"தள்ளமாட்டேன். ஒருவேளை அந்த விஷயம் என் வசத்தில் இல்லாமலிருந்தால்?"

"அப்படிப்பட்டதல்ல. எனக்கு நம்பிக்கை உண்டு."

"அப்படியானால் உறுதி கொடுக் கிறேன். நீ எது சொன்னாலும் அதற்கு நான் பின்வாங்க மாட் டேன். ஆனால் இன்று நீ ஒன்றும் சொல்லாதே. என் மனத்தைத் திடப்படுத்திக் கொள்ள விடு."

"பயப்படாதே! நான் உன்னை ஏமாற்றமாட்டேன்."

"இன்று இந்தப் பேச்சு வேண் டாம். ஏனோ எனக்குப் பயமாக இருக்கிறது! எனக்கு என்மேல் நம்பிக்கை இல்லை."

13

"ஹல்லீ, சற்று உன் சித்தப் பாவை அழைத்து வா!" என்றாள் ஜம்னு.

"அஜீத் சித்தப்பாவைத்தானே சொல்கிறாய்? இப்போது எனக்குக் கணக்குப் போட வேண்டும். போட்டு எடுத்துப் போகாவிட்டால் வாத்தியார் அடிப்பார்."

"ஒரு மணி நேரமாய் ஆர்ப்பாட் டம் செய்கிறாயே; போகப் போகிறாயா இல்லையா?"

"அப்பாவின் கடிதம் வரவில்லை என்று நீதான் சொன்னாயே?" என்று, சம்பந்தமில்லாத கேள் வியை அவன் கேட்டான்.

"என்னிடம் வரவில்லையடா; வந்தால் உனக்குக் காட்டமாட் டேனா? வேறு எங்கோ வந்திருப்ப தாகக் கேள்விப்பட்டேன்."

"யாரிடம் வந்திருக்கிறது? வந்தால் என்னிடந்தானே வரும்?"

"ஹீராலாலை நீ பள்ளிக்கூடத்தில் பார்ப்பதில்லையா?"

"அவன் வெகு நாளாகப் படிக்க வருவதில்லை. தானும் படிப்ப தில்லை; பிறரையும் படிக்க விடுவ தில்லை. எப்போதும் வம்பளப்புத் தான்."

"அவன் என்னிடம் வந்தால் அவனைக் கேட்கலாம்."

"தன் தகப்பன் பேச்சையே அவன் கேட்பதில்லையே; உன் பேச் சைத்தானா கேட்கப்போகிறான்?

அஜீத் சித்தப்பாவிடம் கடிதம் வந்திருப்பதாகவும், அவர் அதை மறைத்துவிட்டதாகவும் விஜயன் சொல்லுகிறான்.''

''இல்லை, அவரிடம் வரவில்லை. நீ அவனைக் கூப்பிட்டு வா'' என்றாள் ஜம்னு. ஹல்லீ புறப்பட்டுப் போனான்.

கணவன் நோயுற்ற செய்தி எங்கிருந்தோ வந்திருப்பதை ஜம்னு கேள்விப்பட்டாள். நோயுற்றசெய்தியாக இருந்தும், அதைக் கேட்டு ஒரு க்ஷணம் அவள் உள்ளத்தில் ஆனந்தம் பாய்ந்தது. 'நோயாளியானாலும், உயிரோடு இருக்கிறார்!' உடனே அவள் கலங்கினாள். 'எந்த நிலையில் கிடக்கிறாரோ, அவருக்குஎன்ன கஷ்டமோ? யாருக்குத் தெரியும்? மருந்து கொடுக்கவோ, தண்ணீர் கொடுக்கவோ, விசிறவோ அங்கேயாராவது இருக்கிறார்களோ இல்லையோ?' எத்தனையோ காலமாக, அவள் ஏதாவது செய்தியைக் கேட்கவேண்டுமென்று இரு காதுகளையும் தீட்டிவைத்திருக்கிறாள்; இரு கண்களையும் கணவன் வரும் பாதையில் வைத்து உட்கார்ந்திருக்கிறாள். பகலும் இரவும் வந்து போயின. வாரம், பட்சம், மாதம், வருஷம் இப்படி எத்தனையோ வருஷங்கள் சுழன்றன. ஆனால் அவள் துயிலிலும் விழிப்பிலும் இன்பத்திலும் துன்பத்திலும் தன் நம்பிக்கையைமட்டும் இழக்கவில்லை. ஒரு நம்பிக்கை அவள் உள்ளத்தில் விழித்திருந்தது. அதன் மேற்பரப்பில் சாம்பல் தென்பட்டாலும், இன்று திடீரென்று அதன்மேல் கை பட்டவுடனே, அந்தச் சாம்பலிலும் சூடு குறைவாக இல்லை என்பது தெரிந்தது. அதனுள்ளே இருந்த முக்கியப் பொருள் பின்னும் பிரகாசமாக ஒளி வீசியது.

அவளுடைய கணவனிடமிருந்து உண்மையான செய்தி வந்தது; வெகு சமீபத்தில் வந்துவிட்டது; அவள் தன் கண்ணால் பார்க்கும்படி அவ்வளவு அருகில் வந்தது; ஆனால் செய்தியைக் கண்ணால் பார்க்க முடியாதே! அது, காதைச் சார்ந்த பொருள்! அவள் காதினால் அதை ஏன் கேட்க இயலவில்லை? இத்தனை பெரிய தண்டனை நேரும்படியாக அவள் ஒன்றும் செய்துவிடவில்லை. ஏதோ சிறிது நடந்துபோனதற்கும் அவள் உள்ளம் அச்சமடைந்தது.

இப்படியெல்லாம் நடப்பானேன்? தன் கிரகவரிசை மாறியதும் கணவன் நேரே தன்னிடம் வந்து, ''என்ன, சௌக்கியமாக இருக்கிறாயா?'' என்று, தூக்கத்திலிருந்து எழுப்புவான்; இதுதான் நடக்கும், இதற்கு மாறாக வேறு ஒன்றுமே நடக்காது என்று அவள் நம்பியிருந்தாள். 'இன்று இப்படி நடந்துவிட்டதே! இன்று அவருக்கு இந்த ஊரில் என்னையும்விட அதிகமாக ஒருவன் சொந்தமாக இருக்கிறானே! அவர் இந்த ஊரில் என்னையும்விட அதிகமாக மற்றொருவனைத் தன் துன்பத்துக்கும் சங்கடத்துக்கும் உடந்தையாகக் கொள்ளும்படி நான் அவ்வளவு நம்பிக்கைத் துரோகியா? ஆண்டவனே, என் குற்றத்துக்காக மற்றவருக்குத் துன்பம் தராதே! இந்த வேளையில் அவர் என்ன ஆபத்தில் இருக்கிறாரோ?' என்று அவள் மனம் கூவியது. அவள் கண்களிலிருந்து அணையை உடைத்துக்கொண்டு கண்ணீர் வெள்ளம் பெருகியது.

எவ்வளவு நேரம் கழிந்தது என்று அவளுக்கே தெரியாது. ஹல்லீ வந்தது அவளைத் திடுக்கிடச் செய்தது. அஜீத் சித்தப்பா எங்கோ அவசர வேலையாகப் போவதாகவும்,

பிறகு வருவதாய்ச் சொன்னதாக வும் அவன் சொன்னான்.

14

எங்கே போவது, என்ன செய்வது என்று ஜம்னாவுக்குப் புரியவில்லை. எங்கும் சூனியமே சூழ்ந்திருப்பதாக அவளுக்குத் தோன்றியது. கணவன் உயிரோடு இருக்கிறான் என்ற நம்பிக்கை, முன்பு அவளுக்கு இருந்தது. ஆனால் முன்பு அது பிரத்தியட்சமின்றி இருந்தது; நிரூபிக்கப்படாமல் இருந்தது—பிரத்தியட்சமில்லாத நிரூபிக்கப்படாத கடவுளைப்போல. இந்த மாதிரியான கடவுளை யாரும் அடைய முடியாது. ஆனால் எந்தச் சமயத்திலும் அவர் தொலைவில் இல்லை. இன்று அந்த நம்பிக்கை நிரூபணமாகிவிட்டது; பிரத்தியட்சமாகிவிட்டது. அதைப் பெற அவள் எங்கே போவது, என்ன செய்வது? இன்று அது எல்லா இடங்களிலும் இல்லை. அதற்கு ஒரு குறித்த இடம் இருக்கிறது; குறித்த உருவம் இருக்கிறது. இனிமேல் எந்தச் சங்கேதமும் பயன்படாது. இனி அதை ஒரு குறித்த மையத்தில்தான் அடைய வேண்டும்.

முற்றத்தில் அவள் எங்கோ போனவள், திடீரென்று தயங்கி நின்றாள். தன் சிந்தனையில் ஆழ்ந்து அவள் சிறிது நேரம் நின்று, பிறகு நடந்தாள். 'நடக்கிறோமா? நிற்கிறோமா?' என்ற உணர்ச்சியே அவளுக்கு இல்லை. அந்த நடவாமையும் நடைக்குச் சமம்; இந்த நடையும் நடவாமைக்குச் சமம்!

ஹல்லீ ஒரு புறத்திலிருந்து வந்து அவள் காலைச் சுற்றிக் கொண்டான்; முகத்தை உயரத் தூக்கி, "அம்மா, உனக்கு ஏன் இவ்வளவு வருத்தம்? எனக்குச் சொல் அம்மா, நீ ஏன் இவ்வளவு வருத்தப்படுகிறாய்?'' என்றான்.

ஜம்னா அவனை அணைத்துக் கொண்டு அழுது விட்டாள். இதற்கு முன்பு அவள் ஹல்லீயின் முன்னால் அழுததில்லை; ஆனால் அவள் அப்போது இருந்த நிலைமை அழுவதைவிடச் சீர்கேடாக இருந்தது.

"அழாமல் எப்படி இருப்பேன், கண்ணே! என் மனம் என்னவோ செய்கிறது. என்னை அழ விட்டுவிடு; தடுக்காதே!''

தானும் அழுதுகொண்டே, ஹல்லீ தாயின் கண்ணீரைத் துடைத்தான். தாயின் கண்ணீரை மகன் துடைக்கும்படியான நிலை அது. அவன் கண்ணீரைத் துடைத்தான்; ஆனால் அது முன்னிலும் அதிகமாய்ப் பெருகியது.

"அம்மா, நீ அழாதே! 'பகவான் எது செய்தாலும், அது கெடுதலாக இராது' என்று நீதானே எனக்குச் சொல்வது வழக்கம்?'' என்று ஹல்லீ ஆறுதல் சொன்னான்.

இது மட்டுமா, இன்னும் எத்தனையோ உபதேச மொழிகளை ஜம்னா அவனுக்குச் சொல்லியிருக்கிறாள். ஆனால் இன்று எந்த மாதிரியான கலக்கம் அவள் மனத்தில் தோன்றியதோ, அதன் கீழ் அந்தப் பேச்சுக்களெல்லாம் உணர்வற்றவைபோல அமிழ்ந்து விட்டன. அவள் தன் முகத்தைத் தானே நேரில் பார்த்துக்கொள்ள முடியாததுபோல், தன் பேச்சையும் இன்று தானே கேட்க முடியவில்லை.

"நான் பள்ளிக்கூடம் போகவில்லை; உன்னோடு இங்கேயே இருப்பேன். என் மனம் இன்று சரியாக இல்லை. சாயந்தரம் நீ எனக்காகப் புதிதாகச் சமைக்க

வேண்டாம். உன் மனமும் சரியாக இல்லை. எனக்குப் பசி எடுக்காது!'' என்றான் ஹல்லீ.

அவன் உடம்பு சூடாக இருப்பதை ஜம்னு உணர்ந்தாள்; பயந்து கொண்டே, "அடே, உனக்கு ஜுரமாக இருக்கிறதே!'' என்றாள்.

"ஜுரமில்லை. நீ வருத்தப்படுவதைக் கண்டு என் மனம் என்னவோ செய்தது. அதனால்தான் அப்படித் தோன்றுகிறது.''

மாரிகாலத்துக் காரிருளின் குமைச்சலைப்போல, இந்தப் புதிய கவலை வந்து ஜம்னுவைக் கலக்கியது. "ஜுரந்தான். காற்றில் அலையாதே. கட்டிலைப் போடுகிறேன்; படுத்துக்கொள்'' என்றாள்.

"நீதான் அழுகிறாயே; அதனால் தான் ஜுரம் அதிகமாகிறது.''

அவன் கட்டிலில் படுத்து, அம்மாவைப் பக்கத்தில் உட்கார வைத்துக்கொண்டான். சாதாரண நிலையில் அவன் படுக்கவே மாட்டான். இப்போது அவன் அசதியோடு படுத்தான்.

இரண்டு மூன்று மணி நேரம் கழித்து, ஜம்னு முற்றத்தில் தனியே உட்கார்ந்திருந்தாள். எது செய்யவும் அவளுக்கு மனமில்லை. ஹல்லீக்கு ஜுரம் ஒன்றுமில்லை. அவன் வெளியே போயிருந்தான்.

15

"அண்ணி, இன்று நீ எனக்கு மிட்டாய் தரவேண்டும். உனக்கு ஒரு சந்தோஷச் செய்தி சொல்லுகிறேன்!''

அஜீத்தின் முகத்தில் உல்லாசம் தாண்டவமாடியது. ஜம்னுவுக்கு எல்லாவற்றிலும் பெரிய விருப்பம் எதுவோ அதுதான் கவனத்துக்கு வந்தது. ஆனால் உள்ளூற என்னதான் சந்தேகம் இருந்ததோ, அவளுக்குத் தேறுதல் மட்டும் உண்டாகவில்லை. வாடிய குரலில், "பிறருக்கு மிட்டாய் கொடுக்கும் படி அவ்வளவு பாக்கியம் செய்தவளா நான்?'' என்றாள்.

"சரி, சொல்லியே விடுகிறேன்.- டவுனில் அண்ணு பிருந்தாவன் வந்து சேர்ந்துவிட்டார். சாயந்தர வண்டியில் இங்கே வருவார்.''

"வந்துவிட்டாரா!'' -ஜம்னு இரு கைகளையும் மேலே குவித்து, அங்கே யாரோ இருப்பதாக நினைத்துத் தரையில் தலை கவிழ்ந்தாள். அவள் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்து ஓடுவதை அஜீத் கண்டான்.

அவனது உள்ளமும் பொங்கியது; "அண்ணி, ஆயுசு முழுதும் துன்பத்தில் அழுதுகொண்டே இருந்தால்-? இன்று இன்பத்தில் மகிழ வேண்டிய நேரத்திலும் அழுகிறாயே!'' என்றான்.

சாயந்தரம் வண்டி வருகிறது. அவ்வளவு நேரம் வரையில் எதிர்பார்த்திருப்பது மிகவும் கஷ்டம். எதிர்பார்த்து எதிர்பார்த்து வருஷக் கணக்கான காலத்தை அவள் கழித்து விட்டாள். இப்போது இந்தச் சிலமணி நேரம் அவளுக்கு நீடித்ததாகத் தோன்றியது. ஹல்லீ சில பையன்களோடு அப்போதே ஸ்டேஷனுக்குப் போய்விட்டான். வீட்டில் அவள் தனியாக இருக்கிறாள். இந்தத் தனிமையில் எத்தனையோ விஷயங்கள் அவள் மனத்தில் தோன்றின. பல நாளாக அவள் மனம் அமைதியற்று இருந்தது. வீட்டு வாசலைக்கூட அவள் மெழுகவில்லை. எந்த நேரத்தில் அவர் திடீரென்று வருவாரோ என்று அவள் வருஷக்கணக்காக இடையின்றி விழித்திருந்தாள். இன்று அவர் வரும் நாள் வந்தும் வாசலை மெழுகிக் கோலமிடவில்லை.

இப்போதுகூட அதற்கு நேரம் இருக்கிறது; ஆனால் அவளுக்கு அது பிடிக்கவில்லை. எல்லாம் இருக்கிறபடி இருக்கட்டும். சிங்காரக் கோலம் செய்துகொண்டு அவரை மயக்க வேண்டியதில்லை' என்று அவள் கருதினாள்.

அவளுக்குத் தன் மாமனாரின் ஞாபகம் வந்தது: நடந்ததெல்லாம் அவருடைய ஆசியினால்தான். 'இன்னும் இவர் வரவில்லை. அதனால் என்ன? இந்த வேளைக்கு நன்றாக இருக்கிறார். வந்த ஆபத்து நீங்கி விட்டது. என் மாமனார் தெய்வம். அவர் சொர்க்கத்திலிருந்து என் தலைமேல் தமது கை நிழல் பட மறுபடி ஆசி கூறுவார்' என்று நினைத்தாள். அவளுக்கு இப்போது அழுதுவிட வேண்டுமென்று இருந்தது. இந்தச் சமயத்தில் பிறர் வந்து தன் தனிமையின்பத்துக்குத் தடை செய்வதை அவள் விரும்பமாட்டாள்.

வண்டி வந்தது; போய் விட்டது. அதிலிருந்து இறங்கிய இரண்டொரு பேர்களில் பிருந்தாவனன் இல்லை. இதனால் ஹல்லீக்குத் துன்பத்தைக் காட்டிலும் வெட்கம் அதிகம் உண்டாயிற்று. 'இத்தனை பையன்களுக்குத் தம் பட்டமடித்து நான் ஏன் இவர்களை அழைத்து வந்திருக்க வேண்டும்? பேசாமல் தனியாக வந்திருந்தால் என்ன கெட்டுப் போயிருக்கும்?' என்று அவன் எண்ணினான்.

"அவரிடம் ரெயில் ஏறி வரும்படியாக அவ்வளவு பணம் ஏது? நடந்து வருவார்" என்றான் ஒரு பையன்.

ஹல்லீக்குச் சற்று ஆறுதல் கிடைத்தது. வேறு ஒன்றும் இல்லாதபோது, பல இடங்களில் கிழிந்துபோன கந்தைத் துணியினாலாவது மானத்தை மறைக்கத்தான் வேண்டியிருக்கிறது.

அஜீத்தின் மனத்தில் ஒரு சந்தேகம் எழுந்தது. நேராக டவுனுக்குப் புறப்பட்டான். மோதிலால் சௌத்ரீ பல நாளாக வெளியில் இருந்த செய்தி அவனுக்குத் தெரியும். இரண்டு நாளைக்கு முன் அவனை டவுனில் சந்தித்து ஏதோ பேச முயன்றபோது, "இப்போது நான் அவசரமாகப் போகவேண்டும், பிறகு பார்க்கிறேன்" என்று விறைப்பாகப் பதில் சொன்னான்.

மோதிலாலின் வழக்குகளை வழக்கமாக நடத்தும் வக்கீலின் வீட்டுக்கு அஜீத் போனான். "என்ன சமாசாரம்? ஏதாவது வழக்குக் கொண்டு வந்திருக்கிறாயா?" என்று குமாஸ்தா கேட்டான்.

"வழக்கு ஒன்றுமில்லை; மோதிலால் சௌத்ரீயைப் பார்க்க வந்தேன்" என்றான் அஜீத்.

"இங்கே அவர் இல்லை."

"இங்கேதானே வந்தார்; எங்கே போனார்?"

"எங்கே போனாரா? எல்லாருக்கும் ஆஜர் எழுதுவதுதான் எனக்கு வேலையா? போ, என்னைத் தொந்தரவு செய்யாதே!"

"என் ஐயா, கோபித்துக்கொள்கிறீர்? அமைதியாகப் பதில் சொல்லுங்களேன்!" என்றார் ஒரு கட்சிக்காரர்.

"காலங்காலையில் இந்தப் பெரியவர் அந்தப் பிரம்மஹத்தியைத் தேடி வந்துவிட்டார்! இன்று எனக்குச் சாப்பாடு கிடைக்குமோ, கிடைக்காதோ, ஆண்டவனுக்குத்தான் தெரியும்! நேற்று அவனுடைய ஒரு பத்திரத்தை ரிஜிஸ்தர் செய்ய நாள் முழுவதையும் வீணாக்கியாச்சு. குமாஸ்தாவிடம் விவகாரம் வந்தபோது, 'இப்போது என்

கையில் ஒன்றுமில்லை; அப்புறம் வருகிறேன்' என்று சொல்லிவிட்டான். எப்போதுமே அவன் கணக்கெல்லாம் கடன் பாபத்துத்தான். நான் இல்லாமலிருந்தால் நேற்று வேலை கெட்டே போயிருக்கும். ரிஜிஸ்திரார் ஆயிரம் சாக்குப் போக்குச் சொன்னான். பெரிய தொந்தரவாகப் போச்சு..."

"என்ன வழக்கு அது?"

"வழக்கு வேறென்ன? பிருந்தாவனன் என்பவன் மோதிலாலிடம் கடன் வாங்கினான். அவன் எங்கோ போய், பல வருஷங்கள் ஆகிவிட்டன. அவன் வீட்டுக்காரிக்கு மோதிலால் நோட்டீஸ் கொடுத்தான். இந்த நாளில் நோட்டீஸை யார் கேட்கிறார்கள்? அவள் மற்றொருவனோடு குடித்தனம் வைத்துக்கொண்டாள்; அவனிடம் பெற்ற பத்து வயதுப் பிள்ளை ஒருவன் அவளுக்கு இருக்கிறான். அந்தப் பெண்ணின் சாமர்த்தியத்தைப் பாருங்கள்: மற்றொருவனோடு குடித்தனம் வைத்துக்கொண்டதுமல்லாமல், முதல் வீட்டுக்காரனுடைய கிணற்றையும் வயலையும் தானே ஆக்கிரமித்து அநுபவித்து வந்தாள். சட்டந்தான் நாளுக்கு நாள் மாறுகிறதே! சட்டப்படி எழுத்து மூலத்தில் என்ன குறை இருந்ததோ என்னவோ, மோதிலால் அவளை ஒன்றும் செய்ய முடியவில்லை. இத்தனை நாளைக்குப் பிறகு சமீபத்தில்தான் பிருந்தாவனன் எங்கோ உயிரோடு இருப்பதாகத் தகவல் கிடைத்தது. மோதிலால் பறந்தோடி அவனைப் போய்ப் பிடித்தான். அவன் ரூபாய்க்கு அங்கேயே சீட்டு எழுதிக் கொடுத்தான். சீட்டை என்ன, நாக்கில் வழித்துக்கொள்வதா? அவனை எப்படியோ சமாதானப்படுத்தி மோதிலால் இங்கே இழுத்து வந்தான். நேற்றுத்தான் நிலம் வகையராக்களுக்குக் கிரயப் பத்திரம் எழுதி ரிஜிஸ்தரும் செய்தாச்சு. பெண்டாட்டியின் பிரதாபத்தைக் கேட்டதும் அவனுக்கு மனம் வெறுத்துப் போச்சு. இனி அவன் இந்த ஊர்ப்பக்கமே நாட மட்டான்."

"எல்லாம் பொய்!" என்று அஜீத் கூவினான்.

"பொய்யாவது! நேற்று இங்கே வக்கீலின் முன்னிலையில்தான் பேச்சு நடந்தது."

"வக்கீல் என்ன, கடவுளா, அவரிடம் பொய் செல்லாது என்பதற்கு? நான்தான் அஜீத். அந்தப் பெண் யாருடனும் குடித்தனம் வைத்துக் கொள்ளவில்லை. அவளுக்கு மிகப் பெரிய அநியாயம் இழைக்கப்பட்டிருக்கிறது."

"அநியாயமாக இருந்தால் கோர்ட்டில் போய்ப் பிராது கொடு. இது வக்கீலின் அறை. இங்கே அமைதியாகப் பேசவேண்டும்."

"இந்தப் பிள்ளை பிருந்தாவனனுக்குப் பிறந்தவன்தான். பெரிய சூழ்ச்சி நடந்திருக்கிறது. நான் வக்கீலிடம் பேசவேண்டும்."

"இது சரியான பாயிண்ட். இதை நீ நிரூபித்தால் கோர்ட்டில் வழக்கு நடந்து, வயலும் கிணறும் உன் கைக்கே வந்து விடலாம். ஆனால் எங்கள் வக்கீல் இந்த வழக்கை எடுத்துக்கொள்ள முடியாது. அவர் எதிர்த்தரப்பு வக்கீல்."

அஜீத் கோர்ட்டுக்குப் போய், பிருந்தாவனன் உண்மையாகவே நிலத்துக்கும் கிணற்றுக்கும் கிரயப் பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்து கொடுத்து எங்கோ போய்விட்ட செய்தியை அறிந்துகொண்டான்.

16

இரண்டொரு நாளில் எப்போதாவது அமீனா வந்து ஜம்னாவின் வயலையும் கிணற்றையும் ஜப்தி செய்துவிட்டுப் போவான் என்ற தகவல் கிடைத்தது.

ஜம்னாவுக்கு இந்தச் செய்தியில் ஒரு மகத்துவமும் தோன்றவில்லை. ஹல்லீக்கு ஆறு ஏழு லங்கணங்கள் ஆகிவிட்டன. அவள் இரவும் பகலும் விழித்துச் சுசுருஷை செய்தாள். கணவன் வந்து திரும்பிப் போன பிறகு, பையனுக்குக் கடுமையான ஜுரம் வந்தது. ஆபத்துக்கு மேல்தான் ஆபத்து வரும். ஒரு ரேகையின் எதிரே இன்னொரு ரேகை இராவிட்டால் முதல் ரேகை மங்குவதில்லை. ஜம்னாவின் முதல் துன்பரேகை மங்கியதோ இல்லையோ, தெரியாது. இப்போதெல்லாம் அவளுடைய கவனம் முழுவதும் இரண்டாவது ரேகையிலேயே குவிந்துவிட்டது.

ஹல்லீயின் ஜுரம் இறங்கியது. பத்தியமும் கொடுத்தாயிற்று. ஆனால் அவனை அதிகமாக வெளியே சுற்ற விடுவதில்லை.

மாலையில் ஜம்னா ஏதோ வேலையாக ஊருக்குள் போனபோது திடீரென்று வயல்பக்கமாகச் சென்றாள். அடக்க முடியாத ஏதோ ஓர் ஆவல் அவளை அந்தப் பக்கமாக உந்தியது.

அவள் இங்கும் அங்கும் சுற்றினாள். இன்ப துன்ப நினைவுகள் பல, அவள் மனத்தைக் கிளறின. அவளுக்குக் களைப்பாக இருந்தது. மரத்தடியில் சாய்ந்து உட்கார்ந்தாள். இருட்டிவிட்டது. ஆனால் காலத்தையும் இடத்தையும் பற்றிய அறிவு அவளுக்கு இல்லை.

"அம்மா!".

ஜம்னா திடுக்கிட்டாள். பலவீனத்தில் அவன் இவ்வளவு தூரம் எப்படி வந்தான்? அவள் இரு கைகளாலும் அவனை அணைத்து, "இருட்டில் உனக்குப் பயமாக இல்லையா? உனக்கு எப்படித் தெரிந்தது, நான் இங்கே இருப்பது?" என்றாள்.

"நீ இங்கேதான் இருப்பாய் என்று எனக்குத் தெரியும். எனக்கும் மனசு பிடிக்கவில்லை; அதனால்தான் புறப்பட்டு வந்தேன்."

இருட்டிலுங்கூட, மகனின் முகத்திலுள்ள வேதனையை அவள் அறிந்துகொண்டாள். "என்ன யோசனையடா செய்கிறாய்?" என்றாள்.

"நான் இங்கே 'அப்பா' என்று உயிரை விடுகிறேன். அவர் கடைசியில் இவ்வளவு கெட்டுப் போனாரே! பொய்யையும் புளுகையும் கேட்டுக்கொண்டு உனக்கு வீணாக இத்தனை பெரிய துன்பம் கொடுத்துவிட்டாரே!"

ஜம்னா பேச்சற்று உட்கார்ந்தாள். அவளுடைய மனத்துயரம் எப்படி மகனிடம் போய்ச் சேர்ந்துவிட்டது?

"என் பேச்சைக் கேட்பாயா, அம்மா?"

"என்னடா, சிறுபிள்ளைத்தனமாய்ப் பேசுகிறாய்?"

சிறுபிள்ளைத்தனமான பேச்சு! ஹல்லீ மட்டுமா, அவளுந்தானே குழந்தையின் இந்தப் பேச்சைப் போல ஏதோ ஒன்றைச் சிந்தித்தாள்! எல்லாம் பெரிய மனிதர்களுங்கூடத்தான் தம்மை அறிவாளிகளாக நினைத்துக்கொண்டு, குழந்தைகளைப் போலப் பல வேலைகள் செய்கிறார்கள்.

ஜம்னாவின் உள்ளத்தில், விளக்கொளியைப் போல், ஏதோ ஒன்று

ஒளிர்ந்து மறைந்தது. ஒரு க்ஷணத்தில் அந்த ஒளியின் பேச்சு, அவள் உள்ளத்தில் எதையோ கூறிச் சென்றது. அந்தப் பேச்சு அவளுக்கு முன் பின் பழக்கமில்லை; ஆயினும் அதன் குறிப்பை அறிய அவளுக்கு நேரம் பிடிக்கவில்லை.

அவள் எழுந்து நின்று, "இப்படியெல்லாம் பேசாதே, ஹல்லீ! அஜீத்தின் வீட்டுக்குப் போனாலும் உன் தந்தைதான் உனக்குத் தந்தையாக இருப்பார். இந்த விஷயத்தை யாரும் மாற்ற முடியாது. பொறுத்துக் கொள். ஏன் பலவீனப்படுகிறாய்? எவ்வளவு அதிகமாய்ப் பொறுப்பாயோ, அந்த அளவுக்கு நீ பெரியவனாவாய்" என்றாள்.

ஹல்லீயின் கையைப் பிடித்துக் கொண்டு அவள் நடந்து சென்றாள். ஆகாயத்தில் மேகங்கள் சூழ்ந்தன நாலு புறமும் ஒரே இருள்! எங்கு ஒன்றும் புலப்படவில்லை. ஆயினு மகனின் கையைத் தாங்கி அவ நடந்தாள். இன்று மட்டுந்தா அவள் போகிறாள் என்பதில்லை அந்தப் பண்டைக்காலத்துப் பெண் யுகயுகாந்தரத்து இருளில், அதை துச்சமாகக் கருதி, வெகு காலமா இப்படியேதான் நடக்கிறாள்; து பமும் விபத்துமான இந்த இரு வழியை இப்படித்தான் காலா மிதித்துக்கொண்டு செல்கிறாள் அவளுக்கு எந்த விதமான அச்சமு இல்லை; ஒரு கவலையும் இல்லை.

கண்ணுக்கேற்ற காட்சி

ஓர் ஆஸ்பத்திரியில் அநேக நோயாளிகள் நகரக்கூடச் சக்தி இல்லாமல் படுத்த படுக்கையாகக் கிடந்தார்கள். வெளியே என்ன நடக்கிறது என்று பார்க்க அவர்களுக்கு ஆவல். ஆனால் ஜன்னல்கள் அதிக உயரத்தில் இருக்கவே அது முடியவில்லை. ஒரு நோயாளியின் தலைமாட்டண்டை மட்டும் சிறிய துவாரம் ஒன்று இருந்தது. அவன் மற்றவர்களின் மனச் சோர்வை நீக்க எண்ணி, அந்த ஜன்னல் வழியாக வெளியே பார்த்து, "அதோ தோட்டத்தில் சிலபேர் கொத்திக்கொண்டிருக்கிறார்கள். குழந்தைகள் பள்ளிக்கூடம் போகிறார்கள்" என்றெல்லாம் சொல்லுவான். இதைக் கேட்பதில் மற்றவர்களுக்கு ஒரு திருப்தி.

ஆனாலும் அவனுக்கு அடுத்த படுக்கையில் கிடந்த நோயாளி மட்டும், "அந்த இடம் நமக்குக் கிடைக்காதா?" என்று ஏங்குவான்.

ஒரு நாள் இரவு துவாரத்தண்டை இருந்த நோயாளி பலவீனமாக, "தண்ணீர்! தண்ணீர்!" என்றான். இது தன் காதில் விழுந்தும், பக்கத்து ஆசாமி, 'அவன் செத்துத்தான் போகட்டுமே. அந்த இடமாவது நமக்குக் கிடைக்கும்' என்று யாரையும் கூப்பிடாமல் சும்மா இருந்துவிட்டான். பிறகு அந்த நோயாளி இறந்துவிடவே, இவனை அந்த இடத்துக்கு மாற்றினார்கள். உடனே இவன் ஆவலோடு துவாரத்தின் வழியாகப் பார்த்தான். அங்கே தெரிந்தது ஒரு குட்டிச் சுவர்தான்! —ஜான் டி. பாங்க்ஸ்

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS 4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.